வாக்கி வரு
ரு வண்
வாழ்.

1959 ஜூலை 4ல்
வெளியீடு

2618

அசோகா பிக்சர்ஸ்

பெண்குலத்தின் பொன்விளக்கு

டைரக்ஷன் B. விட்டல ஆச்சாரியா.

ஜூலை 4ம் முதல்
மெஜஸ்டிக்
பிக்சர்ஸ்
நாட்டுக்கொரு
நல்லவள்
டைரக்ஷன்:
K. தசரதராமையா
தயாரிப்பு:
R. சுப்பையா
Elegant

89692

JL
M281.N43P
N59:17.11

வாக்கி வரு
ரு வண்
வாழ்க்
பேசும் படம்

படம் 17

காட்சி 11

★ ஜூலை 1959 ★

பொருளடக்கம் பக்கம்

1. விபத்தை நான் எதிர்பார்த்தேன்-எம்.ஜி.ஆர். 4
2. செய்திச் சுருள் ... 7
3. ஸ்டூடியோ விஜயம் ... 12
4. ஜமுனா ... 18
5. 'மீண்ட சொர்க்கம்' படத்தில் பத்மினி ... 19
6. ஆடை அலங்காரம் (கமலா லக்ஷ்மண்) 20
7. முஸ்தபா (வர்ணப் போட்டோக்கள்) ... 24
8. புதிய வெளியீடுகள் ... 25
9. தலை கொடுத்தான் தம்பி (திரைக்கதை, வசனம்) ... 32
10. நான் ரசித்த காட்சி ... 50
11. தாய் மகளுக்குக் கட்டிய தாலி (படக்காட்சிகள்) ... 58
12. திரை மறைவில் கலை நிபுணர்-ஸ்வாமி ... 65
13. பத்மினி-ராகினியின் பிரயாண நினைவுகள் 68
14. கசப்பும் இனிப்பும் ... 72
15. நாட்டுக்கொரு நல்லவள் (படக்காட்சிகள்) 81
16. அழகர் மலைக்கள்ளன் (படக்காட்சிகள்) 85
17. கேள்வி-பதில் ... 89
18. தபால் பெட்டி ... 97
19. வெட்டுங்கள் வெட்டுங்கள் ... 102
20. பேசும் படம் போட்டோ ஆல்பம் ... 105

★ SEVENTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:
Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.

...தை நான் எதிர் பார்த்தேன்!

எம். ஜி. ஆர். கூறுகிறர்

"புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திர னுக்கு சீர்காழி நாடகத்தில் கால் எலும்பு முறிந்தது. சென்னைக்குக் கொண்டுவரப் பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறு கிறர்" என்ற செய்தி தினசரிகளில் வந் ததுதான் தாமதம், ஆயிரக்கணக்கான 'பேசும் படம்' ரசிகர்கள் நமது காரியா லயத்திற்கு அவரது உடல் நலம் கேட்டு எழுத ஆரம்பித்து விட்டார்கள்; சில அன்பர்கள் மகஜர்போல் தயாரித்து ஐம்பது பேர், நூறு பேராகக் கையெழுத் திட்டு அனுப்பி யிருந்தார்கள். சிலர் நாம் பதி லெழுதுவோமோ, மாட்டோமோ என்ற சந்தே கத்தில், பதிலுக்கு கார்டு இணைத்தும் கவர் வைத்தும் ஸ்டாம்பு வைத்தும் அனுப்பி யிருந் தார்கள்.

ரசிகர்களின் இந்த அன்புத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் - ஆயிரக் கணக்கில் வந்த கடிதங்களின் தொகை, லக்ஷக் கணக் காக மாறுவதற்குள் - புரட்சி நடிகரை மருத் துவ மனையில் சென்று தொந்தரவு செய்வ தென்று முடிவு செய்து, போனில் பேசினேம். உடனே வரலாம் என்று சொன்னர்கள். எம். ஜி. ஆரை மருத்துவ மனையில் சந்தித்தோம். "வணக்கம், வாருங்கள் வாருங்கள்" என்று சிரித்தபடி வரவேற்றர். விபரமாக எல்லா வற்றையும் கூறினர். அடிபட்டிருக்கும் இடது காலேயும் நன்றுகக் கவனித்துப் பார்த்தோம். பிறகு மனம் தெளிந்தோம்.

அவருக்குக் காலில் எலும்பு முறிவு ஏற் பட்டது உண்மை. அதை விரிசல் என்று தான் கூறவேண்டும். இதைச் சாக்காக வைத்துச் சில விஷமிகள், அவர் இனி முன் போல் படங்களில் ஓடியாடி நடிக்க முடி யாது என்ற புரளியைக் கிளப்பி விட்டிருந் தார்கள். ஆனல் இந்தச் செய்தி எவ்வளவு அபத்தம், அநியாயமானது என்பதை நேரில் கண்டோம். அவர் மிகவும் தெம்பாக இருக்கிறர். உள்ள உறுதியுடன் உடல் உறுதியும் தளராமலிருக்கிறர்.

அவரது கால் விரல்களை அவர் அசைத் துக் கொண்டேயிருந்தார். அடிபட்டிருந்து எலும்பு முழுவதும் முறிந்திருந்தால் இது சாத்தியமல்லவே. அவரை நாங்கள் இதுபற்றி கேட்டதற்கு, அடி ஒன்றும் பலமானது

பேட்டி:
சம்பத்-ஸாரதி
போட்டோ:
"குமார்"

அல்ல, என்றும் கவலைப்பட ஒன்றுமே இல்லை என்றும் கூறினார். "உங்கள் உடல் நலம் பற்றிய செய்தியறியும் ஆவலினாலும், புரளிகளால் பயந்து விட்டதாலும்

எம். ஜி. ராமச்சந்திரன்

முகாம் :
ராமராவ் மருத்துவ மனை
சென்னை.
23 - 6 -'59

என்பால் அன்புகொண்டுள்ள ஆயிரமாயிரம் "பேசும் படம்" ரசிகர்களுக்கு அன்பு வணக்கம்.

என் உடல் நலம் குறித்து அக்கறையோடு விசாரிக்கும் உங்களனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனக்கு வரவிருந்த பேராபத்து உதய சூரியனைக் கண்ட பனித்துளிபோல் விலகி விட்டதற்கு முக்கிய காரணம், உங்களைப் போன்ற ரசிகர்களின் அன்பு ஆசிதான்.

என் உடல் நலம் தேறியபின் நான் மீண்டும் இதுவரை இருந்ததைவிடப் பன் மடங்கு அதிக சக்தியுடனும் தெம்புடனும், கலைக்கும் நாட்டுக்கும் பணியாற்றுவேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆவலுடன் என் உடல் நலம் பற்றி விசாரித்து எழுதும் உங்கள் எல்லோருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்றும் உங்கள் அன்பு மறவா,

எம். ஜி. ராமச்சந்திரன்
23. 6. 59



படம்'' ரசிகர்கள் உங்க ...திக்குமாறு கட்டளையிட்டி ...ீர்கள். உங்களை ஒரு மருத்துவ மனையில் சந்திக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பவே இல்லை...'' என்று நாங்கள் கூறும் போது அவர் இடை மறித்தார்.

''இல்லை......அதனுலென்ன? எத்தனையோ அன்புள்ளங்களின் ஆசியைத் தாங்கிக் கொண்டு, என்றும் எனது நலம் கருதும் சிரிய பத்திரிகையான ''பேசும் படம்'' ஸ்தாபனத்திலிருந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள். ஆனல் ஒன்று......இந்த விபத்தை நான் எதிர்பார்த்தேன்...''

''என்ன......?'' நாங்கள் திடுக்கிட்டபடி கேட்டோம்.

''ஆமாம், 'நாடோடி மன்னன்' திரையிட்டுக்குப் பின் ரசிகர்கள் அன்பு என்னைப் புகழேணியின் உச்சியிலே கொண்டுபோய் விட்டது. ஆகவே அதன் பின் ஏதோ ஒரு ஆபத்து என்னை எதிர்நோக்கியிருக்கிறது. நான் நிரம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று, என் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டே இருந்தது. குறிப்பாக சீர்காழி நாடகத்திற்காக திருக்காட்டுப்பள்ளியிலிருந்து வரும்போது கல்லணை அருகே நான் நண்பர்களிடம் கூறினேன், 'வெகு சமீபத்தில் விபத்து என்னை எதிர்நோக்கியிருக்கிறது,' என்று. ஆனல் எதிர்நோக்கியது உடலின் ஏற்படும் காயத்தை அல்ல. என் உள்ளத்திற்கு வந்தது உடலோடு ஏன், காலின் ஒரு சிறு இடத்தில் —ஆறக்கூடிய காயத்தோடு— போய் விட்டது.''

நாங்கள் பிரமித்துப்போய் நின்றோம். ''லக்ஷக்கணக்கான அன்புள்ளங்கள் உங்களைச் சுற்றி இருக்கின்றன. இந்த அன்புக் கோட்டையைத் தகர்க்க மற்ற எந்தச் சக்தியாலும் முடியாது. உங்கள் திறமை, உள்ளம், கொடைத்தன்மை, செயல், புகழ், உறுதி இவை உங்களுக்குக் கவசமாக இருக்கும்போது நீங்கள் எப்போதும் ஆபத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லை.'' என்று கூறிவிட்டுப் புகைப்பட மெடுக்கத் தயாரானோம்.

''புகைப்படம் வேண்டாமே... அண்ணன் (எம். ஜி. சக்கரபாணி) யாரையுமே புகைப் படம் எடுக்க அனுமதிக்கவில்லை...'' என்று தயங்கியபடியே சொன்னர்.

''உங்களுக்குக் காலில் அடிபட்டு அதைப் படமெடுக்கும் ஆவல் இல்லை எங்களுக்கு. எனவே சும்மா இருங்கள்'' என்று அன்புடன் கடிந்து கொண்டு படங்களெடுத்துக் கொண்டோம். 'பேசும் படம்' ரசிகர்கள் அந்தப் படங்களுடன் அவரது செய்தியையும் பார்க்கலாம்.

''எம். ஜி. ராமச்சந்திரன் பூரண குணமடைய இரண்டு, மூன்று மாதங்களாகும். அவருக்கு ஏற்பட்ட விபத்து விபரீதமானதல்ல. அவர் மிகவிரைவில் குணமடைந்து விடுவார். ஓய்வுக்காகவே இந்தக் கால அளவு. முன்பிருந்ததை விட பூரண வலுப்பெற்று அவர் படவுலகுக்கும் நாட்டுக்கும் தொண்டு செய்வார். ஆகவே புரளிகளை நம்பாதீர்கள்''—இதுதான் ''பேசும் படம்'', யாவருக்கும் கூறும் செய்தி.

பரத நாட்டியம் ஆட, நாடகங்களில் நடிக்க, சினிமாப் படங்கள் எடுக்க, இமிடேஷன் நகைகள் தேவையா? விஜயம் செய்யுங்கள்.

களஞ்சியம் பிரதர்ஸ்,

14, சைனு பஜார்,
சென்னை-1.

(நாடோடி மன்னன், கட்ட பொம்மன் முதலிய படங்களுக்கு நகைகள் சப்ளை செய்தவர்கள்.)

H.O. 161/11, பேங்சால் தெரு,
கொழும்பு-11.

L. R. Swami

செய்திச் சுருள்

தாய் மகளுக்குக் கட்டிய தாலி

கல்பனா கலா மந்திர் தயாரிப்பான 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' ஒரு அருமையான சமூகப் படமாகும். எம். ஜி. ஆர்., வி. கோபாலகிருஷ்ணன், தங்கவேலு, ஜமுனா, கண்ணாம்பா மற்றும் பலர் நடித்து வருகிறார்கள். ஆர். ஆர். சந்திரன் டைரக்ஷனில் வளரும் இப்படத்தின் கதையை அறிஞர் அண்ணா எழுதியிருக்கிறார். வசனங்களை அரங்கண்ணல் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

அல்லி பெற்ற பிள்ளை

'அல்லி பெற்ற பிள்ளை' தமிழ் படத்தை எம். எம். புரொடக்ஷன்ஸார் உருவாக்கி வருகிறார்கள். ஒரு வண்டிக்காரனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இதில் 'லட்சிய நடிகர்' எஸ். எஸ். ஆர், கே. சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, பண்டரிபாய், எம். என். ராஜம் முதலியோர் நடித்துள்ளனர் ஏ. பீ. நாகராஜன் வசனமெழுதியுள்ள இப்படத்தை கே. சோமு டைரக்ட் செய்கிறார்.

பூ முடித்தவள்

விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசை அமைக்கும் பாரதி பிக்ஸ்சாரின் 'பூ முடித்தவள்' ஆரம்பவிழா. சென்ற 10-ம் தேதியன்று பரணியில் நடைபெற்றது. கண்ணதாசன் கதை, வசனம், பாடல்கள் எழுதும் இந்தப் படத்தை கே. சங்கர்-ராஜகோபால் இருவரும் டைரக்ட் செய்யப் போகிறார்கள்.

காதல், சோகம், வீரம் இவற்றுடன் சாகசச் செயல்களும் சர்க்கஸ் காட்சிகளும் கொண்ட "சர்க்கஸ் சுந்தரி" படத்தை லலிதா மூவீஸார் விரைவில் வெளியிடப் போகிறார்கள்.

இப்படி இருந்தாத்தான் ''புது மைப் பெண்'' என்று அர்த் தமா? — கஜலக்ஷ்மி பிக்சர்ஸ் ''புதுமைப்பெண்'' ணில் எஸ். எஸ். ஆர். எம். என். ஆர்.

அரசு பிக்சர்ஸ் ஆரம்பவிழா

டைரக்டர் ப. நீலகண்டன் தயா ரிக்கும் அரசு பிக்சர்ஸின் இரண் டாவது படத்திற்கான ஆரம்ப விழா, சென்ற மாதம் 5-ம் தேதி யன்று பாரமவுண்ட் ஸ்டுடியோவில் நடைபெற்றது. சென்னை மேயர் அ பொ. அரசு காமிராவை முடுக்கி வைத்தார். ஸ்ரீமதி சௌந் தரா கைலாசம் தலைமை வகித்தார். அறிஞர் அண்ணு, எம். ஜி. ஆர். கே. ஆர். ராமசாமி ஆகியோர் விழாவில் பங்கெடுத்துக்கொண்டு பேசினுர்கள். அறிஞரின் கதை, வசனம் கொண்ட இப்படத்தில் எம். ஜி ஆர். கே. ஆர். ராமசாமி, வீரப்பா, எம். என். ராஜம், என். லலிதா மற்றும்பலர் நடிக்கிருர்கள்.

கானல் நீர்

பானுமதி-நாகேஸ்வரராவ் பிரதம பாகத்தில் நடிக்கும் பரணி பிக்சர்ஸின் தமிழ்ப்படத்திற்கு 'கானல் நீர்' என்று பெயர் தரப் பட்டிருக்கிறது. விதவை பொருந்தி யின் வாழ்வைச் சித்தரிக்கும் இது ஒரு வங்கக் கதையைத் தழுவியது. ராமகிருஷ்ண படத்தை டைரக்ட் செய்கிருர்.

எம். ஜி. ஆர். நடிப்பார்

சிவாஜி கணேசன்—பத்மினி பிரதம பாகத்தில் நடித்துவரும் 'மரகதம்' படத்தைத் தயாரித்து வரும் பக்ஷி ராஜா ஸ்டுடியோஸார், அடுத்து மூ. கருணநிதி கதை, வசனம் எழுதும் படமொன்றை தயாரிக்கப் போகிருர்கள், 'புரட்சி நடிகர்' எம். ஜி ஆர். இதில் பிரதம பாகத்தில் நடிப்பார்.

அமர்ஜோதி பிக்சர்ஸ் மேனேஜிங் பார்ட்னர் திரு. நாகபூஷணம், சௌ. கமலாவை சமீபத்தில் காஞ்சீ புரத்தில் மணந்தார். மணமக்களுடன் ஸ்ரீதர், ஸ்ரீதரின் தாயார், உதவியாளர் சடகோபன். மணமக்கள் வைத்திருப்பது 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் அன்பளிப்பாக அனுப்பிய வெள்ளித்தட்டு.

கைராசி

'ஒரேவழி' படத்தை வெளியிட்ட வாசு பிலிம் ஸார், கே. சங்

கரின் டைரக்ஷனில் 'கைராசி' என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். ஜெமினி கணேசன் இதில் கதாநாயகனாக நடிக்கிறார் கே. எஸ் கோபாலகிருஷ்ணன் வசனங்களை எழுதி வருகிறார்.

சுபாஷ் மூவீஸ் படம்

சிவாஜி பிலிம்ஸில் பணியாற்றி வந்த பி. என். பிள்ளை, சொந்தத்தில் 'சுபாஷ் மூவீஸ்' என்ற படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். சக்தி கிருஷ்ணசாமி கதை, வசனம் எழுதும் படமொன்றை இவர் தயாரிக்கப் போகிறார். விஸ்வநாதன்—ராமமூர்த்தி இசை அமைக்கும் இப்படத்தின் சில பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

முரசுவின் 'விருந்து'

கதாசிரியர், வசனகர்த்தா கோபாலகிருஷ்ணன், தயாரிப்பாளர் வாசு மேனன், டைரக்டர் கே. சங்கர் மூவரும் கூட்டாகச் சேர்ந்து ஆரம்பித்திருக்கும் முரசு பிக்சர்ஸின் சார்பில் 'விருந்து' என்ற படம் உருவாகப் போகிறது. வாஹினியில் இது தயாரிக்கப்படும்.

கவலை இல்லாத மனிதன்

கண்ணதாசன் புரொடக்ஷன்ஸார், கே. சங்கரின் டைரக்ஷனில் 'கவலை இல்லாத மனிதன்' என்ற சமூகப்படத்தைத் தயாரித்து வருகிறார்கள். சென்ற மாதம் 14-ம் தேதி யன்று இதன் ஆரம்ப விழா பரணியில் நடைபெற்றது. சென்னையின் முன்னாள் நீதிபதி எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார் விழாவிற்குத் தலைமை வகித்தார். கண்ணதாசன் புரொடக்ஷன்ஸாரின் மின்னல் தயாரிப்பான இதில் டி ஆர். மகாலிங்கம், டி. எஸ். பாலய்யா, எம். ஆர். ராதா, எம். என். ராஜம், மாலினி முதலியோர் நடிப்பார்கள். சந்திரபாபு படத்தின் பிரதம பாகத்தில் நடிக்கிறார்.

எம். எம். புரொடக்ஷன்ஸ் ''அல்லிபெற்ற பிள்ளை'' படத்தில் பண்டரிபாய் அருமையாக நடித்திருக்கிறார்.

சைனா பஜார்

சிவாஜி கணேசன், வி. ஆர். ராஜகோபால், கே. கண்ணன், மாலினி முதலியோர் நடிக்கும் 'சைனா பஜார்' படத்தின் ஆரம்ப விழா சென்ற 6-ம் தேதி கோல்டனில் நடைபெற்றது. டைரக்டர் ராமண்ணா காமிராவை முடுக்கிவிட்டார். பாப்பா இசை அமைக்கும்

மோகேஷ்ஸ்வர் சித்ராவின் ''அருந்ததி'' சமூகப்படத்தில் ஏ. நாகேஸ்வரராவ்.

இப்படத்தை ரேணு பிலிம்ஸார் செந்தில் பிக்சர்ஸாருடன் கூட்டாகத் தயாரிக்கிறார்கள். ரவீந்தர் கதை, வசனம் எழுதியிருக்கும் இதை, அவரே தனது கூட்டுத் தயாரிப்பாளரான பங்காரு ராஜுவுடன் டைரக்ட் செய்கிறார்.

பார்த்திபன் மகன்

என். ஆர். புரொடக்ஷன்ஸார் 'பார்த்திபன் மகன்' என்ற பெயரில் ஒரு படத்தைத் தமிழ்ப்படுத்தி வருகிறார்கள். வீர, சாகசச் செயல்கள் நிறைந்த இப்படத்தை சமுத்ராலா டைரக்ட் செய்திருக்கிறார். எஸ். வரலக்ஷ்மி, ராஜசுலோசனா, சந்தியா, என். டி. ராமராவ், சலம் முதலிய நக்ஷத்திர நடிகர்கள் நடித்துள்ள இப்படம் விரைவில் வரப் போகிறது.

இதே ஸ்தாபனத்தார் பி. வி. வி. எஸ். எம். புரொடக்ஷன்சார் தயாரிப்பான 'பட்டி விக்ரமார்க்கா' என்ற படத்தை, 'பட்டி விக்ரமாதித்தன்' என்ற பெயரில் தமிழ்ப்படுத்தி வருகிறார்கள். அஞ்சலி தேவி, சந்தியா, கிரிஜா, குசலகுமாரி, என். டி. ராமராவ், ரங்காராவ், ரேலங்கி முதலியோர் நடித்துள்ள இப்படத்தை ஜம்பனா டைரக்ட் செய்திருக்கிறார்.

சர்க்கஸ் சுந்தரி

சர்க்கஸ் கம்பெனி ஒன்றைப் பின்னணியில் வைத்து மயிர்க்கூச்செறியும் பல சம்பவங்களைக் கொண்ட ரசமான ஹிந்திப் படமொன்றைப் 'சர்க்கஸ் சுந்தரி' என்ற பெயரில் லலிதா மூவிஸார் தமிழில் வெளியிடப் போகிறார்கள்.

இது தவிர, 'நாக சம்பா' என்ற படத்தையும் இவர்கள் 'பாம்பை மணந்த பதிவிரதை' என்ற பெயரில் தமிழ்ப்படுத்தி வருகிறார்கள். நிருபாராய் இதன் பிரதம நடிகையாவார். ஏராளமான தந்திரக் காட்சிகள் கொண்ட படம் இது.

ராம ஆஞ்சநேய யுத்தம்

லிபர்டி பிக்சர்ஸார் 'ராம ஆஞ்சநேய யுத்தம்' என்ற படத்தைத் தற்போது தமிழ்ப்படுத்தி வருகிறார்கள். பல தந்திரக்காட்சிகள் நிறைந்த புராணப் படமான இதற்கு ஆர். பார்த்தசாரதி இசை அமைக்கிறார்.

நக்ஷத்திர உதவி

சென்ற மாத மத்தியில் சென்னையிலுள்ள ஒரு பகுதியில் பெருந் தீபத்து ஏற்பட்டது. பல குடிசைகள் சாம்பலாயின. ஏராளமானவர்கள் உடமைகளை இழந்தனர். இவர்களுக்காக சிவாஜி கணேசன் ஐந்தாயிரம் ரூபாய்கள் நன்கொடை அளித்தார். ஒரு கிழவி திருமணத்திற்காக சேமித்த பணம் தீயில் போய் விட்டது என 'நடிகர் திலக'த்திடம் முறையிட்டபோது, அவர் ஐம்பது ரூபாயை அக்கிழவிக்குக் கொடுத்தார். புரட்சி நடிகர், விபத்து நேர்ந்த இடத்திற்கு சென்று, வீடிழந்தோர் அனைவருக்கும் குடிசைகளைக் கட்டித்

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50-க்கு, 96" × 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல் பணம் வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR
SHAWL HOUSE (PM)
AMRITSAR.

லலிதா மூவிஸ் "பாம்பை மணந்த பதிவிரதை" படத்தில் இவர்களைச் சந்திககலாம்.

பண்டரிபாய், வி. கோபாலகிருஷ்ணன், கே. கண்ணன், சாந்தா, மோஹனா, புதுமுகம் வி. ஆர். கேசவன் முதலியோர் நடிப்பார்கள் கே. சோமு டைரக்ஷனையும், ஏ எம். ராஜா சங்கீத டைரக்ஷனையும் கவனிக்கிறார்கள்.

"பாக்யதேவதை" வருகிறாள்

'காலம் மாறிப் போச்சு' படத்தை அடுத்து ஸாரதி ஸ்டுடியோ ஸார் "பாக்ய தேவதை" படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். ஹைதராபாதில் சொந்தஸ்டுடியோ நிர்மாணிக்கப்பட்ட பின் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்ப்படம் இது. ஜெமினி கணேசன், சாவித்திரி, ராஜசுலோசனா, நம்பியார், வி ஆர். ராஜகோபால் முதலியோர் நடித்திருக்கும் இதை சாணக்கியா டைரக்ட் செய்திருக்கிறார். தஞ்சை ராமய்யதாஸ் பாடல்களையும், வசனமும் அமைத்திருக்கிறார். வேணு சங்கீத டைரக்டர்.

தருவதாக உறுதியளித்தார். இலட்சிய நடிகர் துணி மணிகளைக் கொடுத்து உதவினார்.

சத்யநாராயணா புரொடக்ஷன்ஸ்

வி. ஸ்ரீநிவாசன் டைரக்ஷனில் சத்யநாராயணா புரொடக்ஷன்ஸார் ஒரு தமிழ்ப்படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். ராஜாராம் எழுதிய கதைக்கு கே. அப்பன்ராஜ் வசனங்களை அமைத்து வருகிறார். ஹனுமந்தராவ் இதற்கு இசை அமைப்பார். 'உன்னையே கல்யாணம் செய்து கொள்வேன்' என்று படத்திற்கு பெயர் தரப்பட்டுள்ளது.

வீரமங்கை வேலு நாச்சியார்

ஸ்புட்னிக் பிக்சர்ஸார் "வீரமங்கை வேலு நாச்சியார்" படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். 'பிரம்மம்' கதை - வசனம் எழுதியுள்ள இப்படத்தில் மனோகர்,



தியாகராஜன் சகோதரர்கள் தயாரிக்கும் ராஜம் பிக்சர்ஸ் அளிக்கும் எம்.ஏ.வி. யின் "பாஞ்சாலி"யில் மனோகர்.

ஸ்டுடியோ விஜயம்

ஹேமா பிலிம்ஸின் பட ஆரம்ப விழாவில் பத்மினி காமிராவை முடுக்கி வைத்தார்.

லிபர்டி பிக்சர்ஸின் ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்தம் படத்தில் நீலாகுமாரி.

இராமாயணத்திலே எந்தக் கதாபாத்திரங்களைத் தெரிந்து கொள்ளா விட்டாலும் 'சபரி'யைப்பற்றி நிச்சயமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு "சபரி" என்ற பெயரில் சுகீ பவா புரொடக்ஷன்ஸார் ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார்கள்.

சியெச். நாராயணமூர்த்தி டைரக்ட் செய்யும் இப்படத்தில் பண்டரிபாய் சபரியாக நடிக்கிறார். ராகு என்ற வில்லனாக அசோகனும், சபரியின் தகப்பனும் வேடர்களின் தலைவனுமாக, டி. கே. எஸ். குழுவைச் சேர்ந்த வெங்கடாசலமும் நடிக்கும் காட்சியொன்று சென்ற மாதம் வாஹினியில் படமாக்கப் பட்டது. கே. எம். கோவிந்தராஜன்

இதற்கான வசனங்களை எழுதி யிருக்கிறார்.

ராகுவுக்கு சபரியின் மீது ஒரு கண் உண்டு. அவளையும் வேடர் குலத் தலைமைப் பதவியையும் அப கரித்துக் கொள்ள அவன் பல முயற்சிகள் செய்கிறான். பரம சாது வும், தெய்வபக்தி மிகுந்தவளுமான சபரி, சாமியார்களின் கும்பலில் வாழ்வது அவனுக்குப் பிடிக்க வில்லை. மேலுக்குத்தான் அவள் கல்யாணத்தை வெறுக்கிறாளே தவிர, சாமியார் ஒருவனை அவள் காதலிக்கிறாள் என்று ராகு, அவள் தகப்பனாரிடம் கூறுகிறான். இதைக் கேட்ட அவர் மனம் பதைக்கிறது. இந்தக் காட்சிதான் அன்று சுடப் பட்டது.

* * *

திருமுகம் டைரக்ஷனில் வளரும் அமரா புரொடக்ஷன்ஸ் 'உத்தமி பெற்ற ரத்தினம்' என்ற படத்தில் டி. கே ராமச்சந்திரன், மாலினி, பண்டரிபாய், மனோரமா ஆகியோர் நடிக்கும் காட்சி ஒன்றும் அன்று

ரேணு - செந்தி கூட்டுத்தயாரிப் பான ''சைனா பஜார்'' படத்தில் கே. கண்ணன் முக்கிய பாத்திரத் தில் நடித்து வருகிறார்.

அரசு பிக்சர்ஸ் ஆரம்ப விழாவில் ப. நீலகண்டன், அறிஞர் அண்ணா.

விஜயாவில் படமாக்கப்பட்டது. ஆரூர்தாஸ் இதற்கான வசனங்களை எழுதியிருக்கிறார்.

* * *

நெப்டியூனில் தயாரிப்பு நெம்பர் ஒன்று என்னும் பாலா மூவிஸ் படத்தில் டி. ஆர் ராமச்சந்திரன், கொட்டாப்புளி ஜெயராமன், சுகுமாரி ஆகியோர் நடித்த ஹாஸ்யக்காட்சி ஒன்று அன்று படமாகியது ரகு என்ற வாலிபன் மாஜி ராணுவ அதிகாரி ஒருவரது மகளை தாரிணியை மணக்கிறான். அவன் தகப்பனார் ராவ்பகதூருக்கு இது இஷ்டமில்லை. அன்றியும் மாமனார் வீட்டில் அடிமையாகக் காலம கழிக்கும் ரகுவுக்கு அன்றுதான் புத்திவந்து வீரமும் பிறந்தது. மாமனாருடன் தைரியமாகச் சண்டை போட்டு ''ஷட் அப்'' என்று அடக்குகிறான். அவர்மாப்பிள்ளையைச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்துகிறார் மாப்பிள்ளை மூர்ச்சையாகிறான். மாமனார் நடுங்குகிறார். இக்காட்சியில் ரகுவாக டி. ஆர். ராமச்சந்திரனும், மனைவியாக சுகுமாரியும், மாமனாராகக் கொட்டாப்புளியும் நடித்தனர். பீம்சிங் டைரக்ட் செய்யும் இப்படத்திற்கு கோபாலகிருஷ்ணன் வசனம் எழுதியிருக்கிறார்.

பட விளக்கம்:

6. கணேஷ் பிரசாத் மூவிஸ் 'மருதநாட்டு வீர'னில் ஜமுனா, சிவாஜி கணேசன். 7. 'சைனா பஜார்' ஆரம்ப விழாவில் மாலினி, லலிதா, சாந்தா, 8. 'மருதநாட்டு வீரன்' உதவி ஒளிப்பதிவாளர் ராஜா. 9. சுகிபவாவின் 'சபரி' குழுவினர். 10. 'சபரி'யில் அசோகன், வெங்கடாசலம். 11. 'அபலை அஞ்சுகம்' செட்டில். 12. 'கொஞ்சும் சலங்கை' சுடப்படுகிறது. 13. 'மருதநாட்டுவீரன்' கணேசனுடன் டைரக்டர் டி. ஆர். ரகுநாத்தும் உதவி டைரக்டர் பி. எஸ். ரங்கநாதனும் சரி பார்க்கிறார்கள்.

அரசு பிக்சர்ஸ் ஆரம்ப விழாவில் வி. ஆர். ராஜகோபால், எம். ஜி. ஆர்., கே. ஆர். ஆர்., ப. நீலகண்டன் ஆகியோர்.


6.

7.

8.

9.


10.


11.


12.

13.

திரையிடத் தயார்
காலம் மாறிப்போச்சு
படத்தை தொடர்ந்து
சாரதி
ஸ்டுடியோஸ்
அளிக்கும் மற்றொரு
மகத்தான
படம்.....
பாக்ய
தேவதை
...தமிழ்
உணர்ச்சி மிகுந்த சமூகசித்திரம்
நடிகர்கள்
ஜெமினி கணேசன் · சாவித்திரி · ராஜசுலோசனு
M.N.நம்பியார் · ராஜகோபால் மற்றும் பலர்...
வசனம், பாட்டு
தஞ்சை ராமையாதாஸ்
சங்கீதம்
M.வேணு
டைரக்ஷன் · சாணக்கியா
BAKTHA
உலக உரிமையாளர்கள்
சாம்ரியா டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ்
சென்னை-2.
MOULIS

ராகினி கூறுகிருர்:
'நான் உபயோகிப்பது தூய,
வெண்மையான
லக்ஸ்
டாய்லெட்
சோப்'
சினிமா
நட்சத்திரங்களின்
அழகுசாதன
சோப்
LUX
TOILET SOAP

ஆடை அலங்காரம்

கமலா லக்ஷ்மண்

இந்தப் போஸில் மயங்காத ஆணே இருக்க முடியாது! உடலழகு கெடாத படி ஆடையணிகள் அணிய வேண்டுமானால் இந்த ரக ஆடையணிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

இங்கே நான் மஸ்டர்ட் கலர் ஷிப்பான் சேலை உடுத்தியிருக்கிறேன். இதில் காணப்படும் சரிகை வேலைப்பாடுகள் கவர்ச்சியை அதிகப் படுத்துகின்றன. சுருக்கம் விழாமல் எடுப்பாக இருக்க பச்சை நிற வெல்வெட் சோளியைப் போட்டிருக்கிறேன். மஸ்டர்ட், பச்சை வர்ணங்கள் சோபிக்க சிவப்பு நிற கொச்சு போட்டிருக்கிறேன். முத்து மாலைகழுத்தோடுசுற்றியிருக்கும். கொச்சு மட்டும் முதுகில் பாதி தொங்கியபடி இருக்கும்.

அஜந்தா கொண்டை, காதில் கல் பதித்த மாட்டல், ஜிமிக்கி, திலகம் இவை இந்த ஆடைகளுக்கு ஏற்றவை.

இம்மாதிரி அலங்கரித்துக் கொண்டு பீச்சுக்குப் போய் காற்றில் சேலைத் துணி படபடவென்றடிக்க நிற்பதில் எனக்கு அலாதி ஆசை.

மயில் கழுத்து கலர் காஞ்சீபுரம் பட்டுப் புடவை இது. சரிகை இழையோடும் இதில் பட்டையாகவும் புள்ளியாகவும் சரிகை வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிவப்பு நிற 'தலைப்பு'ம் சரிகைக் கரையும் போடப்பட்ட இந்தப் புடவை அதிக விலை கொண்டதாகும்.

இதற்கு ஏற்றாற் போல் சிவப்பு நிற காஞ்சீபுரம் பட்டுச் சோளி அணிந்திருக்கிறேன்.

சோளியில் அகலமான சரிகை வேலைப்பாடுகள் கொண்ட பூக்கள் போடப்பட்டிருக்கின்றன. பார்டரின் நிறத்தில் சோளி அணிவதும் ஒருவகை பாஷன் தானே?

மணமான பெண்களுக்குச் சில விதிமுறைகள் உண்டு. 'மடிசார்' வைத்துப் புடவை உடுத்துவதும் அவற்றில் உண்டு. ''கொசுவம்'' வைத்து இப்படி உடுத்தக்கூடாது.

இடது கையில் ரிஸ்ட் வாட்ச், வலது கையில் ஒரே ஒரு தங்க வளையல், காதில் மாட்டல், ஜிமிக்கி, கழுத்தில் தங்க நெக்லேஸ் அணிந்திருக்கிறேன். கலியாணங்களுக்குச் செல்கையில் நான் இப்படிக் கிளம்புவேன்.

கமலா எந்த மாதிரிப் புடவை உடுத்தினாலும் நன்றாக இருக்கும். சில்க்காக இருந்தால் உடலோடு ஒட்டிப்பார்வைக்கு எடுப்பாக இருக்கும். கனத்த பட்டுப்புடவை உடுத்தினாலும் பருமனாகத் தோன்ற மாட்டார்.

கமலா லக்ஷ்மணன் கூறுவதைக்கேளுங்கள்: பூவேலைப் பாடு-இல்லையில்லை-இலை வேலைப்பாடு கொண்ட சிவப்பு நிற சில்க் புடவையும் பச்சை நிற சரிகை இழையோடும் சோளியும் அணிந்திருக்கிறேன்.

வலது கையில் அரை டஜன் சிவப்பு கண்ணாடி வளையல்களும் இடது கையில் கைக்கடிகாரமும் அணிந்திருக்கிறேன். கழுத்திலே மணிபோல் கோர்த்த பட்டை நெக்லேஸ். இதுமாதிரி ஒன்று அணிந்தாலும் போதுமே! பார்த்தவுடன் பளிச்சென்று அமைந்து கவர்ச்சியை ஏற்படுத்தும் ஆடையணிகள் இவை. இப்போது காயும் வெயிலுக்கு இவற்றைவிட அதிகமாக எது இருந்தாலும் தாங்க முடியாது.

காலில் ஸ்லிப்பர் இருந்தால் -இன்னும் பார்வையாக இருக்கும்; 'டப் டப்' என்று குதிகாலில் அடித்துத் தாளம்போடுமல்லவா?

இவரது கலைத் திறமையை வெளிப்படுத்துவதுபோல் தோன்றுகின்றன ஆடையணிகள். கலைத்தேவி வெள்ளை ஆடையுடுத்தி வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பவளல்லவா? எதற்கும் அணை தேவையல்லவா? தன் கலைத்திறனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை நிரூபிப்பவர்போல், வெள்ளைப் புடவைக்கு சரிகைக் கரை கட்டியிருக்கிறார். சரிகை பார்டரும் புடவையின் நடுவேயுள்ள சரிகைப் புஷ்ப வேலைப்பாடும் புடவையின் விலை அதிகம் எனப் பறை சாற்றுகின்றன.

கழுத்திலே ஒரு பட்டை நெக்லேஸ்; கையிலே இருபுறமும் தங்க வளையல்களுக்கு நடுவில் சிவப்பு வளையல்கள்; காதிலே ஜிமிக்கி; தலையிலே பாரமில்லாத புஷ்பம். இவை, அணிந்தால் 'சிம்பி'ளாக இருக்கும். கூடியவரை நடனமாடும், நடிக்கும் நேரம் தவிர இப்படிப் பட்ட ஆபரணங்களே அணிவார் கமலா லக்ஷ்மணன்.

இந்த ஆபரணங்கள் கவர்ச்சி தருவதுடன் உடலையும் உறுத்தமாட்டா, அல்லவா?

வெள்ளைப் புடவையும் வெள்ளைச் சோளியும் அவருக்குப் பிடித்தமானவை. விருந்து, ஆரம்ப விழாக்களுக்கு இப்படித்தான் கிளம்புவார் அவர்.

நாடக மேடையிலே நீண்ட நாட்கள் நடித்து, பண்பட்ட நடிகரான எம். கே. முஸ்தபா 'சிவகெங்கைச்சீமை'யில் மருது சகோதரர்களில் ஒருவராக சிறப்பாக நடித்திருக்கிறார். ஆர்வமும் திறமையும் மிக்க இவருக்கு எதிர்காலத்தில் திரையுலகம் தகுந்த சந்தர்ப்பங்களைக் கொடுத்து, நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

புதிய வெளியீடுகள்

பத்தரைமாத்துத் தங்கம்

தயாரிப்பு : மணிவேல் பிக்சர்ஸ்
டைரக்ஷன் : கே. எஸ். மணி.
நீளம் : 12,458 அடி.
வெளியிட்ட தேதி : 22-5-'59
வசனம் : கலைப்பித்தன்.
நடிகர்கள் : பாலய்யா, கண்ணப்பா, டி. ஆர். ராமச்சந்திரன், பண்டரிபாய், சுந்தரிபாய், கே. எஸ். ராஜம்.

மருதாசலம் வீட்டில் வேலை செய்யும் துரைசாமி தன் மனைவியுடனும், தன் தம்பியின் குடும்பத்துடனும் ஒற்றுமையாக வசித்து வருகிறான். துரைசாமியின் மாமியாரும், மைத்துனனும் அங்கு வந்து சகோதரர் குடும்பங்களுக்குள் பிளவு உண்டாக்குகின்றனர். பொதுத் தொண்டனான தம்பி குமார் மீது பொதுச் சொத்தைத் திருடிய பழி விழுந்தது காரணமாக அவன் ஊரைவிட்டே ஓடி விடுகிறான். தற்செயலாக சென்னை குடும்ப நண்பர் ஒருவரைச் சந்தித்து அவர் மூலமாய் ஒரு கம்பெனியில் வேலைக்கமர்ந்து மானேஜராகிறான்.

குமார் போனபிறகு படாத கஷ்டப்பட்டு, அவள் மனைவி தங்கம் இரண்டு குழந்தைகளுடன் எப்படியோ வாழ்ந்து வந்தும், கடைசி

சேதுபதியும் அசோகனும் பார்ப்பதிலிருந்து ஏதோ தகராறு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறதல்லவா? — ராஜ்கலாவின் ''வழி காட்டிய தெய்வம்'' படத்தில் இருவரும் வருகிறார்கள்.



''என்ன, மரகதம், இதுக்கெல்லாம் பயப்படறே?'' —பக்ஷிராஜா வின் ''மரகதம்'' தமிழ் படத்தில் சிவாஜி கணேசன் - பத்மினி.

யில் அவள்மீது அடாத பழி சுமத்தப்பட்டதால் அவள் தற்கொலை செய்துக்கொள்ள முயற்சிக்கிறுள். வேலைக்காரி தேவி என்பவள் அவளையும் குழந்தைகளையும் காப்பாற்றித் தன் வீட்டில் வைத்துக் காப்பாற்றுகிறுள்.

சென்னையிலிருந்து குடும்பத்தைப் பார்க்கவந்த குமார் மனைவியைத் தவருக எண்ணும்போது, மருதாசலம் எல்லா உண்மைகளையும் விளக்குகிறுர். பிரிந்த குடும்பம் மீண்டும் ஒன்றுபடுகிறது.

விமர்சனம்

இப்படத்தில் எதுவும் புதுமையாக இல்லை. பாலய்யாவும், சுந்தரிபாயும் இதில் நல்லவர்களாக வருவதுதான் இப்படத்தின் விசேஷம். கடவுளரைக் கேலிசெய்யும் தெருக்கூத்து கண்டிக்கத்தக்கது.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

தயாரிப்பு : விஜயஸ்ரீ
டைரக்ஷன் : கே. காமேஸ்வர ராவ்
நீளம் : ?
வெளியிட்ட தேதி : ?
வசனம் : உதயகுமார்
நடிகர்கள் : என். டி. ராமராவ், வி. நாகய்யா, அஞ்சலிதேவி, சரோஜாதேவி, சௌகார் ஜானகி, குசலகுமாரி.

இந்திர பதவிக்காக தவமிருந்த விருத்தாசுரன், அத்தவத்தைக் குலைக்க வந்த ரம்பாவைக் கர்வபங்கம் செய்ய, இந்திரனுல் கொல்லப்பட்டுப் பூலோகத்தில் பாண்டுரங்கனுகப் பிறக்கிறுன்.

வைதீக குடும்பத்தில் பிறந்தும், முன்வினை காரணமாகக் கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு அடிமையாகிக் கெட்டழிந்து, பெற்றோரை அவமதிக்கிறான். அவனது காதல் கிழத்தியான கலாவதி அவனிடமிருந்த பணம் போனதும் அவனையும் துரத்தி விடுகிறாள். புத்தி வந்த பாண்டுரங்கன் தெருவில் அலைந்து திரிந்து குக்குடமுனியின் ஆசிரமத்தை அடைகிறான். அங்கேயும் அவன் கங்காதேவியைப் பார்த்து அவளை விரும்பவே, முனிவரின் கோபத்துக்காளாகிக் கால்களை இழக்கிறான்.

பின், அம்முனிவரின் உபதேசப்படி, பெற்றோர்களை அடைந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்து இறைவனின் கருணைக்குப் பாத்திரமாகிறான் பாண்டுரங்கன்.

விமர்சனம்

தியாகராஜ பாகவதர் நடித்து வெளிவந்த ஹரிதாஸ், புது வாழ்வு கதைகளைத் தழுவித் தெலுங்கில் தயாரிக்கப்பட்ட இப்படத்தை ஓட்டுமொழிப் படமாகத் தமிழில் திரையிட்டிருக்கிறார்கள். ஏராளமான நடனங்களும் பாடல்களும் இருக்கின்றன.

தங்கக் குடமெடுத்து தண்ணிக்குப் போகும் இவர் "தங்கம் மனசு தங்கம்" தான்.-பிரண்ட் பிக்சர்ஸின் இப்படத்தில் எம். என். ராஜம்

கலைவாணன்

தயாரிப்பு : சாரதா பிலிம்ஸ்
டைரக்ஷன் : பி. புல்லய்யா
நீளம் : 15,850 அடி
வெளியிட்ட தேதி : 5-6-'59
வசனம் : ஸ்ரீதர்
நடிகர்கள் : ஏ. நாகேஸ்வர ராவ், தங்கவேலு, சகஸ்ர நாமம், அஞ்சலிதேவி, சாந்த குமாரி, ராஜசுலோசனா.

காசிநாத் என்ற உயர்குடி வாலிபன் சிறந்த கலைஞன். மாலா என்ற தெருக்கூத்துப் பெண் ஒருத்தியைக் காதலித்து அவளுக்காகத் தன் தமையன், அண்ணி, வீடு, வாசல், ஜாதி, மதம், பூணூல் உள்பட எல்லாவற்றையும் இழந்து விடுகிறான். ஆனால் அதே சமயம் தஞ்சை மன்னரின் நன்மதிப்புக்கு ஆளாகிப் பண்டிதனாகக் கௌரவிக்கப்படுகிறான். பொறாமைக்காரர்களின் சூழ்ச்சி காரணமாகக் குடி முதலியவைகளில் சிக்கிக் கொண்டு சீரழிகிறான். வறுமை வாட்டுகிறது.

மகனைப் போல வளர்த்த காசி கெட்டழிவதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட அவன் அண்ணி பார்வதி முடிவில் தற்கொலைக்குத் துணிகிறாள். ஆற்றில் விழுந்த அண்ணியைத் தூக்கிவந்து ஆலயத்தில் வைத்து, தன் ஆத்மபலத்தால் அவளை உயிர்ப்பிக்கிறான் காசிநாத். எல்லோருக்கும் அறிவுக்கண்கள் திறக்கின்றன.

விமர்சனம்

கற்பனையா, புராணமா என்று சந்தேகப்படும்படியாகக் கதையை அமைத்திருக்கிறார்கள். காலத்துக்கேற்ற சம்பவம் ஒன்றுகூட இல்லை. அழகான வசனமும் அருமையான

தஞ்சை ரசிகர்கள் சமீபத்தில், இளம் கதாசிரியர், வசன கர்த்தா, டைரக்டர் தயாரிப்பாளர்(களில் ஒருவர்)ஸ்ரீதருக்கு "கலைஞர் திலகம்" என்ற பட்டமளித்துக் கௌரவித்தார்கள்.

சில கர்னடகப் பாட்டுக்களும் இப் படத்தின் சிறப்பான அம்சங்கள். அஞ்சலிதேவியின் நடிப்பு மெருகு குறையாமல் இருக்கிறது. சந்தனு-மச்சகந்தி நாட்டிய நாடகம் நன்ருக இருக்கிறது.

தலைகொடுத்தான் தம்பி

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
டைரக்ஷன் : டி. ஆர். சுந்தரம்
திரைக்கதை, வசனம் : மாறன்
நீளம் : 17,287 அடி
வெளியிட்ட தேதி : 12-6-59
நடிகர்கள் : கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ. ராஜேந்திரன், மனோகர், மாலினி, என். லலிதா, முத்துலக்ஷ்மி.

செல்வபுரி இளவரசி சாந்தவல்லி பவளத் தீவைச் சேர்ந்த ஒரு சாதாரண மனிதன் விஜயனைக் காதலித்து மணந்து ஒரு குழந்தைக்குத் தாயாகிருள். விஜயன் ஏற்கனவே ஒரு பெண்ணை மணந்து ஒரு குழந்தைக்கு தகப்பனாரானவன். இந்த நிலையில் விஜயனின் முதல் மனைவி காலமாகிருள். அவள் குழந்தையை தன் மைத்துனரிடம் விட்டு வளர்க்கச் சொல்கிருன் விஜயன்.

நிறையப் பணம் சேர்த்து,சாந்தவல்லியைச் சந்தித்து அவளையும் குழந்தையையும் நல்ல நிலைமையில் வைக்க வேண்டுமென்று உழைக்கிருன் விஜயன். ஆனல் கைகளை இழக்கிருன்;நோய்வாய்ப்படுகிருன்.

பல ஆண்டுகள் கழித்து எப்படியோ சந்தர்ப்பவசமாக மூத்த மகனைப் பார்த்து, இளையவனைக் காப்பாற்றும்படி அவனிடம் கூறுகிருன். தம்பியைத் தேடிக்

பரிசுத்த நாடார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கௌரவிக்கப்பட்ட 'கலைஞர் திலகம்' ஸ்ரீதருடன் தஞ்சைக் கலையன்பர்கள் படம் பிடித்துக்கொண்டார்கள்.

கொண்டு ஓடுகிறான் பெரியவனை இன்பசாகரன். அதே சமயம் தம்பியான இந்திரஜித் தனது தாயார் மூலமாக எல்லா விஷயங்களையும் தெரிந்து சாந்தவல்லி சாகவே, தகப்பனையும் தமையனையும் பழிவாங்கத் துடிக்கிறான்.

இருவரும் சந்திக்கும் முன்பு, இன்பசாகரனின் காதலி பூங்கொடியைக் கண்டு இந்திரஜித் தடுமாறுகிறான். அதற்கேற்றாற்போல பூங்கொடியும், செல்வபுரி சிங்காதனமும் இன்பசாகரனுக்கே கிடைக்கின்றன.

இதற்கிடையில் செல்வபுரி தளபதி நாகநாதன் சூழ்ச்சியால் இன்பசாகரனும், இந்திரஜித்தும் கைது செய்யப்படுகின்றனர். சிறையில் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளாமலேயே அன்பாலும் பாசத்தாலும் பிணைக்கப்படுகின்றனர். கடைசியில் சிறையிலிருந்து, இருவரும் தப்பியதும் உண்மை தெரிந்த தம்பி, அண்ணனைக் கொல்லப் போகும்போது, தாயின் ஞாபகமும் அவளது நல்லெண்ணமும் அவனைத் தடுத்துவிடுகின்றன. உடனே தன்னைத் தியாக சீலனாக மாற்றிக்கொண்டு, தமையனுக்கிடப் பட்ட மரண தண்டனையைத் தானே ஏற்றுக்கொள்கிறான்.

அதேசமயம் நாகநாதனை முறியடித்து நாட்டையும் மீட்கிறான் கிழமன்னன். இன்பசாகரன் பூங்கொடியுடன் சுகமாக வாழ்கிறான்.

விமர்சனம்

''பாண்ட் மன்', என்ற ஆங்கிலக் கதையைத் தமிழுக்கு ஏற்ற மாதிரி மாற்றியமைத்து இப் படத்தைத் தயாரித்திருக்கின்றனர். சில இடங்களில் வசனம், உயிர்த் துடிப்புள்ளதாக இருக்கிறது. உணர்ச்சி மயமான கட்டங்களைச் சிருஷ்டிப்பதில் பூரண வெற்றி அடையவில்லை.



கோபி பிரதர்ஸ் ''ஓடாதே! நில்!'' படத்தில் பாலசந்தர், சாந்தினி.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

மாடர்ன் தியேட்டர்ஸ்

தலை கொடுத்தான் தம்பி

திரைக்கதை-வசனம்

பாத்திரங்கள்

மனோகர்	**விஜயன்**
கே. ஆர். ராமசாமி	**இன்பசாகரன்**
எஸ். எஸ். ராஜேந்திரன்	**இந்திரஜித்**
மாலினி	**பூங்கொடி**
என். லலிதா	**சாந்தவல்லி**

வசனம்:

முரசொலி மாறன் எம். ஏ.

டைரக்ஷன்:

டி. ஆர். சுந்தரம்

-VARAN-



அறிமுகம்

பல்வளம் கொழிக்கும் பவழத்தீவு; அங்கேதான் விஜயன் என்பான் வாழ்ந்து வருகிறான். வாலிபன்; ஆணுக்கு ஆண் நின்று பார்க்கும் அழகன். ஒரு சமயம் கர்ப்பவதியான தனது வாழ்க்கைத் துணைவியை விட்டுவிட்டு வாணிபம் செய்வதற்காகக் கப்பல் ஏறிச்செல்வபுரி நோக்கிப் புறப்படுகிறான்.

செல்வபுரி பந்தய மேடையில் அவன் வீரமும் அழகும் கண்ட இளவரசி சாந்தவல்லி அவன் மீது காதல் கொள்கிறாள். தான் திருமணமானவன் என்பதை அவளிடம் மறைத்து அவளுடன் சுகபோக மனுபவிக்கிறான் விஜயன். மன்னர் மருதவாணர், தன் மகள் சாந்தவல்லி ஒரு சாமானியனை மணப்பதை வெறுப்பதால், அரசபோகங்களைத் துறந்து, விஜயனுடன் கிளம்பி யாருமறியாமல், கொல்லி மலைச்சாரலில் ஒய்வு பெற்றுவரும் அரண்மனை வைத்தியர் குளாமணியின் குடிசையில் தங்கியிருக்கிறாள். அவள் கருவுற்றதும் விஜயன் சொல்லாமல் ஊருக்கு ஓடுகிறான். வீட்டினுள் அவன் நுழையும் போது அவன் கையில்

அவன் மகனை ஒப்படைத்துவிட்டு உயிர் விடுகிறாள் முதல் மனைவி. அக்குழந்தையை மைத்துனர் அருளப்பரிடம் ஒப்படைத்து ஆயிரம் பொன் சேர்த்து சாந்தவல்லியுடன் ஆனந்த வாழ்வு நடத்தத் தீர்மானித்துக் கிளம்புகிறான் விஜயன். அருளப்பரின் மகள் பூங்கொடியும் விஜயனின் மகன் இன்பசாகரனும் வளருகின்றனர். அங்கே சாந்தவல்லி ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்து இந்திரஜித் எனப்பெயரிட்டு வளர்க்கிறாள்.

பொருளீட்டுவதற்காகப் பாடுபட்டுவரும் விஜயனின் கைகள் மீது பாறை உருண்டு வந்து ஏறிவிட விழுந்து விடுகிறான். அவன் ஆசைகள் தவிடு பொடியாகின்றன. தன் மகன் இன்பசாகரனை வரவழைக்கிறான். தனியே அழைத்து விவரங்களைக் கூறுகிறான்.

காட்சி 1

அப்பனும் மகனும்

தன் தந்தை கூறும் வரலாறு கேட்டுத் துடிதுடித்துப் போகிறான் இன்பசாகரன்.

இன் : ஏனப்பா இந்தக் காரியம் செய்தீர்கள்? உற்ற மனைவி இருக்கும்போது செல்வபுரி இளவரசியின் வாழ்வை ஏனப்பா சிரழித்தீர்கள்?

விஜ : எதைச் சொல்வேன், எப்படி சொல்வேன்? மகனே. சாந்தவல்லிக்குப் பிறந்திருப்பது ஆண் குழந்தையா பெண் குழந்தையா என்று கூடத்தெரியாது!

இன் : அப்படியானால் அவர்கள்?

விஜ : அதற்காகத் தானடா உன்னைத்தேடி வந்திருக்கிறேன்! எனக்கு வயதாகிவிட்டது. இனிமேல் நீ தான் அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும்! நீ தான் அவர்

ரூ. 1500/– இனாம்

டில்லி 'டெய்லி தேஜ்' முன்னாள் மானேஜர் எல். பிரஹ்ம நந்த்குப்தா எழுதுகிறார்:

''உங்கள் 'நேஷனல் கோல்டு' பார்சல் கிடைக்கப் பெற்றேன். வந்தனம். உண்மையான தங்கத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இல்லாததைக் காண நான் மகிழ்கிறேன். மீண்டும் ஆறு தோலாக்களை மறு தபாலில் அனுப்பவும். மேற்கொண்டு தேவைக்கான குறிப்பு தொடரும்''. உரைகல்லில் தேய்த்தாலும் உண்மை தங்கத்தைப்போல் இருக்கும் இது. இதை கம்பியாகவும் தகடாகவும் அடிக்கலாம். எல்லாவகை ஆபரணங்களும் இதனால் செய்யலாம். அனுபவம் வாய்ந்த தங்க வியாபாரிகளும் இதற்கும் உண்மையான தங்கத்திற்கும் உள்ள வேற்றுமையை எளிதில் கண்டு பிடிக்க முடியாது. மேலே உள்ள சர்டிபிகேட் பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1500 இனாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக தற்போது இதன் விலை ஒரு தோலா ரூ. 2.50. தபால் செலவு தனி. மூன்று தோலாக்கள் ரூ. 7. ஆறு தோலாக்கள் ரூ. 13. பத்து தோலாக்கள் ரூ. 20. அங்கீகரிக்கப்படாவிட்டால் பணத்தை வாபஸ் செய்ய உத்திரவாதம் தருகிறோம். கடிதப் போக்கு வரத்து ஆங்கிலத்தில்.

PRADHAN KARYALA, P.B. 75 (PPM) AMRITSAR

களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களுடைய புனர்வாழ்விற்கு வழி வகுக்கவேண்டும்!

இன்: நானா அப்பா?...

விஜ: இது தானடா உன்னிடன் உன் தந்தை கேட்கும் முதலும் கடைசியுமான வரம். இதை எனக்குச் செய்துகொடு. உன் காலில் விழுந்து வேண்டுமானாலும் கேட்கிறேன், மகனே!

காலில் விழப்போகிறான்.

இன்: அய்யோ அப்பா! வேண்டாம் வேண்டாம்! தந்தை சொல் கேட்காத தனயன் என்னும் மாபெரும் பழி எனக்குச் சேர வேண்டாம்! இப்போதே புறப்படுகிறேன்! அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் வேலையைத் துவக்குகிறேன்!

விஜ: மகனே! அவர்களுக்காக நான் ஆயிரம்பொன் சம்பாதித்து வைத்திருக்கிறேன்! அதையும் எடுத்துச் செல்!

இன்: வேண்டாமப்பா வேண்டாம்! நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்! இப்பரந்த உலகில் எங்கிருந்தாலும் அவர்களைத் தேடிக் கண்டு பிடித்து வாழ்நாள் இறுதி வரை பராமரிக்கும் பொறுப்பு என்னுடையது...என்னுடையது!

விஜ: மகனே! என் மனதிலே பால் வார்த்தாய்! நீதான் என்னுடைய மகன்!

இன்: அப்பா! அப்பா!

அவனைக் கட்டித் தழுவுகிறான். இன்பசாகரன் பாய்மரக் கப்பலில் கிளம்புகிறான்.

காட்சி 2

மகனின் சபதம்

விறகு ஒடிக்கக் காட்டுக்குப் போன சாந்தவல்லியின் மேல் மரம் விழுந்து விடுகிறது. குளாமணியும் இந்திரஜித்தும் தூக்கி வருகின்றனர். வைத்தியர் பச்சிலை கொண்டுவரச் செல்கிறார். இந்திர

ஜித் துடிதுடித்துப் போகிறான். சாந்தவல்லி மகனிடம் மனம்விட்டுப் பேசுகிறாள்.

சாந் : மகனே! ஏன் வீணாகப் பிரயாசைப்படுகிறீர்கள்? எனக்கு நேரம் வந்துவிட்டது.

இந் : அம்மா! அம்மா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அம்மா!

இந்திரஜித் அவள் அருகில் உட்காருகிறான்.

சாந் : கவலைப்படாதே மகனே! நான் என்றைக்கோ இறந்துவிட்டேன்! உன் அப்பா எனக்கு மாலையிடும்போது என் அப்பா இந்த சாந்தவல்லியைப் பிணமாகத்தான் கருதிக் கொண்டிருந்தார்!

இந் : என்னம்மா சொல்கிறீர்கள்?

சாந் : இதுவரை நான் சொல்வதற்குத் தயங்கினேன்! இன்று மனம் திறந்து சொல்கிறேன் மகனே! நீ இந்தக் குடிசையிலே இருக்கும் ஏழை வைத்தியரின் பேரனல்ல! செல்வபுரிச் சக்ரவர்த்தி மருதவாணரின் பேரக் குழந்தை!...

இந் : அப்படியானால் நீங்கள்?

சாந் : நான் செல்வபுரியின் இளவரசி, செல்வபுரியின் இளவரசி!

இந் : பிறகு எப்படியம்மா நமக்கு இந்தக் கதி ஏற்பட்டது?

சாந் : நான் விஜயன் என்னும் பெயர் கொண்ட வாலிபரைக் காதலித்து மணந்தேன்! அவருக்காக அரண்மனை வாழ்வை இழந்தேன்! அரசபோகத்தையும் துறந்தேன்! அவரிடம் என் உயிரையே ஒப்புவித்தேன்.

இந் : பிறகு?

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!



மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவராலும், அல்லது தொலைதூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**

(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

சாந் : (அழுது கொண்டு) பிறகு அவர் உன்னையும், என்னையும் தவிக்கவிட்டு ஓடிவிட்டார்!

இந்திரஜித் ஆத்திரத்துடன் எழுந்து நிற்கிறான்.

இந் : ஓடிவிட்டாரா?

சாந் : பிறகு பவழத் தீவிலிருந்து இங்கு வந்த பிரயாணிகள் மூலம் தெரிந்து கொண்டேன், அவர் என்னைக் காதலிப்பதற்கு முன்பே திருமணமானவர் என்று!

இந் : அம்மா!

சாந் : ஆமாமடா! அவருக்கு ஒரு ஆண் குழந்தையும் உண்டு!

இந் : ஆண் குழந்தை! ஆண் குழந்தை...அம்மா! அவனும் உயிரோடுதானிருக்கிறானா?

சாந் : ஆமாம்; இருவருமே உயிரோடுதான் இருக்கிறார்களாம்! அவர்கள் எங்காவது சௌக்கியமாக இருந்தால் அதுவே எனக்குப் போதும்!

இந் : உம்! சௌக்கியம்! உங்கள் சௌக்கியத்தை சுடுகாட்டுக்கு அனுப்பிவிட்ட அந்த ஓடுகாலிக் கும்பலுக்கு சௌக்கியம்! அம்மா, முடியாது! அந்த மூர்க்கக் கூட்டத்தின் முதுகெலும்பை உடைக்க வேண்டும். அந்த வஞ்சக வம்சத்தை வேரோடு ஒழிக்க வேண்டும்!

சாந் : அய்யோ! வேண்டாம் மகனே, வேண்டாம்!

இந் : அம்மா! வீரத்தை சோரம் போகவிட்ட விஜயன் எனக்குத் தந்தையாக இருந்தாலும், செல்வபுரி இளவரசியின் செல்வப் புதல்வன் நான் என்பதை நீங்கள் கூடவா மறந்துவிட்டீர்கள்? அம்மா! என்னைத் தடுக்காதீர்களம்மா!

1959-60-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1959-60க்குள் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நில புலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)

JULLUNDUR CITY (Punjab)



குள்ள நரிக்குணம் படைத்தோன் இன்னும் உயிரோடு இருக்கிருன்! கூடாது! கூடாது! என் தாயின் நெஞ்சத்திலே தணலை அள்ளிப் போட்டவன் உயிரோடு இருக்கக் கூடாது! என்னை பெற்று வளர்த்த என் தாயே! பூவோடும் மஞ்சளோடும் குங்குமத்தோடும் இம்மண்ணுலகு நீத்த என் மாதாவே! உன்மீது ஆணை! எனது அன்னை சாந்தவல்லி தன் காதலனைக் கைப்பிடித்தபோது சாட்சியாக இருந்த, ஏ சந்திரனே! கண் சிமிட்டி ஆசி கூறிய ஏ நட்சத்திரக் கூட்டமே! கார்முகிலே! கழனிகளே!

சாந் : இந்திரஜித்! இந்திரஜிக்! நான் சொல்வதைக் கேள்! வேண்டாம்! வேண்டாம்!

எழுந்து உட்கார முயன்றவள் திடீரென்று படுக்கையில் விழ்கிருள். அவள் உயிர் பிரிகிறது. இந்திரஜித், ''அம்மா'' என்று அவள்மீது விழுந்து கதறி அழுகிருன். இடி. மின்னல் நிற்கிறது. தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து நிற்கிருன்.

இந் : அம்மா! உன்னை ஒருவன் கொடுமைப்படுத்திஞன்! அந்தக்

ஏ கடவுளே! உங்கள் மீதெல்லாம் ஆணை! நகை முகவல்லியாம் இந்தச் சாந்தவல்லியை நடைப்பிணமாக்கிய நயவஞ்சகனும் அந்த விஜயனை வெட்டி வீழ்த்துகிறேன்! இந்நேரம் அவன் செத்திருந்தால், அவன் திருப்புதல்வனும் திருடனுக்கு வாரிசாம் அந்தப் பொல்லாத மைந்தனைப் படுகொலை செய்து அந்தக் கொடியவரின் கூட்டத்தை பூண்டோடு சாம்பலாக்குகிறேன்! அம்மா! நான் உங்களுக்குப் பிறந்த மகனென்பது உண்மையானால்—என் உடலில் ஓடுவது செல்வபுரி சக்ரவர்த்தியின் ராஜவம்சத்து ரத்தம் எனபது உண்மையானால், என் தாய் கற்புநெறி தவறாத கண்ணகியின் வழித்தோன்றல் என்பது உண்மையானால்; நான் வீரனென்பது உண்மையானால், நான் ஆண மகன் என்பது உண்மையானால், நிறைவேற்றுகிறேன் அம்மா இந்த சபதத்தை... நிறைவேற்றுகிறேன்.

இந்திரஜித் இப்போது குமுறும் எரிமலையாகி விட்டான். அவன் ஆத்திரத்தால் வெறி பிடித்தவனாகி விட்டான். தன் சபதத்தை நிறைவேற்றும் உறுதியோடு நிற்கிறான். வெறி அடங்காத நிலையில் கிளம்பிச் செல்கிறான் அவன்.

இடையே...

செல்வபுரி மன்னர் மருதவாணர், தன் மகள் சாந்தவல்லி தற்கொலை செய்து கொண்டதாகக் கருதி மனமுடைந்து போகிறார். அவரது மனோவேதனை தீர, மணிபுரிமன்னர் அரண்மனைக்குச் சென்று ஓய்வு பெற யோசனை கூறுகிறார் அமைச்சர். நாட்டை அரசர் இல்லாத போது தன் மகன் நாகநாதன் கவனித்துக் கொள்ளுவான் என்று கூறுகிறார். அரசரும் அதை ஏற்கிறார். நாகநாதன் வஞ்சக நெஞ்சம் கொண்டவன். நாட்டைக் கைப்பற்ற அவன் தன் தோழன் நரிக்கண்ணனுடன் திட்டம் தீட்டுகிறான்.

ரூ. 300 இனாம்

இந்த மகாகாளி இயந்திரத் தகடை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கை கூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக் கொண்டு தியானம் பண்ணும்போது, இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3.12 நயா பைசே. உடனே பலன் தெரியக் கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)
JULLUNDUR CITY (Pb)

ஹிமாலயா
புக்கே
டால்கம்
பவுடர்
Himalaya
நாள் முழுதும்
புதுமலர்ச்சி
யுடன்
விளங்க
ERASMIC
Himalaya
Bouquet
TALCUM POWDER
MADE IN INDIA BY HINDUSTAN
• நறுமண-
மோங்குவது
• சிக்கனமிகுந்தது
• குடும்பத்தினர்
அனைவருக்கும் உகந்தது
லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக, ஹிந்துஸ்தான்
லீவர் லிமிடெட்டினல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

காட்சி 3

ஐயோ, அப்பா!

இந்திரஜித்தைத் தேடி செல்வபுரிக்குப் போகிறான் இன்பசாகரன். விஜயனையும் இன்பசாகரனையும் பழி வாங்குவதற்காக பவழத் தீவுக்கு வருகிறான் இந்திரஜித். அங்கே ஒரு குடிசை தீப்பற்றி எரிவதைக் காண்கிறான். உள்ளிருப்பவன் விஜயன் என்பதறியாமல், தீரமுடன் சென்று, அவனை அப்புறப்படுத்தி விட்டுப் போகிறான். விஜயன் அவனை அழைத்து வரச் செய்கிறான்.

விஜ: தம்பி...என்னை காப்பாற்றியதற்கு மிக்க நன்றி. ரொம்ப நன்றி. நீ யார்?

இந்: நான் செல்வபுரிக்காரன்?

விஜ: ஆ...செல்வபுரியா? உங்க அப்பா பேரு?

இந்: எனக்கு அப்பா இல்லை!

விஜ: நீ சின்ன பிள்ளையா இருக்கிறப்பொவே இறந்து போய்ட்டாரா?

இந்: இல்லை...!

விஜ: இல்லேன்னா நீ பிறக்கிறதுக்கு முன்னாடியே தவறிப் போய்ட்டாரா?

இந்: இல்லை! இல்லை!

விஜ: அப்ப இன்னும் உயிரோட இருக்காரா?

இந்: தயவு செய்து பேசாதீர்கள் அதைப்பற்றி!

விஜ: ஏன் தம்பி... உனக்கோ உன் அம்மாவுக்கோ அவர் ஏதாச்சும் கொடுமை செஞ்சுட்டாரா?

இந்: ஆமாம்...அப்படித்தான். கொடுமைதான் செய்துவிட்டார்.

விஜ: உங்க அப்பாவோட பேரு என்ன தம்பி?

இந்; என்னை விடமாட்டீர்கள் போலிருக்கிறதே? இதற்கெல்

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.
3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

* REGISTERED USERS OF TRADE MARK AND SOLE AGENTS.

MARTIN & HARRIS (PRIVATE) LTD.

CALCUTTA · BOMBAY · MADRAS · DELHI T

லாம் பதில் சொல்லத் தயாரா யில்லை நான்?

விஜ : கோவிச்சுக்காதே தம்பி! உன் மனசைக் கஷ்டப்படுத்தி யிருந்தா என்னை மன்னிச்சுடு! இப்படி வா தம்பி! தம்பி இங்கே ஒரு பை இருக்கிறது. அதை எடு.

இந்திரஜித் எடுக்கிறான்.

விஜ : அதில் ஆயிரம் பொன் இருககிறது...என் உயிரை காப் பாற்றியதற்கு கைமாறு! அதை வைத்துக்கொள்!

இங் : உம்! கைம்மாறு கருதி செய்யப்படுவது உதவியல்ல பெரி யவரே! ஊழியம்! எனக்கு இது தேவையில்லை!

விஜ: ஆ, அப்படி சொல்லாதே! நீ என் மகனைப்போல! என் மக னைப்போல! தட்டாம எடுத் துக்கோ மகனே, எடுத்துக்கோ!

இங் : ஊஹூம்! தயவு செய்து வற்புறுத்தாதீர்கள்.

ரூ. 6-க்கு கைக்கடிகாரம்



செயின் சிஸ்டத்தில் வருட கியாரண்டியுடன் அளிக்கப்படும். 15 ஜுவல்ஸ் கைகடிகாரத்தை ரூ. 6க்கு பெறுங்கள்.

தபால் செலவு ரூ. 1.25 தனி.

குறிப்பு : எங்கள் ஹனி மூன் சென்டை பிரபலப்படுத்தவே இத் திட்டம். திட்டம் (Scheme) உங்களுக்கு பிடிக்கவில்லையானால் பணம் வாபஸ் செய்யப்படும்.

London Trading Agency,
(Watch Suppliers-P.P-3)
JULLUNDUR CITY.

விஜ : தம்பி! சாகப்போற நேரத்துலே இதை நீ எடுக்க லேன்னு என் உயிர் கஷ்டப்பட்டு கிட்டேதான் போகும்! என் மன நிம்மதிக்காக இதை எடுத்துக்கோ மகனே, எடுத்துக்கோ!

இங் : சரி! நான் வருகிறேன்.

இந்திரஜித் பையை எடுத்துக் கொண்டு போகிறான். 'ஆ' என்ற விஜயனின் அலறல்கேட்டு திரும்பு கிறான். அவன் உடலைத் தொட்டுப் பார்க்கிறான் இந்திரஜித்.

இங் : அய்யையோ! உடம்பெல் லாம் அனலா கொதிக்குதே! அய்யா! அய்யா!

விஜயன் மயக்கமுற்ற நிலையில் உளறுகிறான்.

விஜ : சாந்தவல்லி! சாந்த வல்லி!

இங் : (திடுக்கிட்டு) சாந்த வல்லி...!

விஜ : சாந்தவல்லி....நான் மோசக்காரன். என்னை மன்னித்து விடு, மன்னித்துவிடு!

இங் : ஆ! விஜயன்! நான் தேடி வந்த விஜயன்! என் தாயின் வாழ்வை விஷமாக்கிய விரியன் பாம்பு...விஜயன்!

இந்திரஜித் விஜயனை கோபத் துடன் குலுக்குகிறான். விஜயன் சிறிது சிறிதாக மயக்கம் தெளி கிறான்.

இங் : முள்ளம்பன்றியிலும் கொடிய மூர்க்கனே! யானையைக் காட்டிலும் மதிபூந்த துன்மார்க் கனே! கற்பு நெறி என்பது கட் டுக்கதை என்று கருதிக்கொண் டிருக்கும் கயவனே! என்ன காரி யம் செய்தாய்? சீரும் சிறப்புமிக்க செல்வபுரி சாம்ராஜ்யத்தில் செல் வக் களஞ்சியம் என் தாய்; அவ ளையா நீ சீரழித்தாய்? சிந்துபாடும் அருவியைப்போல் அன்புக் காட் டும் அமுது ஊற்று என் தாய்; அவளையா நீ ஆழக்குழித் தோண் டிப் புதைத்தாய்? கொண்டல் தரும் நறுமழைப்போல் கருணை காட்டும் குலதெய்வம் என் தாய்; அவளையா நீ குப்பையில் எறிந் தாய்? கொடியவனே! கொள்கை

நீங்கள்
கஷ்டப்படுகிறீர்களா?
அந்த நோவைத்தரும் இருமலை
நிச்சயமாக சமிப்பிக்க
உபயோகியுங்கள்
டஸ்ஸனல்
கப் சிறப்
TUSSANOL

சிறிதுமிலா உனக்கா நான் மக ஞகப் பிறந்தேன்? உனக்கா நான் மகஞகப் பிறந்தேன்?

விஜயன் எழுந்து உட்காருகிருன்.

விஜ: ஆ...! நீ என் மகஞ? என் மகஞ?

இந்: இல்லே! நான் உன் மக னில்லே. உன் உயிரைப் பொசுக்க வந்த எமன்! எமன்! (**அரிவாளேப் போய் எடுத்துக்கொண்டு**) உன்னே என்ன செய்கிறேன் பார்! வெட்டி வீழ்த்துகிறேன் உன்னே! பிளக் தெறிகிறேன் உன் பிடரியை! உருத்தெரியாமல் ஆக்குகிறேன் உன் உடலே!

வைத்தியர் ஓடிவந்து பிடித்துக் கொள்கிருர்.

வைத்: தம்பி, வேண்டாம் தம்பி!

இந்: தடுக்காதீர்கள் என்னே. இவன் தலே தனியாக தரையிலே உருள வேண்டும். இது என் சபதம்...சபதம்!

விஜ: மகனே! மகனே! என் னேக் கொல்லாதே மகனே! உன் தாயைக் கொடுமை செய்த விஜயன் முன்பே செத்துவிட் டான்! நான் திருந்திய விஜயன். மகனே கொல்லாதே, என்னேக் கொல்லாதே! என் அன்பு மகனே! ஆசை மகனே! நான் தான் உன் அப்பா! மகனே, மகனே!

அவன் பாதத்தில் விழுகிருன். அவன் உயிர் பிரிகிறது. இந்திர ஜித்தின் கையிலிருந்த அரிவாள் கீழே விழுகிறது.

இந்: அப்பா!

பிணத்தின்மேல் விழுந்து கதறு கிருன்.

இடையே

இன்பசாகரன் குளாமணியைச் சந்தித்து சிற்றன்னே மாண்ட செய்தி யறிந்து வருந்துகிருன். இந்திரஜித் காணவில்லே என்ற செய்தியறிந்து அவன் வருந்தும் போது, உடல் அடையாளம் தெரி யாத பிணம் அழுகிய நிலேயில் கிடப்பதாகச் செய்தி கேட்டு யாவ ரும் ஓடுகிருர்கள். இறந்தது இந்திர ஜித்தே என்று தீர்மானித்த வைத் தியர் சாந்தவல்லியின் வாரிசான இன்பசாகரன்பற்றி அரசரிடம் கூறி அவனே இளவரசனுக்குகிருர். நாகநாதன், நரசிம்மன், நரிக்கண் ணன் முதலியோர் இன்பசாகரனே ஒழிக்கத் திட்டம் தீட்டுகின்றனர். நாகநாதனின் காதலி மோகஞ திட் டத்திற்குத் தூபம் போடுகிருள்.

அருளப்பரின் மகள் பூங்கொடி இன்பசாகரனின் காதலி. அவனேப் பிரிந்து அவள் வருந்துகிருள். அரு ளப்பரின் மூத்த சகோதரி புனிதை. அவளது இளேய சகோதரியின் மகன் மன்மதன் ஒரு அசடு. அவன் பூங்கொடியை மணக்க விரும்புகிருன். அங்கிருக்கும் ரதி, மன்மதனே விரும்புகிருள். துர திருஷ்டவசமாக ஆயிரம் பொன் னுக்கு அதிபதியான இந்திரஜித் திற்கே பூங்கொடியை மணமுடிக்க ஏற்பாடு செய்கிருள் புனிதை. பூங் கொடியை உடனே வருமாறு ரகசி யச் செய்தி அனுப்புகிருன் இன்ப சாகரன். மன்மதனே மணப்பெண் ணுக்கி வீட்டு, மறைந்து விடுகிருள் பூங்கொடி. மணமேடையில் ஏமாற் றத்தால் மனம் கொதிக்கும் இந் திரஜித் தன் சபதத்தை நினேத்து, செல்வபுரிக்குப் புறப்படுகிருன். அப்போது இன்பசாகரன் வேட் டைக்குப் போயிருக்கிருன். மன்ன ரும் மணிபுரிக்குப் போயிருக்கிருர். ஆகவே இன்பசாகரனேத் தீர்க்கத் திட்டமிடுகிருன் நாகநாதன்.

காட்சி 4

மனேவியின் கடமை

இந்திரஜித் இன்பசாகரனின் இருப்பிடம் செல்கிருன். அங்கே அவன் பூங்கொடியைச் சந்திக்கி ருன். அவனே அங்கே கண்ட பூங் கொடி திடுக்கிடுகிருள்.

பூங்: ஆ! இந்திரஜித்! தங்களா? இந்த நள்ளிரவில் ஏன் இங்கே வந்தீர்கள்?

இந்: உன்னேத் தேடி வர வில்லே...

பூங்: பிறகு எதற்காக வந்தீர் கள்?...

இந்: பசி...பசி...தாங்க முடி யாத இரத்தப்பசி!

கட்டாரியை உருவி சுற்றுமுற்றும் பார்க்கிருன்.

பூங் : தெரிந்து கொண்டேன், உங்கள் திடீர் விஜயத்தின் காரணத்தை! அன்று தாலி கட்டப் போகும் நேரத்தில் ஓடி வந்ததற்காக என்னைத் தண்டிக்க வந்திருக்கிறீர்கள்!...

இங் : ஹூம், பைத்தியக்காரப் பெண்ணே! சந்தனம் போல குளிர்ச்சி வழங்கும் உன் தந்தம் நிகர் மேனியில் ஒரு சிறு துரும்பு விழும் துன்பத்தைக்கூட உனக்கு நான் தரமாட்டேன்...

பூங் : அப்படியானல் கொலைகாரன் போல் கையில் கட்டாரி எதற்கு, இந்திரஜித்?

இங் : சொன்னலும் உனக்குப் புரியாது! அந்த இன்பசாகரன் இரத்தசாகரத்தில் மிதக்கவேண்டும்! என் ஜீவ லட்சியம் பூர்த்தியாக வேண்டும்!...

பூங் : ஐயோ...வெறி பிடித்தவர் போலப்பேசுகிறீர்களே! அவர் உங்களுக்கு என்ன தீங்கு செய்தார்?

இங் : ஹூம்! அவன் உயிரோடிருப்பதே இந்த உலகத்திற்கு மாபெரும் தீங்காகும்?

பூங் : புரியவில்லையே!

இங் : புரியாதுதான்! அவன் என் தாயை வஞ்சித்த விஜயனுக்கு மைந்தன் ... விஜயனுக்கு மைந்தன்.

பூங் : அவர் உங்கள் அண்ணன்!

இங் : அண்ணன்! ம்......பூங்கொடி! இன்பசாகரன் இந்த உலகத்திலே பிறந்ததால்தான் எனக்குச் சேரவேண்டிய இந்த நாட்டின் அரசுரிமையையும் அவனல் அபகரிக்க முடிந்தது. பூங்கொடி! உன்னிடம் நான் விவாதம் செய்ய வரவில்லை! உண்மையைச் சொல்; எங்கே அவன்? எங்கே அவன்?

பூங் : நல்லவேளை நான் செய்த புண்ணியம்; அவர் இங்கு இல்லை: வேட்டைக்குப் போயிருக்கிருர்!

இங் : ஆஹா! அருமையான சந்தர்ப்பம்! அருமையான சந்தர்ப்

சிரஞ்சீவியின் புது நாவல்

துப்பறியும் நாவல்கள் எது தேவையானலும் எமக்கு எழுதுங்கள். உங்களுக்கு லாபம் அதிகம் கிடைக்கும்.

சிரஞ்சீவியின்
அடுத்த நாவல்
காட்டுப்பாக்கம்
கண்ணம்மா

அமர நிலையம்
சென்னை - 24.

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்திலல் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப்புரிந்து கொள்வார்கள் பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 4.

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ.வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

பம்! வேட்டைக்குப் போயிருக்கும் அந்தப் போலி வேந்தனை நடு காட்டிலேயே வேட்டையாடுகிறேன்... வேட்டையாடுகிறேன்!

போக முயற்சிக்கிருன். அவனை ஓடித் தடுக்கிருள் பூங்கொடி.

பூங் : அய்யோ.....வேண்டாம்! வேண்டாம்!! என்னைக் கொல்லுங்கள்! அவரை ஒன்றும் செய்யாதீர்கள்; அவரை ஒன்றும் செய்யாதீர்கள்!

இங் : கண்ணீர் சிந்தி சிந்தி ஒளிமாறிப்போன கண்களுக்கு நீ சிந்துகிற கண்ணீர் தெரியவில்லை பூங்கொடி; வழி விடு!

பூங் : முடியாது!

இர் : துடிக்கும் என் ரத்த தாசத்திற்குத் தடையாக இருக்காதே! ஹூம், தள்ளிப்போ!...

பூங் : வேண்டாம் வேண்டாம்!

அவளைத் தள்ளிவிட்டுபோகிருன்.

பூங் : என்னை மன்னித்து விடுங்கள்! அவரை ஒன்றும் செய்யாதீர்கள்!

இன் : பூங்கொடி! நான் மிகவும் பொல்லாதவன். என்னைப் போகவிடு!

பூங் : முடியாது! அவருக்கு எந்தவிதத் திங்கும் செய்யமாட்டேன் என்று உறுதியளித்தால் தான் உங்களைப் போகவிடுவேன்!

இங் : உறுதியாகவே சொல்கிறேன்! அவனைக் கொலை செய்யாமல் இந்தக் கட்டாரியை மூட மாட்டேன்! ஹூம்!...

அவளைப் பிடித்துத் தள்ளுகிருன். பூங்கொடி கீழே விழுகிருள். இந்திரஜித் மூடியிருக்கும் கதவைத் திறக்க முயலுகிருன்.

பூங் : சிப்பாய்! சிப்பாய்! பிடியுங்கள் இவரை. பிடியுங்கள் இவரை!

இந்திரஜித் கதவைத் திறக்க சிப்பாய்கள் உள் நுழைகின்றனர். இந்திரஜித் பூங்கொடியிடம் திரும்பி வருகிருன்.

இங் : என்ன இதெல்லாம்?

பூங் : இதுவா? திருமணமான பெண்ணுக்கு கணவன் தான் தெய்வம் என்பதை உணர்த்துகிற அடையாளம். சிப்பாய்! இவர் இளவரசரைக் கொலை செய்ய வந்தார்! இவரைக் கைது செய்து கொண்டு போங்கள்! ஹூம்!...

(113-ம் பக்கம் பார்க்க)

கண்களிலிருந்து நீர்த்துளி கிளம்பி, வழியாமல் முத்தாக நிற்கிறதென்றால் "நாடகமே உலகம்" என்ற வைராக்கியம் அவளுக்கு ஏற்பட்டு விட்டதென்று அர்த்தம்! பராசக்தியின் 'நாடகமே உலகம்' படத்தில் எஸ்.வரலக்ஷ்மி.

நான் ரசித்த காட்சி

தலைகொடுத்தான் தம்பி

இந்திரஜித் இளவரசன் இன்பசாகரனைக் கொல்ல முயற்சித்த குற்றத்திற்காக பொதிகைமலைச்சுரங்கத்தில் சிறையிடப்பட வேண்டும் என்று தீர்ப்பு கூறுகிறார் நீதிபதி. இன்பசாகரன் வேட்டை முடிந்து திரும்பியதும் இந்தச் செய்தியைக் கூறுகிறார். இந்திரஜித்தை விடுதலை செய்து அழைத்து வரும்படிக் கூறுகிறான் இன்பசாகரன். அவன மனைவி பூங்கொடி இது தவறு என்கிறாள். இந்திரஜித் தனது சகோதரனாகத்தானிருக்க வேண்டுமென்று கருதும் இன்பசாகரன் ''அவன் நாட்டை நான் அபகரித்துக் கொண்டதற்காக அவனுக்கு என் மீது கோபமிருப்பது இயற்கை தானே!'' என்று மனைவிக்குத் தேறுதல் கூறுகிறான். நேர்மையாளனின் மனப் பண்பை விளக்கும் ரசமான காட்சி இது.

சி. த. பிரேம்குமாரி,
மதுரை.

வில்லனுக்குரிய மிடுக்குடன் காட்சி தரும் இளம் நடிகர் கே. கண்ணன். ஸ்ரீ ஜெய மாருதியின் 'படிதாண்டா பத்தினி'யில் இவர் நடித்து வருகிறார்.

தன் வைரியான இன்பசாகரனை தீர்த்துக் கட்டும் நோக்கத்தோடு அந்தப்புரத்தில் நுழையும் இந்திரஜித், அங்கே பூங்கொடியைக் கண்டதும் மனம் கொதித்துப் போகிறான். அவள் எவ்வளவு எடுத்துக் கூறியும் கேளாது, இன்பசாகரனை ஒழிப்பேன் என்ற உறுதியுடன் கிளம்புகிறான். வெளியேற முயற்சிக்கும் இந்திரஜித்தை, ''சிப்பாய்! அவனைப் பிடியுங்கள்!'' என்று கூவி, சிறைப்படுத்துகிறாள். ''என்ன இதெல்லாம்?'' என்கிறான், 'ஒரு மனைவி தன் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமை!' என்கிறாள் சாவதானமாக. மனைவியின் கடமையை விளக்கும் அருமையான காட்சி இது.

ஸி. ராஜம்,
திருச்சி.

தண்டனை யனுபவிக்கும் இன்பசாகரன் கொடுமைப்படுத்தப் படுவதைப் பார்க்கிறான் இந்திரஜித் அவனால் தாங்க முடியவில்லை. உடனே சென்று சிப்பாயைத் துரத்துகிறான். தன் கையால் கசையடி கொடுக்கவும் மறுக்கிறான். அவனை தன் தம்பி என்று கூறுகிறான் இன்பன் 'அண்ணா!' என்கிறான் இந்திரஜித். என்னதான் ஆத்திரத்தில் அறிவிழந்தாலும் இயற்கையாகவுள்ள ரத்தபாசத்தை வெல்ல யாராலும் முடியாது என்பதை நிரூபிக்கும் ரசமான காட்சி இது.

சுஜாதா,
சென்னை.

இந்திரஜித், தன் கூடப்பிறந்தவனும் நேர்மையாளனுமான இன்பசாகரனைக் காப்பாற்றத் தன் உயிரையே பணயம் வைக்க துணிகிறான். அவன் எதேச்சையாகப் பூங்கொடியைச் சந்திக்கிறான். அண்ணனைப் பழிவாங்கும் நோக்கத்தோடுதான் அவன் அலைகிறான்

என்று தீர்மானிக்கிருள் அவள். அவன் என்ன சொல்லியும் அவனிடம் அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. தான் திருந்திவிட்டதை விளக்கிவிட்டுக் கிளம்புகிருன். அவன் வார்த்தைகளில் காணப்படும் உறுதியிலிருந்து அவன் சாகத் தீர்மானித்திருக்கிருன் என்றறிந்து திடுக்கிடும் பூங்கொடி அவனைத் தடுக்கிருள். ஆனல், அழுது கொண்டே பிறந்த தான், சிரித்துக் கொண்டே சாகப் போவதாக இந்திரஜித் கூறும்போது நம் இதயமே வெடித்து விடும்போலிருக்கிறது. இந்திரஜித் இளவரசனுகப் பிறந்தான்; ராஜ்யம் கிட்டவில்லை; அம்மா இறந்தாள்; அப்பனை இழந்தான். அவன் விரும்பிய பூங்கொடி அண்ணியாகிவிட்டாள். வாழ்விலே தோல்வி கண்ட அவன், சாகத்துணிகிருன். அண்ணனைக் கொல்ல வந்த அவன் தன்னைக் கொன்று அண்ணனைக் காப்பாற்றத் துணிகிருன். துன்பம் தொடர்ந்து வரும் என்பார்கள். இந்திரஜித் பிறந்தது முதல் அவனைத் தொடர்ந்து துன்புறுத்தும் துன்பப்பிசாசு அவன் சாகுமட்டும் அவனை விடவில்லை. அவன் தியாகம் நம்மை மனம் நெகிழச் செய்கிறது. லக்ஷியவாதிகள் எப்படி இருப்பார்கள் என்பதை இப்பாத்திரம் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. படம் பார்ப்போர் உள்ளத்தில் வேதனையைப் படரச் செய்யும் உருக்கமான காட்சி இது. நெஞ்சைவிட்டு அகலாத காட்சி.

பி. எஸ். சுப்பிரமணியம்,
கடலூர்.

என். ஆர். புரொடக்ஷன்ஸாரின் ''பட்டி விக்கிரமாதித்தன்'' தமிழ்ப் படத்தில் என். டி. ராமராவ், அஞ்சலிதேவி.

கலைவாணன்

அண்ணனின் உத்தரவால் வீட்டைவிட்டு வெளியேறுகிறான் காசிநாத். அண்ணன் விசுவநாத சாஸ்திரி அமுதுண்ண அமருகிறார். தனக்குப் பக்கத்திலே ஒரு இலை போடப்பட்டிருப்பதை காண்கிறார். ''என்ன பார்வதி இது? இந்த இலை யாருக்கு?'' என்று கேட்கிறார். பார்வதி அவர் அப்படிக் கேட்டவுடனே கேவிக்கேவி அழுதபடி அங்கிருந்து சென்று விடுகிறாள். குழந்தையில்லாத பார்வதி, காசியை தன் மகன்போல் வளர்த்து வந்தாள். வழக்கமாகப் போடுவதுபோல் இரண்டு இலைகளைப் போட்டு விடுகிறாள். வளர்த்த பாசத்தின் பெருமையை விளக்கும் அருமையான காட்சி இது.

சாரு—சீனு,
திருமயிலை.

முத்தமிழ் விழாவிலே காசிநாத்தின் திறமை சோதிக்கப்பட வேண்டும் என்கிறாள் ராஜநர்த்தகி அமிர்தம். காசிநாத் அதியற்புதமாகப் பாடி பண்டிதர்களையும் மகாராஜாவையும் மனமகிழச் செய்து விடுகிறான். காசியின் குருதேவர் ஏகம்பவாணர் அவனைப்பற்றிப் பேசுகிறார். அவர் ஜாதி வெறி பிடித்தவர்தான். ஆனாலும் கலைக்கு ஜாதி மத பேதம் கிடையாது என்பதை உணர்ந்ததும் கலையைப்பற்றி மட்டுமே அக்கறை கொள்ளுகிறார். ''காசிநாத் என் சிஷ்யன் என்று தெரிந்திருந்தால் அமிர்தம் இப்படிச் சோதனையில் இறங்கியிருக்க மாட்டாள்'' என்கிறார் அவர். அவரது மாணவனுக்குப் பட்டம் கிடைக்கிறது. அவன் ஒரு கலைஞர் திலகம் என்பதை அவர் பெருமையோடு கூறுகிறார். 'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச்



இவர்களிருவரையும் பார்த்தால் காதலர்களைப்போல் தோன்றுகிறது! — சந்திர தாரா புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் ''நாடோடிகள்'' படத்தில் பிரேம் நவாஸ், அம்பிகா.

இவர்களைப் பார்த்தால் கணவன்—மனைவியாகத்:தோன்றுகிறது! பிரண்ட் பிக்சர்ஸ் உருவாக்கி வரும் ''தங்கம் மனசு தங்கம்'' தமிழ்ப் படத்தில் பிரேம்நசீர், எம். என். ராஜம்.

சான்றோனெனக் கேட்ட தாய்' என்ற வள்ளுவன் வாக்கு நினைவுக்கு வருகிறது நமக்கு. அருமையான போதனைக் காட்சி இது.

ரா. ஆறுமுகம்,
பாண்டிச்சேரி.

காசிநாத்தையும் விசுவநாத சாஸ்திரியையும் தண்டிக்க பிராமண மகாசபை கூடியிருக்கிறது. விஸ்வநாதன் பரம்பரை கௌரவத்தையும் ஊருடன் ஒத்துவாழ்தலையும் விரும்புகிறவர். ஆகவே கற்சிலையாக நிற்கிறார். தம்பி காசிநாத் அங்கே வருகிறான். ஊர்ப் பெரிய மனிதர்களிடம் வாதாடுகிறான். ஜாதி வெறிகொண்ட அவர்களைத் திருப்தி செய்ய முடியாத காசிநாத் பூணூலைக் கூட அறுத்தெறிந்து விட்டு, தன் அண்ணனுக்கும் அண்ணிக்கும் பழி ஏற்படக்கூடாது என்பதற்காக அங்கிருந்து வெளியேறி விடுகிறான். இந்தக் காட்சி நல்ல நீதியைப் போதிக்கிறது.

ஆர். சிவராமன்,
கோயமுத்தூர்.

வீரபாண்டிய கட்டபொம்மன்

தன் தம்பி ஊமைத்துரையின் மகள் மீனாவை தெய்வமாக மதிக்கிறான் கட்டபொம்மன். வருவதை முன்கூட்டிச் சொல்லும் தெய்வப் பிறவி மீனாவிடம் அவன் தன் உயிரையே வைத்திருக்கிறான். போர்க்களத்திலே கட்டபொம்மன் தோல்வி காண ஆரம்பிக்கும் போது, மீனாவை அங்கே தூக்கி வருகிறாள் சுந்தரவடிவு. மரணத் தறுவாயில் நிற்கும் மீனா, "சண்டையிலே தோத்துட்டியா?"

பொன்னலூரி பிரதர்ஸாரின் "தெய்வபலம்" தமிழ்ப் படத்தில் புதுமுகம் ஜெயஸ்ரீ.

என்று கேட்கிறாள். தன் தோல்வி அவள் உயிரைக் குடித்து விடும் என்பதற்காக. "நான் ஜெயிக்கிறேன்" என்று கூறுகிறான் கட்டபொம்மன். "இல்லை. நீ பொய் சொல்றே...நான் மொதல்லே போறேம்பா" என்று கூறிச் செத்து விடுகிறது அந்தத் தெய்வப் பிறவி. கட்டபொம்மன் ஒரு வீரன். சாவுக் கஞ்சாத தீரன். மீனாவின் மரணம் அவன் மனதை உலுப்பி விடுகிறது. போர்க்களத்திலே ஒப்பாரி வைக்கிறான் அவன். அந்தவீரன் நெஞ்சம் கலங்குவது அதுதான் முதல் தடவை. ஆகவே சுந்தர வடிவு துடித்துப்போகிறாள். வளர்த்த பாசம் பளிச்சிடும் சோக மயமான காட்சி இது. கணேசன் அற்புதமாக நடித்திருக்கிறார்.

எஸ். கண்மணி,
சென்னை.

அடப்பக்காரன் இறந்து விடுகிறான். அவன் தாய் கதறுகிறாள். "எனக்கு எள்ளுநீர் இறைக்க யாரிருக்கிறார்கள்?' என்று கதறும் அவள், மகனின் சடலத்தைத் தாங்கியபடி, "அம்மாவென்று அழை அம்மா...அம்மா..." என்று அலறுகிறாள். கூடவே, "அம்மா... அம்மா...!!" என்ற குரல் கேட்கிறது. நம் உடல் புல்லரிக்கிறது. ஆம், கட்டபொம்மன்தான் அடப்பக்காரனின் தாயை "அம்மா... அம்மா!" என்று அழைக்கிறான். தன்னையே இனி அவள் மகன் என்று கொள்ளலாம் என்று அவளிடம் கூறுகிறான் கட்டபொம்மன். குடிமக்கள் குறைதீர்க்கும் நேர்மையாளனல்லவா கட்டபொம்மன்? மகனை இழந்த தாய்க்கு அவனே மகனாகிறான். மன்னனின் மாண்பை விளக்கும் அருமையான காட்சி இது

ஸம்பத்,
சென்னை.

ஐயோ, இதுக்குப் போட்டோவுக்குப் போஸ் குடுக்கத் தெரியல்லியே! — ஸ்ரீ ஜெயமாருதியின் 'படிதாண்டா பத்தினி'யில் வி. ஆர். ராஜகோபால், புதுமுகம் லலிதா.

"போ! தைரியத்துடன் போய் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு வா!" என்று அவளைத் தூண்டிவிடுகிறாரா அவர்?—என். ஆர். புரொடக்ஷன்ஸ் 'பார்த்திபன் மகன்' தமிழ்ப் படத்தில் என். டி. ராமராவ்-எஸ். வரலக்ஷ்மி.

சென்னை ஹைகோர்ட்டு நீதிபதி புகழ்கிறார்!

இந்தியாவின் மிகப்பெரிய தந்திர யோகியும், உலகின் பல்வேறு பாகங்களைச் சார்ந்த பிரமுகர்களாலும் "ஆபூர்வசக்தி வாய்ந்தவர்" என்று புகழப்பட்டவருமான புரபஸர் R. T. தேவரின் ஆன்மீக சக்தியை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். வியாபாரம், தாவாக்கள், உத்தியோக விஷயம், கிரஹதோஷம் முதலானவைகள், மற்றும் உங்கள் பிரச்சனை எதுவாயினும் இவருக்குத் தெரிவித்து சிறந்த பரிகாரம் தேடிக்கொள்ளலாம். பதிலும், விபரங்கள் அடங்கிய புத்தகமும் பெற விரும்புவோர் 25 nP. ஸ்டாம்பு அனுப்பவும். இவருடைய அபார சக்தியை புகழ்ந்து அத்தாட்சி அளித்த அநேகரில் கீழ்க்கண்டவர்கள் சிலர்.

சென்னை ஹைகோர்ட் நீதிபதிஹானரபிள் ஸ்ரீ Ch. ராகவராவ் 22-3-52ல் எழுதுவதாவது:- ஸ்ரீமான் R. T. தேவர் பெருங்கீர்த்தி வாய்ந்தவர். இவர் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமிக்கு ஆழ்ந்த பக்தர். வாழ்க்கையில் வெற்றி காணும் பொருட்டு ரக்ஷை தயாரிப்பது அவருக்கு பூர்வீகமாக அடைந்த கலையாக விளங்குகிறது.

ஸ்ரீ. A. V. லோகநாதன், I. A. S., ஜில்லா கலெக்டெர், தஞ்சாவூர்:- நான் புரபஸர் R. T. தேவர் அவர்களுடன் 1935-ம் வருடத்திலிருந்து தொடர்பு கொண்டு வந்திருக்கிறேன். தன்னுடைய அதிசயக்கப்படும்படியான ஆன்மீக சக்தியால் தேவைப்படுகிறவர்களுக்கு பரிகாரம் தேடிக் கொடுக்கும் ஆற்றல் உடையவர் இவர். நான் மனக்கவலையுடன் இருந்த வேளையில் இவர் தாயத்து உடனே நிவாரணம் அளித்தது. தவிர, உத்தியோக உயர்வும் கிடைத்தது.

ஸ்ரீ V. P. ராவ், B.E., எக்சிகியூடிவ் என்ஜினீயர், 'P.W.D.' கோதாவரி ஸ்பெஷல் டிவிஷன், எளூரு:- அன்புள்ள ஐயா, இதுவரையிலும் என்னுடைய உத்தியோகத் துறையில் உங்களுடைய சக்தி வாய்ந்த கவசம் கொடுத்து வந்த பலன்களுக்காக நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

ஸ்ரீ C. N. ராஜாராம், B.A., B.Sc., டிவிஷனல் எலெக்ட்ரிகல் என்ஜினீயர், சர்க்கார் மின்சார இலாக்கா, மேட்டூர் டேம்.- உங்களுடைய கவசத்தின் அபூர்வ பலனைகளைக்காண மிக மிக திருப்தி அடைகிறேன். ஓரிரு மாதங்களில் உங்களை நேரில் சந்திக்க விரும்புகிறேன். அப்பொழுது கவசத்தின் அதிசயங்களைப் பற்றி சொல்லுகிறேன்.

மிஸ்டர் B. ஷேக் உமர், B.E., M.C.E., M.A.C.I., M.A.R.B.A., M.A.H.R.B., டிவிஷனல் இன்ஜினீயர் (ஹைவேஸ்) சேந்தமங்கலம்:- கவசம் எனக்கு ஆச்சரியமான பலனைக் கொடுத்துள்ளது. அதனுடைய அதிசயிக்கத்தக்க பலன்களைப் பற்றி நேரில் சொல்லுகிறேன். தாங்கள் உண்மையிலேயே அபூர்வ சக்தி வாய்ந்த அதிசயமனிதர்தான்.

ஸ்ரீ A. நமசிவாயம், B.A., ஜில்லா லேபர் ஆபீசர் (கெஜடட்) வெல்லூர்:- அன்புள்ள சுவாமிகளே! தங்களுடைய கவசத்தை உபயோகிப்பவர்களுக்கு வெகு விரைவில் அபூர்வ பலன் அளிக்கிறது. அதை உபயோகித்த மிக சொற்ப காலத்திலேயே எனக்கு கெஜடட் பதவியாகிய ஜில்லா லேபர் ஆபீசர் பதவி கிடைத்திருக்கிறது.

புரபஸர் R. T. தேவர்,

தபால்பெட்டி எண் 14, பழனி, தென் இந்தியா.

கல்பனா கலா மந்திரின்
தாய் மகளுக்குக்
கட்டிய தாலி
VARAN
..காட்சிகள்..



கல்பனா கலாமந்
திரின் 'தாய் மக
ளுக்குக் கட்டிய
தாலி'' தமிழ்ப்
படம் ஒரு நல்ல
சமூகப் படம்.



'புரட்சி நடிகர்'
எம். ஜி. ராமச்
சந்திரன் இதில்
அருமையாக
நடித்திருக்கிறார்

லக்மே

டால்கம் பௌடர்

லக்மே டால்கம் பௌடரின் நீடித்து நிற்கும் நறுமணத்தை அனுபவியுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்க—பாரிஸில் உண்டாக்கப்பட்ட மூன்று பிரத்தியேகமான வாசனைகள் கலந்து இருக்கும் டால்கம் பௌடர். இந்த ஆடம்பர டால்கத்தின், பட்டைவிட மிருதுவான உணர்ச்சியை அனுபவியுங்கள். அலங்காரம் லக்மேயுடன் ஆரம்பமாகிறது.

Lakmé லக்மே – ஒரு டாடா தயாரிப்பு

LKY-6(T)

திரை மறைவில் கலை நிபுணர்

கலைநிபுணர்

ஸ்வாமி

"உன்னுடைய திறமையை உன் வீட்டார் புகழ்வதில் பெருமை யில்லை. நீ வாழும் தெருவிலுள்ள வர் புகழ்வது பெருமை; நீ வசிக் கும் ஊர் மக்கள் புகழ்வது பெருமை; உன் நாடு புகழ்வது பெருமை. இவை யெல்லாவற்றை யும் விடப் பெருமைதருவது உன் திறமை வெளி நாட்டிலும் பரவி, அந்நாட்டவர் புகழும்போது தான்!" என்று ஒரு சீனப் பழ மொழி உண்டு. ஆனல் இந்த மாதிரியான சந்தர்ப்பம் எல்லோ ருக்கும் சாதாரணமாகக் கிடைப்ப தில்லை. குறிப்பாக கலையுலகில் திரைக்குப் பின்னல் பணியாற்று பவர்களுக்கு இம்மாதிரியான சந்தர்ப்பம் கிடைப்பது துர்லபம் தான்.

இந்த விதிக்கு விலக்காக-விளங் கும் ஒரு சிலரில் நமது தமிழகத்தைச் சேர்ந்த ஒளிப்பதிவாளர் டி. ஒய். எம். ஸ்வாமியும் ஒருவர்.

ஸ்வாமி இன்றைய தினம் 'ஓர் சிறந்த ஒளிப்பதிவாளர்' என அயல் நாட்டினர்பாராட் டும் வகையில் இருக்கிருர் என்ருல், சிறு வயதி லிருந்தே அவர் இக்கலை யில் கொண்டிருந்த ஈடு பாடும், பயிலுவதில் அவர் காட்டிய ஆர்வ மும் தான் முக்கிய காரணங்களாகும்- ஸ்வாமி. சென்னையில் தங்கி, பச்சையப்பன் கல் லூரியில் படித்து வந்த போது வி. கே. கிருஷ்ண அய்யர் என்பவரது அறிமுகம் அவருக்குக் கிடைத்தது. கிருஷ்ணய்யர் ஒரு போட்டோ ஸ்டுடியோவை நடத்தி வந்தார். ஸ்வாமி தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் கிருஷ் ணய்யரின் கடைக்குப் போய் விடு வார். அங்கே போய் ஸ்வாமி அரட்டை அடித்துக்கொண்டு பொழுதைச் சும்மா கழித்து விட மாட்டார். அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் காமிராக் களைப் பார்ப்பார். அவற்றை எடுத்து இயக்கும் முறை, மற்றும் அதில் புதைந்திருக்கும் நுணுக்கங் களை ஆராய்வார். இம்மாதிரி அவர் செய்யச் செய்ய, நாளடைவில் ஸ்வாமி புகைப்பட மெடுப்பதில் நிபுணராகி விட்டார்.





'கெனு கட்டா' சிங்களப் படத்திற்கான வெளிப்புறக்காட்சி படமாக்கப்படுகிறது. காமிராவுக் கருகில் மூக்குக்கண்ணுடி அணிந்து நிற்பவர்தான் ஸ்வாமி.

அப்போது சென்னையில் பிரபலமாக விளங்கி வந்தது நியூடோன் ஸ்டுடியோதான். அதன் முக்கிய நிர்வாகிகளில் ஒருவரான சோனு. மானு. என்பவர் கிருஷ்ணய்யரின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக இருந்தார்.

ஸ்வாமிக்கு புகைப்படக் கலையில் இருந்த ஆர்வத்தைக் கண்ட அவர், சோனு. மானு. விடம் அழைத்துச் சென்று பலமாகச் சிபாரிசு செய்தார். ஜித்தன் பானர்ஜி அப்போது நியூடோன் ஸ்டுடியோவின் பிரதம ஒளிப்பதிவாளராக இருந்தார். அவருக்கு உதவியாளராக ஸ்வாமியை அமர்த்தினர் சோனு. மானு. இது நடந்த 1939-ல் எம். எஸ். சுப்புலக்ஷ்மியும். ஜி. என். பாலசுப்ரமண்யமும் நடித்த 'சகுந்தலை' படம் அங்கு தயாராகி வந்தது.

அன்றாட படப்பிடிப்பில் உபயோகிக்கப்பட்ட பிலிமின் நீளம், மற்றும் இவைபோன்ற தகவல்களைச் சேகரிக்கும் வேலை ஸ்வாமிக்கு தரப்பட்டது. நாளடைவில் காமிராவை இயக்கும் பொறுப்பும் ஸ்வாமியிடம் வந்தது.

ஓய்.வி. ராவ் தயாரித்து, டைரக்ட் செய்த தாசில்தார், விஸ்வமோகினி படங்களுக்கு ஜித்தன் பானர்ஜியுடன் பணியாற்றினர் அவர்.

அடுத்து வாஹினி பிக்சர்ஸாரின் 'தேவதா' படத்திற்கு, காலஞ்சென்ற காமிரா மேதை கே. ராம்னுத்துடன் உதவியாளராகப் பணியாற்றினர்.

ராம்னுத்துடன் ஒளிப்பதிவு செய்வதில் உதவியதோடு, ராம்னுத்தின் விருப்பத்தின் மீது இதே படத்தில் சப்-இன்ஸ்பெக்டராக சில காட்சிகளிலும் நடித்தார் ஸ்வாமி.

என் வாழ்நாளில் ஜித்தன் பானர்ஜியுடனும், காமிரா மேதை

ராம்னுத்துடனும் நெருங்கிப்பழகி, வேலையைப் பயின்று, பணியாற்றும் படியான இரண்டு அருமையான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இவற்றைத்தான் நான் எனது பெரும் அதிருஷ்டமாகக் கருதுகிறேன். இன்றைய எனது நிலைக்குக் காரணமாக இருந்ததும் இவைதான்'' என்ருர் ஸ்வாமி.

பாரதத்தை அடுத்துள்ள இலங்கையில் ஒரு முதல்தர ஸ்டுடியோவை நிர்மாணித்து, அங்கேயே தனது படங்களைத்தயாரித்துவெளியிட, 'இலங்கைத்தீவின் படவுலகச் சக்ரவர்த்தி'யான கார்டினர் ஏற்பாடுகளைச் செய்து வந்தார். கார்டினருக்கு அறிமுகமான டைரக்டர் லின்ஹாவின் மூலம், 'சிலோன் ஸ்டுடியோ'வின் பிரதம ஒளிப்பதிவாளராகப் போய்ச் சேர்ந்தார் ஸ்வாமி.

இலங்கைக்கு சென்றுஅவர்ஒளிப்பதிவு செய்த முதல் படம் அவிஸ்வாசயா. இந்தப்படம் திரையிடப்பட்டதும் படத்தின் ஒளிப்பதிவைப் பற்றி இலங்கைப் பத்திரிகைகள் அனைத்தும் பாராட்டி எழுதி யிருந்தன. அடுத்து ஸ்வாமியின் ஒளிப்பதிவில் வந்த படம் 'தஸ்கமா'

இதற்கிடையில் லண்டனிலுள்ள ஜே. ஆர்தர் ராங்க் ஸ்தாபனத்தார் இலங்கைத் தீவில் 'காப்டன்ஸ் டேபில்' என்ற வர்ணப் படத்தின் வெளிப்புறக் காட்சிகளை எடுக்க வந்தனர். கார்டினர் இத்தயாரிப்பில் ஈடுபாடு கொண்டிருந்தார். 'ஒளிப்பதிவாளர் ஒருவர் தேவை' என்று ராங்க் ஸ்தாபனத்தார் கேட்டபோது, ஸ்வாமியை சிபாரிசு செய்து அனுப்பினர்.

இதற்காக தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்கினர் ஸ்வாமி. லண்டனுக்கு அவை அனுப்பப்பட்டதும், 'நாங்கள் இங்கு படமாக்கி வரும் தரத்திலேயே உங்கள் ஒளிப்பதிவாளர் எடுத்தனுப்பியிருந்த காட்சிகள் அமைந்திருக்கின்றன. மிகச் சிறப்பாக அவை வந்திருக்கின்றன' என்று செய்தி வந்தது. ஸ்வாமியைக் கூப்பிட்டு கார்டினர் பாராட்டினர்.

ஸ்வாமி ஒளிப்பதிவு செய்து சமீபத்தில் வெளிவந்திருக்கும் படம் 'கெனு கட்டா' என்பது. 'மணமகன் தேவை' என்ற கதையைப் பின்பற்றி கதாநாயகி இரட்டை வேஷங்களில் வரும் படம் இது. இதில் பிளோரிடா கதாநாயகியாக வருகிருர். அவரையே இரட்டை வேடங்களில் நடிக்க வைத்து ஒளிப்பதிவு செய்தார் ஸ்வாமி. இலங்கையிலேயே முதன் முதலாக இரட்டை வேஷத்தில் ஒருவர் நடித்து வரும் படம் இதுதான். இதில் ஸ்வாமியின் கைத்திறமையைக் கண்டு எல்லோரும் போற்றினர்கள். இதுமட்டுமல்ல. அவிஸ்வாஸயா என்ற படத்திற்கு 'டிரெயிலர்' தயாரித்துக் கொடுத்து, 'இலங்கையிலேயே முதன் முதலாக டிரெயிலர் தயாரித்தவர்' என்ற பெருமையையும் ஸ்வாமி அடைந்திருக்கிருர்.

ஸ்வாமி தற்போது மூன்று படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றி வருகிருர். இவரிடம் நான்கு பேர்கள் உதவியாளராகப் பணியாற்றி வருகிருர்கள்.

அடக்கமும் அன்பும் உருவானவர் ஸ்வாமி. இலங்கையில் சிறந்த பதவியில் இருந்தாலும் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்து பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருக்கிறது.

அப்படி அவர் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தால் தமிழ்ப் படவுலகம் அவருக்கு தன் இரு கரங்களையும் நீட்டி ஆதரவளிக்கும் என்று நம்புகிறேன். ஏனெனில் நன்றி மறப்பது' தமிழர்களின் பண்பல்ல.

—கே. என்.

யின்

பிரயாண

பஸ்ஸில்
பிரயாணம்

மலாயாஅழகி மெரியா
மஜேடோவுடன் பத்மினி



கையெழுத்து
வேட்டை

நினைவுகள்

பிரயாணம் செய்வதில் எல்லோருக்கும் ஒரு தனி இன்பம் இருக்கத்தான் செய்கிறது. பிரயாணம் செய்வதனால் உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது; பல புதுவித அனுபவங்கள் ஏற்பட்டு, அதன் மூலம் நமது அறிவும் பெருகுகிறது. ஏட்டிலே, படிப்பிலே காண முடியாத பல விஷயங்களை பிரயாணத்தின் மூலம் நம்மால் கற்க முடிகிறது.

திருவாங்கூர் சகோதரிகளான பத்மினி - ராகினி இருவரும் முன்பு சோவியத் ரஷ்யாவுக்குச் சென்று வந்தனர்; சில மாதங்களுக்கு முன்பு மலாயாவுக்குச் சென்று வந்தார்கள்.

இந்த இரண்டு இடங்களிலும் பிரயாணம் செய்தபோது ஏற்பட்ட சம்பவங்களை 'பேசும்-படம்' வாயிலாக அவர்கள் தங்கள் ரசிகர்களுக்குச் சொல்லியிருக்கிருர்கள்.

சென்ற மே மாதம் 4-ம் தேதியன்று பத்மினி-ராகினி சகோதரிகள் மலாயாவுக்கு மீண்டும் பறந்து சென்ருர்கள். அங்கே அவர்கள் பல இடங்களில் நடனமாடினுர்கள்; பத்மினி 'சிங்கப்பூர்' என்ற ஹிந்திப் படத்தின் வெளிப்புறக் காட்சிகளிலும் நடித்து விட்டு வந்தார்.

மலாயாவில் இரவு நேரங்களில்தான் அவர்களது நடனங்கள் நடந்தன. மற்ற நேரங்களில் ஊரைச் சுற்றிப் பார்ப்பதிலும், அவர்களைத் தேடி பல மைல்கள் தூரம் பிரயாணம் செய்து வந்த ரஸிகர்களைச் சந்திப்பதிலும் சகோதரிகளுக்கு நேரம் சரியாகி விட்டது. ரஸிகர்களின் அன்புச் சுழலில் சகோதரிகள் பலமாகச் சிக்கித் தவித்துப் போய் விட்டார்கள்!

சென்ற முறை அவர்கள் மலாயா சென்றபோது தங்கிய நாட்கள் குறைவு; பார்த்த இடங்கள் அதைவிடக் குறைவு. இம்முறை சகோதரிகள் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு மலாயாவை அலசி விட்டனர்.

இப்படி அவர்கள் செய்த பிரயாணத்தில் பல சுவையான சம்பவங்கள் நேர்ந்தன; ரசிகர்களிடையே சில எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உதாரணத்திற்கு, பினங்கிலே சகோதரிகளின் நடன நிகழ்ச்சி ஒன்றில் நிகழ்ந்த சம்பவத்தைக் கூறலாம்.

அவர்களது நடனத்தைப் பார்க்க அந்தப் பெரிய தியேட்டர் முழுவதும் ரசிகர்கள் அமர்ந்திருந்தார்கள். அதில் முதல் வரிசையில் ஒரு இளைஞர் அமர்ந்திருந்தார். அவர் டிப்-டாப்பாக தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தார்.

நடனம் ஆரம்பமாகி, முதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

முன் வரிசையில் அமர்ந்திருந்த அந்த ரசிகர் திடீரென மேடையின் மீது தாவி ஏறினர். தன் மனம் போன போக்கில் சகோதரிகளுடன் நடனமாட ஆரம்பித்து விட்டார். நடனத்தைப் பார்த்து ரஸித்துக்கொண்டிருந்த அவருக்கு உற்சாகம் கரை புரண்டு விட்டது போலும்!

VARAN-

சகோதரிகள் வெளியே புறப்படக் கிளம்பும்போது ஒவ்வொரு நாளும் இம்மாதிரிதான் ரஸிகர்கள் அவர்களது வண்டியைச் சூழ்ந்து கொண்டு, தங்கள் அன்பைச் சொரிந்தனர்.

மேடைக்கு ஒருவர் திடீரெனத் தாவி வந்து குதித்து நடனமாடுவதைக் கண்டு, நடனமாடிக் கொண்டிருந்த சகோதரிகள் பொம்மைகள் போல அப்படியே நின்று விட்டனர்.

'வீல்' என்ற சப்தம் ராகினியிடமிருந்து கேட்டது. ஏனெனில் தங்களுக்கு முன் நடனமாடிய ஒரு ஆடவனை முதலில் பார்த்தது அவர்தான். திரைவிடப்பட்டது. உணர்ச்சி வசப்பட்டு ஆட ஆரம்பித்த நாகரீக வாலிபரும் திடுக்கிட்டுத் தன் நிலைக்கு வந்தார்.

தியேட்டரில் பெரிய பரபரப்பு ஏற்பட்டு விட்டது.

அடுத்து உடனே போலீஸார் விரைந்து வந்தனர். மேடையிலிருந்த அந்த 'பரம' ரசிகரை அழைத்துச் சென்றனர்.

உடனே நடனம் தொடர்ந்து நடந்தது. ரசிகர்கள் செய்த கரகோஷம், அந்த தியேட்டரையே அதிரச் செய்து விட்டது!

அன்றைய தினம் ஏற்பட்டதைப் போன்ற இத்தகைய அனுபவம் சகோதரிகளுக்கு அன்று வரை ஏற்பட்டதில்லை. அவர்களது வாழ்நாளிலேயே மறக்க முடியாத சம்பவமாக இது அமைந்து விட்டது.

இதுபோன்ற பல சுவையான சம்பவங்கள் சகோதரிகளுக்கு இம்முறை பிரயாணத்தின்போது ஏற்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல சகோதரிகள் இதுவரை கடைபிடித்து வந்த சில கொள்கைகளையும் சில சம்பவங்கள் தவிடு பொடியாக்கி விட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் கேட்கக் கேட்க எவ்வளவு ரசமாக இருக்கின்றன தெரியமா?

இவற்றையெல்லாம் ஒன்றுகூட விடாமல் சகோதரிகள் உங்களுக்குச் சொல்லப்போகிறார்கள். தவிர, அங்கு தங்கியிருந்தபோது கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்ட பல பிரத்தியேகப் புகைப் படங்களையும் தந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அடுத்த இதழில் நீங்கள் படித்து ரஸிக்கலாம்.

விநியோகஸ்தர்கள்: செங்கற்பட்டு தென்னாற்காடு, வடஆற்காடு, சித்தூர், பாண்டிச்சேரி: ஆனந்தா பிக்சர்ஸ், வேலூர், N.A. ★ மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, காரைக்கால்: செட்டியார் பிலிம்ஸ் பிரைவேட் லிட்., திருச்சிராபள்ளி, ★ சேலம், கோயமுத்தூர், நீலகிரி: சந்திரபிரபா பிக்சர்ஸ், கோயமுத்தூர்.

இதர விபரங்களுக்கு: ஸேவாஸ்கிரீன்ஸ், சென்னை-14.

L. R. Swami

கசப்பும் இனிப்பும்

தயாரிப்பு : பேசும் படம் • அமைப்பு : ஸாரதி • புகைப்படங்கள் : ஆனந்தன்

நில்! நில்!! வனஜா, தெருவில் இறங்கி ஓடாதே! நானும் வந்து விடுகிறேன்''
என்று தன் மகள் வனஜாவிடம் கூறினர் அவரது தந்தை.
சின்னஞ்சிறு சிட்டுப் போல பட்டுப் பாவாடையும் சொக்காயும் அணிந்த எட்டு
வயதுச் சிறுமியான வனஜா அப்படியே நின்றுள் நிலைப்படியில். அவளது முகம்
சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. அவளது செய்கைகள் ஒவ்வொன்றிலும் மகிழ்ச்சி
யின் எக்காளம் தாண்டவமாடியது. அவசரமும் துடிதுடிப்பும் அவற்றில்
காணப்பட்டன.

தயாராயிரு! என்று நேற்று முதல் சொல்லி அரித்துவிட்டு, இப்போது தயாராகி,
கிளம்புவதற்காக வாசலில் வந்து நிற்கும் போது 'நில், வனஜா' என்று அவளது
தந்தை சொன்னல் எப்படியிருக்கும்? ''என்னப்பா, இன்னும் எவ்வளவு நேரம்
காத்திருப்பது?'' என்று வாசலில் இருந்த படியே குரல் கொடுத்தாள் வனஜா.
காலில் செருப்பை மாட்டிக் கொண்டிருந்த அவளது தந்தையின் காதில் அது நேராகப்
போய் முட்டி, எதிரொலித்தது.

கிளம்பு! நேரமாகி விட்டது'' என்று சொல்லியபடி, மகளின் பிஞ்சுக் கரத்தில்
ஒன்றை தன் கையில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தெருவில் இறங்கினர்
வனஜாவின் தந்தை. கட்டிப் போடப் பட்டிருந்த இளங்கன்று, அவிழ்த்து விடப்பட்டதும்
தன் தாயை நோக்கி எப்படித் துள்ளி ஓடுமோ, அதே போல குதியாட்டம் போட்டபடி
தெருவில் வேகமாக நடந்தாள் சிறுமி வனஜா.

ஆம்; அன்றைய தினம் வனஜாவின் வாழ்க்கையில் ஒரு இனிப்பான சம்பவம் நடைபெற இருந்தது.

சிறு வயதிலிருந்தே சினிமாவுக்குப் போவதில் ஆர்வமும், போய் வந்த பிறகு, ‘சினிமாவில் பார்த்த நக்ஷத்திரங்களைப் போலவே தானும் ஆக வேண்டும்’ என்ற ஆவலும் வனஜாவுக்கு ஏற்படுவதுண்டு. இதை தன் தந்தையிடமும் தாயிடமும் சொல்லி அரித்து விடுவாள் வனஜா. தன் மகளது தொந்தரவைப் பொறுக்க முடியாத அவரது தந்தையும், தன் மகளை ஏதாவது சினிமாக் கம்பெனியில் சிபாரிசுப் பிடித்துச் சேர்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார். இந்த முடிவின் ஆரம்பமாக அன்றைய தினம் பிரபல சினிமா நடிகர் எம். கே. தியாகராஜ பாகவதரைச் சந்திக்க தன் மகளுடன் கிளம்பினார் அவர்.

பாகவதர் அப்போது சென்னையில், கீழ்ப்பாக்கத்தில் தங்கியிருந்தார். தங்களுக்கு அறிமுகமான டி. எம். பட்டம்மாள் என்பவரது உதவியுடன் பாகவதரின் அறிமுகம் கிடைத்தது.

பாகவதர் வனஜாவின் வட்டமான முகத்தைப் பார்த்தார். அங்கும் இங்கும் அசைந்தாடும் நீண்ட கருவிழிகளைப் பார்த்தார். துருதுரு வென்று சதா இருக்கும் அவரது சுறுசுறுப்பைப் பார்த்தார். அப்படியே வனஜாவை வாரி எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டார்.

வனஜாவுக்கு பெருமை தாங்க முடியவில்லை. பாகவதரை நேரில் கண்டு பேச வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்த அவளை, பாகவதரே மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்து விட்டால், வனஜாவுக்கு எப்படி இருக்கும்?

“உங்கள் மகள் லக்ஷணமாக இருக்கிறாள்; துருதுருவென்று இருக்கிறாள். முதலில் இவளுக்கு நடனத்தைச் சொல்லிக் கொடுங்கள், சினிமாவில் தானே சேர்த்துக் கொள்வார்கள்” என்று வனஜாவின் தந்தையை அழைத்து, அறிவுரை சொல்லி அனுப்பினார் பாகவதர்.

பாகவதரே சொல்லி விட்டால் கேட்க வேண்டுமா? அவரது வீட்டில் அடுத்து சலங்கை ஒலி ஒலிக்க ஆரம்பித்தது.

நடனம் கற்றுக் கொண்டு விட்ட வனஜா, சினிமாவில் சேரும் ஆசையையும் கூடவே வளர்த்து வந்தாள்.

கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஜுபிடர் பிக்சர்ஸ் கம்பெனிக்கு தந்தையும் மகளும் அடிக்கடிச் செல்வார்கள். அப்போது ‘மஹாமாயா’ படம் தயாராகிக் கொண்டிருந்தது. கமலா லக்ஷ்மண் அதில் நடிக்க அங்கு வந்து கொண்டிருந்தார்.

‘மஹாமாயா’வில் கமலா நடிக்கும் போது, சிறு பெண்ணாக இருந்தார். எனவே தன்னைப் போன்ற கமலாவுக்கு சினிமாவில் நடிக்க வரும்போது, தனக்கு மட்டும் ஏன் வராது என்ற எண்ணம் வனஜாவிற்கு விழுந்து விட்டது.

ஆனால் ஜுபிடரில் அவர் போய் கேட்டபோதெல்லாம் வேஷம் தருவதாகச் சொன்னார்களே தவிர, உண்மையில் தரவில்லை

அவர் வாழ்க்கையில் இவை போன்ற கசப்பான சம்பவங்கள் அடுத்தடுத்து வந்தன. நாள் தவறினாலும் அவர் ஏதாவது ஒரு படக் கம்பெனியை முற்றுகையிடத் தவறவே மாட்டார்.

படத்தில் நடிக்க வேண்டும் என்பதற்காக அவர் என். எஸ். கே. யின் வீட்டிலேயே பல நாட்கள் தங்கியிருந்தார். கலைவாணர், மதுரத்துடன் எங்கேயாவது புறப்பட்டால் கூடவே வனஜாவையும் அழைத்துக் கொண்டு காரில் ஏறிக் கிளம்பி விடுவார்.

ஒருநாள் - நீண்டகால இடைவெளிக்குப்பின்-வனஜாவின் வாழ்க்கையில் மற்றொரு இனிப்பான சம்பவம் நடந்தது.

வைத்தீஸ்வரன் கோயில் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை என்ற நட்டுவனார், தமிழ் நாடு டாக்கீஸார் தயாரித்து வந்த 'பக்த நாரதர்' என்ற படத்திற்கு நடன டைரக்டராகப் பணியாற்றி வந்தார். வனஜாவுக்கு நடனம் சொல்லிக் கொடுத்த துரைசாமி நட்டுவனார், மீனாக்ஷி சுந்தரத்திற்கு நெருங்கிய நண்பர். அவரிடம் வனஜாவைப் பற்றிச் சொல்லியிருந்தார் துரைசாமி நட்டுவனார்.

பக்த நாரதரில் பால கலாவதியின் வேஷத்தில் நடிக்க ஒரு சிறு பெண் தேவையாயிருந்தது. மீனாக்ஷி சுந்தரத்திற்கு வனஜாவின் நினைவு திடீரென வரவே, அவரது வீட்டிற்குப் புறப்பட்டு வந்தார்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மீனாக்ஷி சுந்தரத்தை வனஜாவின் தந்தை வரவேற்றார். 'பால கலாவதி'யின் பாத்திரத்திற்கு வனஜாவை நடிக்க வைக்க, ஏற்பாடு செய்திருப்பதாகவும், கையுடன் வனஜாவை அழைத்துப் போக வந்திருப்பதாகவும், வனஜாவிடமும் அவரது தந்தையிடமும் சொன்னார்.

கம்பெனி, கம்பெனியாக ஏறி இறங்கிக் கேட்டபோது கிடைக்காத சந்தர்ப்பம் இப்போது தங்கள் வீட்டின் படியேறி வந்திருப்பதைக் கண்டு வனஜாவுக்கு மகிழ்ச்சி கரை புரண்டோடியது.

வாசலில் காத்திருந்த வண்டியில் தன் தந்தையுடனும் மீனாக்ஷிசுந்தரத்துடனும் ஏறிக்கொண்டு வனஜா கிளம்பிப் போனார்.

டைரக்டர் எஸ். சௌந்தர ராஜனுக்கு வனஜாவைப் பிடித்து விட்டது. அன்றே நடன ஒத்திகையும் ஆரம்பமாயிற்று. ஒத்திகை ஆரம்பமான மூன்றாவது நாள் படப்பிடிப்புக்கு ஜெமினி ஸ்டுடியோவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார் வனஜா. 'நாரதர்' படம் அங்கேதான் தயாரிக்கப்பட்டு வந்தது.

வனஜா குடியிருந்த வீட்டில் மின்சார விளக்கு கிடையாது. படப்பிடிப்புக்காக ஜாஜ்வல்யமான ஆடை அணிகள் அணிந்து, நாற்புறமும் சக்தி வாய்ந்த மின்சார விளக்குகளுக்கு மத்தியில் போய் நின்ற போது வனஜாவுக்குப் பெருமையாகவும் இருந்தது; பயமாகவும் இருந்தது.

காமிராவைக் காண அவருக்கு ஒரே கூச்சமாக இருந்தது.

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை வனஜாவுக்கு

ஆறுதல் கூறினார். பகல் நான்கு மணிக்கு ஆரம்பமான படப்பிடிப்பு இரவு இரண்டு மணி குமாருக்கு முடிந்தது. படப்பிடிப்பு முடிந்ததும், பொங்கல், மோர் எல்லாம் கொடுத்து படுக்க வைத்துக் கொண்டு, மறுநாள் காலை சிறுமி வனஜாவை அவளது வீட்டில் கொண்டுபோய் விட்டார் மீனாக்ஷி சுந்தரம்.

வனஜாவின் வீட்டிற்குப் பக்கத்தில் அப்போது நடன டைரக்டர் வழுவூர் ராமய்யா பிள்ளை குடியிருந்தார். அவர் சில படங்களுக்கு நடன டைரக்டராகப் பணியாற்றி வந்தார்.

வனஜாவும் அவரது தந்தையும் அவரைப் பார்க்கும்போதெல்லாம் படத்தில் சந்தர்ப்பம் பெற்றுத் தருவதைப்பற்றி நினைவு படுத்துவதுண்டு.

'மீரா'வில் அவர் வனஜாவுக்கு ஒரு சந்தர்ப்பம் பெற்றுத் தந்தார். மீராவில் நடனமாடும் போதே வனஜா நாகய்யாவைப் போய் பார்த்தார். நாகய்யா தன் படத்தில் ராதாகிருஷ்ணன் நடனத்தில் கிருஷ்ணனாக வனஜாவுக்கு, போய்க் கேட்ட மாத்திரத்தில் வேஷத்தைக் கொடுத்தார். அவருடன் ராதையாக—காலஞ்சென்ற தேசபக்தர் டி. பிரகாசத்தின் பேத்தி நடித்தார்.

பிரகாசத்தின் பேத்தி என்பதால் ராதை வேஷம் போட்டவருக்கு



அதிக உபசாரங்களும் சலுகைகளும் தரப்பட்டு வந்தன. சிறுமி வனஜா தன்னையும் அம்மாதிரி நடத்தவேண்டும் என்று அடம் பிடிப்பாள். நாகய்யா அவளை இம்மாதிரிக் கட்டங்களில் சமாதானப்படுத்த வந்துவிடுவார்.

ஒரு நாள் நடனம் நடந்துகொண்டிருந்தது. வேதாந்தம் ராகவய்யா தான் இதன் நடன டைரக்டர். வனஜா ஆடும்போது தவறு செய்து விடவே பலமாக அடித்து விட்டார். வனஜா 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டார்.

நாகய்யாவுக்கு குழந்தைகளின் மீது அபார மோகம் உண்டு. வனஜாவை அடித்தது அவருக்குப் பொறுக்க முடியவில்லை. வேதாந்தம் ராகவய்யாவை மிகக் கடுமையாகக் கண்டித்தார். குழந்தைகளை அடிப்பதானால், அவர் தனக்குத் தேவையேயில்லை என்று

எச்சரித்தார் நாகய்யா. அதன் பிறகு வனஜாவுக்கு நிறைய மிட்டாய்களும் சாக்லேட்டுகளும் வாங்கிக் கொடுத்துச் சமாதானப்படுத்தினர் நர்கய்யா.

ஜூபிடர் 'காரியாலயத்துக்குப் போகும் போகும் போதெல்லாம் பி. யு சின்னப்பாவைச் சந்திப்பதுண்டு. அவர் வனஜாவுக்கு வாக்களித்தபடி 'மங்கையர்க்கரசி'யில் சந்தர்ப்பம் வாங்கிக் கொடுத்தார். இடையில் சில வருஷங்கள் வரை வனஜாவுக்கு ஒரு சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. ஏழை படும் பாடு' படத்தில் பத்மினி நடித்த பாத்திரத்திற்கு வனஜாவை போட ஏற்பாடாகி, பரீட்சார்த்த படப்பிடிப்பும் நடந்தது. ஆனல் அதன் முடிவு 'கசப்பாகி' விட்டது.

வனஜா சோர்ந்து உட்கார்ந்த போது மாடர்ன் தியேட்டர்ஸ் டி. ஆர். சுந்தரம் சென்னைக்கு வந்து வனஜாவை நேரில் அழைத்து, 'மந்திரி குமாரி'யில் நடனமாட சந்தர்ப்பம் கொடுத்தார்.

'மந்திரிகுமாரி'யில் நடிப்பதற்கும் முன்பாக அபூர்வ சகோதரர்களில் வனஜா நடனமாடியிருந்தார். இதற்கும் முன்பாக வனஜா 'ஔவையா'ரில் பால ஔவையாக நடிக்க கொத்தமங்கலம் சுப்புவிடம்வேஷம் கேட்டு வந்தார்.

மந்திரி குமாரி முடிந்த பிறகு ஜெமினி அதிபர் வாசனின் உறவினர் வீட்டில் வனஜா நடனமாடினர். நடனத்தைப் பார்த்த ஜெமினி கணேசனும் (அப்போது ஜெமினியில்நடிகர் தேர்வுக்குழுவில் இருந்தார்) கே. ஜெ. மகாதேவனும் வாசனிடம் வனஜாவைப் பற்றிப் பலமாகச் சிபாரிசு செய்தனர். 'மந்திரிகுமாரி'யில் வனஜாவின் நடனத்தைப் பார்த்த பிறகு வாசன் வனஜாவை 'ஔவையா'ருக்கு ஒப்பந்தம்; செய்து கொண்டார். ஐந்தாண்டு காலத்துக்கு ஜெமினியின் நடிகையாக வனஜா ஒப்பந்தமானர். அவர் வாழ்க்கையில் இது இனிப்பான சம்பவமாக மாறியது. ஜெமினியின் மூலம் அவர் கதாநாயகியாக அறிமுகமாகி, படவுலகில் நக்ஷத்திர ஸ்தானத்தைப் பெறவும் முடிந்தது.

ஜெமினியில் வனஜா ஒப்பந்தமானார். பால ஔவைக்கு வேஷம் கேட்கப் போய் கிடைக்காத அவருக்கு, பருவ மங்கை ஏலங்குழலியாக நடிக்க 'ஔவையா'ரில் சந்தர்ப்பம் கிடைத்தது.

வனஜா சம்சாரத்தில் நடிக்கும் போது ஒரு கசப்பான சம்பவமும், இனிப்பான சம்பவமும் ஒருங்கே நேர்ந்தது.

ஸ்ரீராமுடன் அவர் நடிக்க வேண்டிய காட்சி முப்பத்திரண்டு முறைகள் எடுக்கப்பட்டும் திருப்திகரமாக அமையவில்லை. செட்டில் இருந்த ஜெமினி அதிபர் வாசன் கடுமையாக வனஜாவைத் திட்டி விட்டார். அழுதபடியே வனஜா கடைசி முறையாக நடித்தது மிகத் திருப்திகரமாக அமைந்து விட்டது.

அன்றிரவு 'அனார்கலி' நடனம் இதே சம்சாரம் படத்திற்காக எடுக்கப்படவிருந்தது. காதலனை இழந்த 'அனார்கலி'யின் சோக நடிப்பைச் சித்தரிக்க அன்று முற்பகல் செட்டில் நடந்த சம்பவம் துணையாக இருந்தது.

சம்சாரம் மூலம் வனஜா அகில இந்திய நக்ஷத்திரமாக மாறினார். அதே சமயம் அவர் ஜெமினியில் ஒப்பந்த நடிகையாக இருந்ததால் வெளியிலிருந்து வந்த பல நல்ல சந்தர்ப்பங்களையும் இழந்துவிட நேர்ந்தது.

இனிப்பும் கசப்பும் மாறி மாறி வந்தால்தானே அதிலும் ஒரு தனிச்சுவை இருக்கிறது!





பிரபல சினிமா நடிகரான 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனின் சகோதரர் வி சி. ஷண்முகத்திற்கும், கணேசனின் மனைவி திருமதி கமலாவின் சகோதரி சகுந்தலாவுக்கும், சென்ற மாதம் 17-ம் தேதியன்று வெகு சிறப்பாக சென்னையில் திருமணம் நடந்தேறியது. திருமணத்தையொட்டி பதினாயிரம் ஏழைகளுக்கு அன்னதானமும் செய்யப்பட்டது. இந்நூதன தம்பதிகளுக்கு நமது உளமார்ந்த ஆசியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். 1. நடிகர் திலகமும், இலட்சிய நடிகரும், 2 பரிசுடன் பத்மினி. 3 பிரேம்நசீர் வருகிறார். 4. 'பேசும் படம்' ஆசிரியர் டி. வி. ராமநாத்துடன் சிவாஜி கணேசன் 5. தி. மு க பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் வருகிறார்.

மெஜஸ்டிக்
பிக்சர்ஸ்...
நாட்டுக்கொரு
நல்லவள்
காட்சிகள்
PSR



மெஜஸ்டிக் பிக்சர்ஸார் தயாரித்திருக்கும் "நாட்டுக்கொரு நல்லவள்" அன்றாட குடும்ப நிகழ்ச்சிகளைக் கொண்ட சமூகப் படமாகும். தசரத ராமய்யா டைரக்ஷனில் வளர்ந்திருக்கிறது இந்தப் படம்.

கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்
அழகர்மலைக்
கள்ளன்
காட்சிகள்
PSR









கெப்பராஜ் புரொடக்ஷன்ஸாரன் 'அழகர் மலைக் கள்ளன்'', சாகஸச் செயல்கள் பல கொண்ட தொரு பொழுது போக்குப் படமாகும். நக்ஷத்திர நடிகர்கள் நடிக்கும் இந் தப் படத்தை கெம்பராஜ் டைரக்ட் செய்து வருகிறார். விரைவில் திரைக்கு வரவிருக்கிறது இப்படம்.

கேள்வி பதில்

பக்தவத்சலம், மேட்டூர்

உங்களுக்கு யாரைக்கண்டால் பிடிக்காது?

நோயாளியைக் கவனிக்கவிடாமல், டாக்டரிடம் வீண் அரட்டை அடிக்கும் தொணதொணப்புப் பேர் வழிகளை; அமைதியாக 'க்யூ'வில் போகும் போது நடுவில் வந்து புகுபவர்களை; படம் பார்த்துக் கொண்டிருக்கும்போது அதை உரத்த குரலில் விமர்சனம் செய்பவர்களை; இன்னும் இப்படி எத்தனையோ!

தமிழ்ப் படவுலகில் பிரபலமான டாக்டர் யார்?

எம். சிதம்பரம். இவரிடம் சிகிச்சைபெற நக்ஷத்திரங்கள் வராத நாட்களே கிடையாது!

அதிருஷ்டம் எப்படி வருகிறது?

ஜெமினி அதிபர் வாசனுக்கு பேனாவின் உருவில் வந்தது; தங்கவேலுக்கு, சமீபத்தில் அவர் வீட்டில் இறந்துபோன, நாயின் உருவில் வந்தது. எப்படி, எந்த உருவில் 'அதிருஷ்ட தேவதை' வருவாள் என்பதைமட்டும் நிதர்சனமாகச் சொல்ல முடியாது!

சா. தங்கவேலு, தஞ்சை

டைரக்டர் என்றால் என்ன வேலைகள் செய்ய வேண்டும்?

'கட்', 'ஓ.கே', 'ஸ்டார்ட்' என்று சொல்லுவது மட்டுமல்ல. என்.எஸ்.கே. பணம் படத்தை டைரக்ட் செய்து வந்தபோது, அதில் நடிக்க வந்த தங்கவேலுவுக்கு முடியைக்கூட க்ஷவரம் செய்திருக்கிறார். டைரக்டர்களின் மனோபாவத்தையும், சூழ்நிலையையும் பொறுத்திருக்கிறது வேலைகள்.

"கலையையும் கட்சியையும் இணைப்பதில் 'நடிகர் திலகம்' என்ன கருத்து வைத்திருக்கிறார்?

"அரசியலைப் பற்றிப் பேச பல நல்ல அரசியல்வாதிகள் இருக்கும்போது, நான் அதில் புகுந்து விளையாட விரும்பவில்லை" என்று சொல்லியிருக்கிறார் 'நடிகர்திலகம்.'

சரவணன், தஞ்சை

புளிமூட்டை ராமசாமி என்ன செய்து கொண்டிருக்கிறார்?

தன் சொந்த வீட்டில் மனைவி, குழந்தை குட்டிகளுடன் இன்பமாகப் பொழுதைப் போக்கி வருகிறார். மாலை நேரங்களில் நடிகர் ராஜாமணி (நாட்டியராணி கதாநாயகன்)யுடன் வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டு அரட்டை

பெண்களிடம் கூடவே பிறப்பது கனிவு. ஜி. சகுந்தலா இப்படி கனிவுடன் பார்ப்பது 'ஓடி விளையாடு பாப்பா'வை. ஜெகஜ்ஜோதி பிலிம்ஸ் தயாரிப்பு இந்தப் படம்.

அடிக்கிறார். ஜூபிடரின் படமொன்றில் நடித்து வருகிறார்.

நம் நடிகைகளில் யோகாசனம் செய்பவர்கள் இருக்கிறார்களா?

தயாரிப்பாளர்களிடமிருந்து பணம் வாங்க சில நடிகைகள் சிரசாசனம் செய்வதை நான் பார்த்திருக்கிறேன்!

அசு. அப்துல்லா,
அரகண்டநல்லூர்

புதுமுகம் என்பதற்கு 'படவுலகில்' பொருள் என்ன?

'சேமிப்பு' என்று அர்த்தம்.

கேள்வியிலிருந்து பிறப்பது பதில் என்றால், பதிலிலிருந்து பிறப்பது எது?

முகத்தில் புன்னகை தவழ, கண்களில் மகிழ்ச்சி பொங்க, இரு கரங்களையும் நீட்டி ஒரு பெண் வரவேற்கிறார் என்றால் அது அன்புக் காதலனாகவோ அல்லது அவளது அருமைக் குழந்தையாகவோ தான் இருக்கும். 'இவன் அவனேதான்' படத்தில் அம்பிகா.

சிந்தையில் தெளிவு; மனத்தில் நிறைவு.

சங்கடமான கேள்விகளாக இருப்பின் கண்களை மூடிக்கொண்டு குப்பைத் தொட்டியில் தானே போடுவீர்?

இல்லை; ஆழ்ந்து சிந்தித்துப் பதிலளிக்க வேண்டி, என் தோல் பையில் போட்டுக்கொள்வேன்.

இ. ஆர். எஸ். அவர்களின் 'புலித்தேவன்' பார்த்தீரா? எப்படி?

பார்த்தேன். புலித்தேவனாக நடிப்பதற்கு உடற்தோற்றம் மட்டும் இருந்தால் போதாது.

கருணாநிதி கதை எழுத, அண்ணாவும் காமராஜரும் முறையே கதாநாயகன், வில்லனாக நடித்தால் படம் எப்படி இருக்கும்?

சட்டசபை நிகழ்ச்சிகளை முன் கூட்டி விளக்கும் 'டிரயிலர்' படம் போல இருக்கும்!

பரிமளா, பலாங்கொடை,
இலங்கை

பி. சரோஜாதேவியின் முக ஜாடையும் விஜயகுமாரியின் முக ஜாடையும் ஒரே மாதிரி இருக்கிறது. அவர்கள் இருவரும் சகோதரிகளா?

நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள். மற்றும் பலர் சரோஜாதேவியும் வைஜயந்திமாலாவும் ஒரே தோற்றமுடையவர்களாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படியானால் இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

பி. ஏ. பழனிசாமி,
புதுக்கரைப்புதூர்:

கோபி சகோதரர்கள் இப்போது என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள்? அவர்களது முழுப் பெயர் என்ன?

'ஓடாதே நில்!' படத்தை வெளியிட சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அவர்களது முழுப் பெயர் ஏ. சதாசிவம், ஏ. சிவசுந்தரம் ஆகும்.

தெருப்பாடகனின் கதி என்ன வாயிற்று?

பெட்டிப் பாம்பாகி விட்டான் தற்போது!

அகிலாண்டேஸ்வரி,
நாவலபிட்டிய, இலங்கை

'உடலழகி' சூர்யகலாவுக்கு திருமணமாகி விட்டதா?

அப்படித்தான் ஒரு பத்திரிகைக்கு அவர் அளித்திருந்த பேட்டியில் படித்தேன்.

ந. கிருஷ்ணமூர்த்தி,
கடலூர்

ஹாலிவுட் கத்திச்சண்டை வீரரான எரால் பிளின் விலாசம் எனக்கு மிக அவசரமாகத் தேவை. தெரிவிக்க முடியுமா?

அவரது பெயருடன், ஸ்கிரீன் ஆக்டர்ஸ் கில்ட், ஹாலிவுட், யு.எஸ்.ஏ. என்ற சங்கத்திற்கு எழுதிப் போடுங்கள். இந்தச் சங்கம் தென்னிந்திய நடிகர் சங்கம் போன்றது. எல்லா நடிகர்களும் இதில் அங்கத்தினர்களாக இருப்பதால், அவரவர்களுக்கு வரும் தபால்களை உடனடியாக இச்சங்கம் அவர்களுக்கு அனுப்பி விடுகிறது.

சா. விஜயரங்கம், தென்காசி

உங்கள் பத்திரிகையின் இதே பகுதியிலும், மற்றும் பொதுவாக சினிமா நண்பர்கள் கூடும் இடத்திலும் அடிபடும் 'மார்லன் பிராண்டோ' என்பவர் யார்? அவரைப்பற்றி விளக்கமாகச் சொல்ல முடியுமா?

மார்லன் பிராண்டோ என்பவர் அமெரிக்காவின் புகழ்பெற்ற நடிகர்களில் ஒருவர். பாத்திரத்துடன் ஒன்றி விடும் சிறந்த நடிகரான அவர் படத்தில் நடிப்பதற்குப் பணம் வாங்குவதுடன் கூடவே படத்தின் லாபத்தில் ஒரு பகுதியை அப்படியே கேட்கிறார். படத்தின் வசனங்களை அவர் தனது இஷ்டத்திற்கு மாற்றிக் கொள்வதுண்டு; காட்சிகளையும் அமைத்துக்கொள்வதுண்டு. பத்திரிகைகளின் அமோக விளம்பரத்தினால் முன்னணிக்கு வந்த இவர், தற்போது தன்னைப் பற்றி எவ்விதச் செய்தியும் கட்டுரையும் பத்திரிகைகளில் வரக்கூடாதென்கிறார். இவர் ஒரு பூனைக் குட்டியை அன்பாக வளர்த்து வருகிறார். இதற்காக நியூயார்க்கிலிருந்து விமானத்தில் ஆகாரங்கள் பறந்து வருகின்றன. பூனைக்குட்டியுடன் அன்பாக நடக்கும் இவருக்கு தன் மனைவியான அன்னா காஷிபீயிடம் அன்பாக நடக்கத் தெரியாததால், இருவரும் விவாகரத்து செய்துகொண்டு விட்டனர். மார்லன் பிராண்டோவை படத்தில் நடிக்கவைக்க இப்போது அமெரிக்கத் தயாரிப்பாளர்கள் கொஞ்சம் பயப்படுகிறார்கள்.

தோளுக்குமேல் இப்படிக் குடத்தை எடுத்து ஒரு பெண் நடனம் ஆட ஆரம்பித்து விட்டால், குடம் நிறைகிறதோ இல்லையோ அவளது உள்ளம் நிறைந்திருக்கிறது என்பதுமட்டும் நிச்சயம். 'நாட்டுக்கொரு நல்லவ'ளில் ரீடா.

பி. எஸ். ராமசாமி,
பனங்காட்டூர்

'பேசும் படம்' ஏப்ரல்—'59 இதழில், 64-ம் பக்கத்தில் உள்ள விளம்பரத்தில் காணும் நடிகை யார்?

ராஜசுலோசனாதான்.

எஸ். கமலநாதன், சென்னை

'சோலைமலைராணி' படத்தைத் தயாரிக்கும் சிவாஜி பிக்சர்சுக்கும், 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனுக்கும் சம்பந்த முண்டா?

துளிக்கூட இல்லை.

சி. வெங்கடாசலம், சிந்தகும்பள்ளி

''சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு புத்தாடை அணிய வேண்டுமென்று நினைத்தேன். அப்போது என் முதல் மனைவி காலமாகி விடவே என் ஆசை நிறைவேறவில்லை'' என்று 'புரட்சி நடிகர்' எம். ஜி. ஆர். பேசியிருக்கிறாரே, அப்படியானால் இதுவரை அவர் புத்தாடையே அணிந்ததில்லையா?

நல்ல கேள்வி கேட்டீர்கள்! எம். ஜி. ஆர். இப்படிப் பேசியது சென்றபொங்கல் விழாவின்போது, பொங்கல் விழாவன்று புத்தாடை கட்டுவதைப் பற்றித்தான். சென்ற பொங்கல் புத்தாண்டன்று அவர் புத்தாடைகள்தான் அணிந்தார். இனியும் அணிவார் தொடர்ந்து.

எம். ஜி. ஆர். அவர்களின் நன்கொடை எங்கு போய் முடியும்?

வாடும் முகங்களின் உதட்டில் புன்னகை உதிர்வதில்.

எம். ஜி. ஆர். ஏன் எப்போதும் விரோதிகளை நினைத்து வருகிறார்?

நண்பர்கள் நினைத்து வருத்தப் படுவதற்கு அவசியம் எழாததால்!

ஜி. ரமா, பெரம்பூர்

சென்னை ரேடியோ நிலையத்தில் ஏ அல்லது பி யில் நேயர்களின் விருப்பப்படி சினிமா இசைத் தட்டுகளைப் போடுகிறார்கள். அதற்கு எந்த விலாசத்துக்கு எழுத வேண்டும்?

நிலைய அதிகாரி, சென்னை வானொலி நிலையம், சென்னை-4 என்ற விலாசத்திற்கு எழுத வேண்டும்.

பி. எஸ். மணியம், பெர்னம் எஸ்டேட், மலாயா

தமிழ்ப் படங்கள் வேறு எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன?

மலாயா, பர்மா, பீஜித் தீவுகள், தென் ஆப்ரிக்கா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழ்ப் படங்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு வெளி நாட்டுப் படவிழாக்களில் பங்கு பெறும், தரத்தை எட்டிப் பிடிக்கும்?

தயாரிப்பாளர்களின் லாப நோக்கத்தில் கவனம் குறைந்து, கலையில் ஆர்வம் தழைக்கும் போது.

காதலிக்க ஒரு ஆணுக்கு முதலில் என்ன தேவை?

ஒரு பெண்!

பிரேமா, சென்னை

எனக்கு எஸ். எஸ். ஆர். மீது ஓர் சகோதர அன்பு. அவரை நேரில் கண்டு, அவருடன் ஓரிரண்டு வார்த்தைகள் பேச, எனக்கு ஏதாவது வழி சொல்ல முடியுமா?

எஸ். எஸ். ஆரின் வீடு தேனாம்பேட்டை, எல்டாம்ஸ் ரோடில் இருக்கிறது. அங்கு சென்று அவரது மைத்துனரான டி. வி. நாராயணசாமியைச் சந்தித்து உங்கள் விருப்பத்தை வெளியிடுங்கள். நாராயணசாமி தங்கமானவர். அவர் 'லட்சிய நடிக'ருடன் பேசும் வாய்ப்பை தவறாது ஏற்படுத்தித் தருவார்.

ந. நாகமாணிக்கம், வேட்டைக்காரன்புதூர்

சர்வதேச பரிசுக்காக அனுப்பப் படும் வேற்று மொழிப் படங்கள் ஆங்கிலத்தில் 'டப்' செய்யப்பட்டதாகத்தான் இருக்க வேண்டுமா?

அல்ல. ஆங்கில விளக்கமோ அல்லது பின்னணியில் சம்பவத்தை விளக்கும் விளக்க உரைகளோ இருந்தால் கூடப் போதும்.

எம். ஏ. மன்சூர்.
மாத்தளை,
இலங்கை

மனிதர்களை நடிக்க வைக்காமல் மிருகங்களைக் கொண்டே ஒரு படம் தயாரிப்பதற்கு திறமை பெற்றுள்ள அல்லது திறமை பெறக்கூடிய ஒரு தமிழ்ப் படத் தயாரிப்பாளரைக் குறிப்பிடுக?

'தேவர் பிலிம்ஸ்' சின்னப்பாவை குறிப்பிடலாம்.

சுய விளம்பரத்துக்காக இனாம் வழங்கும் பேர்வழிகளைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

காகிதப் பூவுக்கு மணம் ஏற்படுத்த முயல்வதை!

போலீஸ் இன்ஸ்பெக்டரின் முன்னால் கண் கலங்க ஒரு பெண் நின்றால் அவள் குற்றவாளியாகத்தான் இருக்கவேண்டும் என்பதல்ல. நிரபராதி என நிரூபிக்கவும் கண்ணீரை அவள் துணைக்கு அழைக்கலாமல்லவா? 'கேப்டன் ரஞ்சன்' படத்தில் ஸ்ரீரஞ்சனியும் புதுமுகம் 'சாக்ரடீஸ்' தங்கராசுவும்.

ஏசுநாதரின் வாழ்க்கை பற்றிய ஒரு தமிழ்ப் படம் எடுக்கப்படுமாயின், ஏசுவின் பாகத்தை ஏற்று திறம்பட நடிக்கக்கூடிய நடிகர் யார்?

ஏசுவின் பக்தர்களான ஆங்கிலேயர்கள் இதுவரை கிறிஸ்து மதத்தைப் பற்றி பல படங்களைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் ஏசுவைக் காட்டும் காட்சிகளில் ஏசுவின் முகத்தைக் காட்டும் துணிவு அவர்களுக்கு ஏற்பட்டதில்லை. எனவே ஏசுவின் பக்தர்களே ஏசுவைக் காட்டத் துணியாத போது, நம்மவர்கள் ஏசுவின் படத்தை எப்படி எடுக்க முடியும்?

மதுவிலக்கு சட்டம் போன்று சினிமா படவுலகுக்குச் சட்டமொன்று அமல் நடத்தப்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன?

மக்களின் பொழுது போக்கிற்கு மந்திரிகள் நடனமாட வேண்டி வந்தாலும் வரும்!

பி. பங்கஜம், மானாமதுரை

உடுமலை, கண்ணதாசன், பட்டுக்கோட்டை, சுரதா, தஞ்சை ராமய்யாதாஸ் இக்கவிஞர்களை வரிசைப் படுத்தியுள்ள முறை சரிதானா?

கண்ணதாசனையும், பட்டுக்கோட்டையையும் முன் பின்னாக இடம் மாற்றினால் சரியாகி விடும்.

அறிஞர் அண்ணா திரைப்படத்தின் மூலம் திராவிடநாடு அடைய முடியும் என்று கூறுவது பற்றி தங்கள் கருத்து என்ன?

சினிமா மற்றெந்த சாதனங்களையும் விட வலிமை வாய்ந்தது என்பதை அவர் உணர்ந்திருக்கிறார் என்று தெரிகிறது.

எஸ். ராமமூர்த்தி,
முல்லங்குடி

'மாய மனிதனில்' ஸ்ரீராமின் தங்கை பாத்திரத்தில் நடிப்பது யார்?

சந்திரா.

என். ஆறுமுகம்,
தெல்தெனிய, இலங்கை

நான் ஜெமினி கணேசனின் கார் சாரதியாக விரும்புகிறேன். அவர் என்னை ஏற்றுக் கொள்வாரா?

மாட்டார். அவரது காருக்கு அவரேதான் சாரதியாக இருக்கிருர். தவிர, அவரிடம் ஏற்கெனவே ஒரு டிரைவர் இருக்கிருர்.

மேல்நாடு சென்று, தொழிற் கல்வி கற்றுத் திரும்பியுள்ள சிவாஜி கணேசனின் தம்பி சண்முகம் படத்தில் நடிக்க மாட்டாரா?

நடிக்கமாட்டார். அதற்குப் பதிலாக அண்ணனின் பட விநியோகக் கம்பெனியை நிர்வகித்து வருகிருர் அவர்.

எம்.கே. செல்லத்துரை,
சரசாலை, இலங்கை

இலட்சிய நடிகர், புரட்சி நடிகர், நடிகர் திலகம் இம்மூவரில் மேடைப்பேச்சில் சிறந்தவர் யார்?

புரட்சி நடிகர்தான்.

சென்னை நகரத்தின் சிறப்புகளைக் கூறமுடியுமா?

இந்தியாவிலேயே சுத்தமான நகரம் மட்டுமல்ல, சிறந்த சிந்தனையாளர்களும், சினிமா ஸ்டுடியோக்களும் இருப்பது சென்னையில்தான்.

கே. ஆர். அய்யாதுரை,
அட்டபாகை, இலங்கை

தங்கவேலுவைக் கதாநாயகனுகப் போட்டு படமெடுத்தால் எப்படியிருக்கும்?

'ரம்பையின் காதல்' போலிருக்கும்!

சங். பழனியப்பன், மதுரை

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் ஹாலிவுட்டில் பிறந்திருந்தால்......?

அவரது உருவத்தை தாங்கிவரும் சுவரொட்டிகளில் சாணம் வீசப்பட்டிருக்காது; அவரது படத்தலைகள் கிழிந்திருக்காது! தமிழர் வாழ்வதை தமிழர்களே பொறுக்காத விசித்திர நாடு இது!

துரை. முருகேசன், காரமடை

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'யில் வேலைக்காரராக வேஷமேற்று, 'அப்பா'வாக அபாரமாய் நடித்து குலுங்கச் சிரிக்க வைத்த குண்டுமணி என்பவர் யார்?

'இலட்சிய நடிகர்' நடத்திவரும் நாடகக் கம்பெனியில் அவர் ஒரு நடிகர்.

வி. என். முத்துசாமி, கோபி

நடிகர் கெம்பராஜ் அவர்களின் சொந்தப் படங்கள் எத்தனை இருக்கின்றன?

'அழகர் மலைக்கள்ளன்' என்ற ஒரே படத்தைத்தான் அவர் தயாரித்து வருகிருர்.

லதா மங்கேஷ்கரின் விலாசம் என்ன?

பெயருடன், பம்பாய் என்று போட்டால் போதும்.

எஸ். ராஜேந்திரன், சென்னை

அசோகன் கதாநாயகனுக நடிப்பாரா?

'சபரி' என்ற படத்தில் அவர் கதாநாயகனுக நடித்து வருகிருர். இன்னும் சுமார் டஜன் படங்களுக்கும் அவர் கதாநாயகனுக நடிக்க ஒப்பந்தமாகி யிருக்கிருர்.

பாலய்யாவின் மகனுக்கு திருமணம் ஆகிவிட்டதா?

பாலய்யாவிற்கு நிறைய குழந்தைகள் இருக்கின்றன. அவர் திருமணம் செய்ய ஆரம்பித்தால் வரிசையாக செய்து கொண்டே போக வேண்டியதுதான். ஆனல் இன்னும் இதைப்பற்றி யோசிக்கவில்லை அவர்.

கொத்தமங்கலம் சுப்பு சினிமாவில் நடிக்கிருரா?

கொ. சு. இப்போது நடிப்பதை நிறுத்தி விட்டார். அவரது கவனம் இப்போது வேறு துறைக்குப் போய் விட்டது.

இதுதான் கண்ணியமா ?

சென்ற 16-5-59 அன்று சயானியில் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' முதற் காட்சிக்குச் சென்றிருந்தேன். அன்று மாற்றுக் கட்சித் தோழர்கள் பலர் வந்திருந்தார்கள். பட ஆரம்பமுதல் முடிவுவரை அவர்கள் சிவாஜி கணேசனின் நடிப்பைக் கிண்டல் செய்துகொண்டும் தங்கள் கட்சி நடிகரைப் பாராட்டியும் பேசிக்கொண்டிருந்தனர். படம் முடிந்து வெளி வரும்போது, மாலைக் காட்சிக்கு வந்திருந்தவர்களிடம், ''படம் மிகவும் மோசம். போரடிக்கிறது. நடிப்பும் மோசம்'' என்று பொய்ப் பிரசாரம் செய்தனர். உண்மையில் ஒப்பிட்டுப் பார்க்கப் போனால், அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தயாரித்த அவர்கள் குறிப்பிட்ட—படமும் நடிப்பும் கட்டபொம்மனுக்கு எங்கோ ஒரு மூலை. கட்டபொம்மனில் சிவாஜி கணேசனின் நடிப்பு பிரமாதம் என்று படம் பார்க்கும் நடுநிலையாளர் கூறும்போது, இவர்களுக்கு ஏன் இந்தப் பொருமை? இப்படித் துஷ்பிரசாரம் செய்வது தான் இவர்களது கண்ணியமா, கடமையா, கட்டுப்பாடா?

ச. குமரகுரு,
பெரம்பூர் பாரக்ஸ்.

முன் வருவார்களா?

'கல்யாண பரிசு' படம் பார்த்தேன். சாதாரண குடும்பக்கதை. அதில் வாழவழி வகுக்கும் அற்புதக் கற்பனை; நடிகர்கள் நாலைந்தே பேர். அதில் மூவருக்குத்தான் வேலை. பிரமாதமாகச் செய்திருக்கிறார்கள் ஐந்தாறு பாடல்கள்; அவற்றில் நான்கு பிரமாதம். பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகள் கிடையாது. ஆனால் இருப்பதைப் பிரமாதமாகப் படமாக்கியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் டைரக்டர் ஸ்ரீதர்தான். நடிகர்களின் ஒத்துழைப்புடன் தன் அரிய கற்பனையைதானே நன்கு பயன்படுத்தியிருக்கிறார். பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளையும் ஏராளமான நடிக நக்ஷத்திரங்களையும் வைத்து வருடக் கணக்கில் படம் தயாரிப்பதைவிட, நல்ல குடும்பக் கதையை மிக நல்ல முறையில் மக்கள் முன் வைத்தால் அதற்குப் பிரமாத வரவேற்புண்டு. ஸ்ரீதரைப்போன்ற திறமைமிக்க இளைஞர்களைக் கொண்டு குறுகிய காலத்தில் குறைந்த செலவில் வெற்றிப் படங்களைத் தயாரிக்க படாதிபதிகள் முன்வருவார்களா?

ராஜீ—தாமு,
வேளச்சேரி.

89692

வாணி தமிழ்–இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான்: தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை: இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

வெட்டுங்கள்! வெட்டுங்கள்!

கலைவாணன்

முதல் காட்சியில் தன் சிஷ்யர்களிடம், "இன்று வெள்ளிக்கிழமை அல்லவா? கல்யாணி ராகத்தை ஆலாபனை செய்யுங்கள்" என்கிறார்குருதேவர் ஏகம்பவாணர். உடனே காசிநாத்தும் அவன் சக மாணவர்களும் சுருதி சேர்த்துக் கொண்டு, கல்யாணி ராகத்தில் ஒரு பாடலைப் பாடுகின்றனர். ஆலாபனை என்ற வார்த்தை வெட்டப்பட வேண்டும். 'கல்யாணி உருப்படியைப் பாடுங்கள்' என்றுவது சொல்லச் செய்திருக்க வேண்டும். அவர் 'ராகத்தை ஆலாபனை செய்' என்று பிறகு பாட்டைப் பாடுவதால், குருதேவர் முட்டாள் என்றோ, சிஷ்யர்கள் குருவை மதியாமல் அவர் ஒன்று சொன்னால் அவர்கள் ஒன்று செய்வார்கள் என்றோதான் கொள்ள முடியும். அந்த 'ஆலாபனை செய்யுங்கள்' வசனம் வெட்டப்பட வேண்டும்.

ராமசாமி,
சென்னை.

கணேஷ் பிரசாத் மூவீஸ் 'மருதநாட்டு வீரன்' தமிழ்ப் படத்தில் எம். சரோஜா.

சிவகெங்கைச் சீமை

முத்தழகு படித்தவன்; பண்புள்ளவன்; நாட்டின் தளபதி; இளைஞன். தான் முன் கண்டறியாத ஒரு பருவப் பெண் சிட்டுவிடம் கேலி பேசி அவள் கன்னத்தில் சேற்றை அள்ளித் தன் கையாலேயே தடவுகிறான். மறத்தமிழனின் மாண்பை இழிவுபடுத்துகிறது இக்காட்சி. சேற்றை அள்ளி வீசுவதாகக் காட்டியிருக்கலாம்; தொடக்கூடாது. இதை வெட்டி விடுவார்களா?

இராம. சோழன்,
வலம்புரி.

வீரபாண்டிய கட்டபொம்மன்

முதன் முதலாக வெள்ளையம்மாள் தன் தோழிகளுடன் விளையாடுவதாகக் காட்டுகிறார்கள். வெள்ளையம்மாள் ஒரு உத்தமபெண். நாகரிகமோகம் வராத காலத்தவள். உடல் முழுவதும் புடவை, ரவிக்கையால் மூடி அடக்கமுடனிருக்க வேண்டியவள். ஆனால் இங்கே நாம் வெள்ளையம்மாளைக் காண முடியவில்லை; பத்மினியைத்தான் காண்கிறோம். அந்தக் காட்சி முழுவதும் இனக்கவர்ச்சி வெளிப்படுகிறது. ஆகையினால் பாத்திரப் பெருமை குறைகிறது. இந்தப் பாடலை அப்படியே வெட்டி விடலாம். சாயல்குடிப்பெண் வெள்ளை

யம்மாளின் கௌரவம் காப்பாற் றப்படட்டும்.

ஸ்ரீநிவாஸதாஸன்,
காஞ்சிபுரம்.

கலைவாணன்

ஊரிலே உயர்ந்தோர் என இறு மாந்திருக்கும் பிராமணர்களின் சபை கூடியிருக்கிறது. அந்தச் சநாதனிகள், காசிநாத், விஸ்வ நாத சாஸ்திரி முதலியோரை தண் டிக்கத் தீர்மானிக்கிறது. அப்போது காசிநாத் அங்கே வருகிறான். ஒரு முறை அம்மாமிபாஷை பேசுகிறான். மறுசமயம் இலக்கணமாகப் பேசு கிறான். சபையின் தலைவர்களும் அப்படியே. இந்தக் காட்சியை அப்படியே வெட்டிவிட்டு முடிவைக் காட்டியிருக்கலாம். பிராமண சமூ கத்தில் பிறந்தவன் காசிநாத சாஸ் திரி. அவன் பிராம்மணர்கள் செய் யும் அநியாயத்தை எதிர்க்கிறான். அவன் மற்ற இனத்தாரோடு அதி கம் பழகவில்லை. ஆகவே அவன் இனமொழி பேசுவதுதான் முறை. அங்கே யாருமே சநாதன பிராமண பாஷை பேசுவதில்லை. ஆகவே உருப்படியான பிராமணர்கள் யாரும் இல்லை. காசிநாத் செத்த பாம்பை அடிப்பது போல் பேசுகி றான். இந்தக் காட்சி ஒரு இனத் தைக் கேலி செய்கிறது என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இதை உடனே வெட்டிவிட்டு, கடைசியில் தலைவரின் முடிவைக் காட்டிவிட லாம். நன்றாக இருக்கும்.

சாரு—சீனு,
திருமயிலை.

வீரபாண்டிய கட்டபொம்மன்

வெள்ளையத்தேவனும் வெள்ளை யம்மாளும் மாண்டு விடுகின்றனர். அப்போது இதயம் வெடித்து விடும் நிலையிலே எழுந்து நின்று கைகளைத் 'தூக்கி, ''தாயே, ஜெக்கம்மா!'' என்று கூவுகிறான் கட்டபொம்மன். நம் இதயம் வெடித்து விடும்போலிருக்கிறது. கண்கள் ஊற்றென நீரைப் பெருக்குகின்றன. இந்தநிலை நீடித் திருந்து அந்த இடத்தில் அப்படியே மௌனப்படமாக விட்டிருந்தால் மக்களிடையே அந்தக் காட்சியில் அந்தத் துக்கத்தின் பிரதிபலிப்பு இருந்திருக்கும்.

ஆனால் உடனே ''ஜக்கம்மா வேறேது திக்கம்மா'' பாடலைப் பாடிக் குழப்பம் செய்து, துக்கத் தின் சாயையைக் குலைத்து, அவர் கள் மரணத்தில் மற்றவர்களுக்கு மகிழ்ச்சி உண்டு என்பதுபோல் காட்டி விட்டார்கள். இந்தப் பாடலால் படத்துக்குக் கவர்ச்சியு மில்லை. முன் காட்சியின் சுவையை யும் கெடுக்கிறது. வெட்டி விடுவ தால் லாபமே தவிர நஷ்டமில்லை.

எந்தத் துக்கக் காட்சியைத் தொடர்ந்தும் ஆடலும் பாடலும் வந்தால் அது எல்லா சுவாரஸ்யத் தையும் கெடுத்து விடுகிறது.

நந்தனா,
செங்கற்பட்டு.

''முறையோடு திருமணம் முடிஞ்சுட்டதுங்க. இனி எங் களை பிரிக்க யாராலும் முடி யாது!'' என்கிறாரா? - மெஜஸ் டிக் பிக்சர்ஸ் ''நாட்டுக்கொரு நல்லவள்'' படத்தில் விஜய குமாரி, எஸ். எஸ். ஆர்.

"அதோ போலீஸார் வரும் சப்தம் கேட்கிறது அத்தான்! இங்கிருந்து போய் விடுங்கள்!" - ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் 'சங்கிலித் தேவன்' தமிழ்ப் படத்தில் 'இலட்சிய நடிகர்' எஸ். எஸ். ராஜேந்திரன் - ராஜசுலோசனா.

பேசும் படம்

'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்பது போன்ற முகபாவத்தோடு இவள் பார்க்கும்போது, ஏதோ ஆபத்து நடந்ததாகச் சந்தேகம் ஏற்படுகிறதல்லவா? - ஜூபிடரின் மாய, மந்திர, தந்திரம் நிறைந்த "அமுதவல்லி" தமிழ்ப் படத்தில் தாம்பரம் லலிதா.

டோ ஆல்பம்

"இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லு கிருய்? புலிப்பால் கொண்டு வரவேண்டுமா, நாட்டுப் பொறுப்பேற்று நல்ல திட்டங்கள் தீட்ட வேண்டுமா? எது வேண்டும்?" என்று கேட்கிருனே, இந்த உத்தமவீரன்? ஆசையோடு பார்க்கும் இவன்தான்...

....இந்த "அ ர சி ள ங் கு ம ரி" யின் காதலனே
இவள் ஆசைப்படுவது எதை என்று அறிய விரும்பி
னால், ஜூபிடர் பிக்சர்ஸின் பிரம்மாண்ட தயாரிப்பான
"அரசிளங்குமரி"யைப் பார்க்க வேண்டும். "அரசிளங்
குமரி"யில் எம். ஜி. ராமச்சந்திரனும் - பத்மினியும்.

இந்த ஆளைப் பார்த்தால் சரியான அசடுபோலத் தோன்றுகிறதல்லவா? ஆனால் இவர் லேசுப் பட்டவரல்ல என்பதை இவர் கண்கள் நமக்குச் சொல்லாமல் சொல்லுகின்றனவே! இந்த வேஷம் எதற்கோ என்ற சந்தேகம் ஏற்படுகிறதல்லவா?....

....கள்ளங்கபடமற்ற முகமும் சாந்தமான பார்வையும் கொண்ட இவன் மிகுந்த புத்திசாலிபோலும் தோன்றுகிறதல்லவா? ஜூபிடரின் "அமுதவல்லி"யில் டி. ஆர். மகாலிங்கம். இந்தப் படத்தில் இவர் இரட்டை வேடங்களில் அருமையாக நடிக்கிறார்.

"இந்த மாதிரி நகைகளை அடக்கமான குடும்பப் பெண்கள்தான் பொறுமையோடு அணிவார்கள்" என்பதுபோல் தோன்றும் இவள்தான் அமுதவல்லி யோ? ஜூபிடரின் "அமுதவல்லி" தமிழ்ப் படத்தில் இப்படி அழகாகத் தோன்றுகிறார் எம். என். ராஜம்.

"பொன் நகைகளைவிட புன்னகையால்தான் புத்தி சாலியான ஒரு பெண் எந்தக் காரியத்தையும் சுலப மாகச் சாதிக்கலாம்" என்று, அனுபவ பூர்வமாகச் சொல்லுகிறாளா, இவள்? மெர்க்குரி பிலிம்ஸ் "சிரிக்கும் சிலை"யில் அஷ்டாவதான நடிகை பானுமதி.

" 'எல்லாரும் இந்நாட்டு மன்ன'ராக இருந்தாலும் கூட எனக்கு அடிமையாகத்தானிருக்க வேண்டும்" என்பதுபோல் அலக்ஷியமாகப் புன்னகை வீசும் பி. சரோஜாதேவி, ஜுபிடரின் "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" படத்தில் இப்படித் தோன்றுகிறார்.

போட்டோக்கள் :
ஜுபிடர் விஜயகம்

காட்சி 5

நான் பாக்கியசாலி

நீதிபதி முன் நிறுத்தப்படும் இந்திரஜித், இன்பசாகரனை கொலை செய்யத் தீர்மானித்ததற்காக ஆயுள்தண்டனை விதிக்கப்படுகிறான். இன்பசாகரன் வேட்டை முடிந்து திரும்பியதும் விவரம் கூறுகிறார் நீதிபதி. இந்திரஜித் தன் சகோதரனாகத் தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்து அவனை அழைத்துவரச் சொல்கிறான் இன்பசாகரன். பூங்கொடி விவரமறிந்தவளாதலால் துடித்துப் போய் ஓடி வருகிறாள்.

பூங் : அத்தான்! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்? உங்களைக் கொல்லவேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவருக்கு விடுதலையா?

இன் : பூங்கொடி! இதிலே ஒரு சுவையும் சோகமும் நிறைந்த கதையே அடங்கியிருக்கிறது! ஆமாம், உனக்கு இந்திரஜித்தைப் பற்றிய விவரம் முழுவதும் தெரியுமா?

பூங் : எனக்குத் தெரிய வேண்டியதில்லை...என் கணவரின் உயிர்தான் எனக்கு முக்கியம்.

இன் : பேதைப் பெண்ணே! சாவு என்றால் தொடை நடுங்கும் கோழை என்றா உன் கணவனை நினைத்துக்கொண்டாய்? நீதி தேவரே! நீங்கள் போகலாம்!

நீதி : உத்திரவு மகாராஜா!

பூங் : அத்தான்!

இன் : கவலைப்படாதே பூங்கொடி! உன் அத்தான் யோசிக்காமல் எதையும்செய்யமாட்டான். யார் தெரியுமா இந்திரஜித்? என் தம்பி, என் தம்பி!

பூங் : தெரியுமத்தான், எனக்கு!

இன் : என்ன, உனக்குத் தெரியுமா?

பூங் : ஆமாம்! அவர் சில மாதங்கள் பவழத்தீவிலே தங்கியிருந்தார்!

இன் : ஆச்சரியமாக இருக்கிறதே! பிறகு ஏன் பூங்கொடி இதை என்னிடம் கூறவில்லை?

பூங் : எப்படியத்தான் சொல்வேன்? உங்கள் தந்தை செய்த காரியத்திற்காக அவர் உங்களைப் பழிவாங்கவேண்டுமென்று அலைந்துகொண்டிருக்கிறார். இந்த நிலையில் நான் சொல்லி, நீங்கள் உடனே அவரைச் சந்திக்கப் புறப்பட்டு, அந்தநேரம் ஆத்திரத்தில் அவர் உங்களை ஏதாவது செய்து விட்டால்?

இன் : பைத்தியக்காரி! ராஜயோகத்தில் மிதக்கவேண்டியவன் நாடோடியாக வாழ்ந்துகொண்டிருக்கிறான். பிறகு அவனுக்கு என் மீது ஆத்திரம் இருக்காதா என்ன? பூங்கொடி! அவன் திரும்பிவந்ததும் நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? அவனிடமே செங்கோலைக் கொடுத்து, "இந்தா தம்பி, செல்வபுரி ராஜ்யம்" என்று ஒப்படைக்கப் போகிறேன்.

பூங் அத்தான்!

இன் : என்ன பூங்கொடி?

பூங் : இவ்வளவு பெரிய பரந்த உள்ளம்கொண்டவரை இந்த உலகம் பார்த்திருக்கவே முடியாது! நான் பாக்கியசாலி அத்தான். நான் பாக்கியசாலி!

காட்சி 6

போகிறேன் அத்தான்!

மன்மதன் அங்கே வந்து, இந்திரஜித் ஏற்கெனவே பூங்கொடியை மணந்து விட்டான் என்று கூறி இன்பசாகரனின் உள்ளத்திலே தீமூட்டிவிட்டுப் போகிறான். இன்பசாகரன், கோபத்தில் அறிவிழந்து பூங்கொடியிடம் வருகிறான்.

இன் : பூங்கொடி, உண்மையைச் சொல்லு! ஒளிக்காமல் சொல்லு! நீ இந்திரஜித்தைக் காதலித்தது உண்டா இல்லையா?

பூங் : என்ன அத்தான் இது, என்னென்னவோ பேசுகிறீர்கள்?

இன் : சீ, விளையாடாதே! கேள்விக்குப்பதில்! நீ காதலித்தது உண்டா இல்லையா?

பூங் : இல்லை, அத்தான் இல்லை; உங்கள்மீது ஆணையாக இல்லை. என்னை நம்புங்கள்!

இன் : போதுமடி உன்னை நம்பியது! பவிஷு கெட்டவளே! இப்போதுதான் தெரிகிறது. பொன்னுக்கும் பொருளுக்கும் நான். திடீர் சக்கரவர்த்தியாகி விட்டதால், ஏதுமில்லாத இந்திரஜித்தை நீ சரியானபடி ஏமாற்றி விட்டாய்! அதனால்தான் இளமைத் துடிப்பு மிகுந்த அவன் உன்னை நிழல்போலத் தொடர்ந்திருக்கிறான். எங்கு அவன் வெளியே உலவினால் விஷயம் எனக்குவிளங்கிவிடுமோ, விபரீதம் நேர்ந்து விடுமோ என்று பயந்து அவன்மீது பொய்க்குற்றத்தைச் சுமத்தி ஆயுள் தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறாய்! அவனை விடுதலை செய்ய முயன்ற என்னையும் முழுமூச்சோடு தடுத்திருக்கிறாய்! தறுதலையே! நீ எனக்கு மனைவியல்ல; ஒழுக்கம் கெட்டவள், ஒழுக்கம் கெட்டவள்!

பூங் : அத்தான்! என் வயிற்றிலிருக்கும் உங்கள் குழந்தையின் பேரில் சொல்லுகிறேன்; நான் தூய்மையானவள்.

இன் : தூய்மையாம் தூய்மை! நீ புதுப்புனல் ஆடி, புத்தாடை உடுத்தித் துப்புறவாய் இருக்கும் புறத்தூய்மையை அல்லடி நான் விரும்புவது! அகத்தூய்மை, உள்ளத் தூய்மை! அதை விரும்பினேன். ஆனால் உன் நெஞ்சம் அழுக்கு நெஞ்சமடி, அழுக்கு நெஞ்சம்! பொன்னாசை கொண்ட பெரும்பேயே! இனிமேல் உனக்கு என் மாளிகையில் இடமில்லை! போ...உன் பழைய காதலன் இந்திரஜித் இருக்கும் இடத்திற்கே சென்று கெட்டழிந்து போ, போ! போய்விடு!

பூங் : அத்தான்! நான் எங்கு போவேன்? உங்களைவிட்டு நான் சொர்க்கலோகமே சென்றாலும் அதுவும் பாழ் நரகமாகத்தானே இருக்கும்? அத்தான்...என்னை நம்புங்கள் அத்தான், என்னை நம்புங்கள்!

இன் : பூங்கொடி... இப்போது நீ போகப்போகிறாயா இல்லையா?

பூங் : ஊஹூம் முடியாது. உங்கள் கையாலேயே செத்தாலும் சாவேனே தவிர, உங்களை விட்டு நான் போகமாட்டேன் ... போகமாட்டேன்!

இன் : ஆ, யாரங்கே! இவளை இந்த விநாடியே இழுத்துச் சென்று அரண்மனைக்கு வெளியே தள்ளுங்கள்! சோம்பேறிகளா! ஏன் நிற்கிறீர்கள்? இன்று முதல் இவள் மகாராணியல்ல; மானங்கெட்டவள். உம், இழுத்துச் செல்லுங்கள்!

காவலாளிகள் நெருங்குகிறார்கள்.

பூங் : விடுங்கள் என்னை; விடுங்கள் என்னை. நானே போகிறேன் அத்தான், நானே போகிறேன்! இவளுக்கு உங்கள் மேலுள்ள ஆசையில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட உங்கள் ஐஸ்வரியத்தின் மீது கிடையாது அத்தான்! கிடையாது. இவைகளை எல்லாம் எப்பாடு பட்டாவது இந்த உலகத்துக்கு உணர்த்தாமல் நான் சாகமாட்டேன். வருகிறேன் அத்தான்! வருகிறேன் அத்தான்.

வேதனையோடு வெளியேறுகிறாள். இன்பசாகரன் மெதுவாக, சோர்வோடு தன் ஆசனத்தில் அமருகிறான். நாகநாதன் சிப்பாய்களுடன் வந்து சூழ்கின்றான்.

நாக : நாடோடியாக வாழ்க்கை தொடங்கி இடையிலே நாடாளும் உரிமை பெற்ற இன்பசாகரா! பறி போய்விட்டது உனது பதவி! இனிமேல் நீ பாம்பின் வாய் அகப்பட்ட தேரை; நரியின் வாய்ச் சிக்கிய நண்டு!

இன் : நாகநாதா! என்ன இதெல்லாம்?

நாக : அஹ்ஹஹஹஹா! இதுவா? சதி, சாகசம், கடைந்தெடுத்த பச்சைத் துரோகம்!

உங்கள் வீட்டு அழகுக்குப் பொருத்த மானது



ஓரியண்ட் விசிறிகளின் புதிய அமைப்பு தோன் றுவதற்கு முன், உற்பத்திப்பொருள்களின் அழகில் கைத்தொழில் டிஸைனர்கள் அவ்வளவு அறிவு ஆற்றல் காட்டவில்லை.

உபயோகிப்பாளரைத் திருப்தி செய்யவேண்டும் என்று சிரத்தை மிக்க ஓரியண்ட் டிஸைனர் கள் உங்கள அறையின் அழகுக்கு ஏற்ற நேர்த்தி யான விசிறியைத் தயாரித்துத் தருகின்றனர்கள். சிருங்காரக் கோடுகள் வழவழப்பான அச்சுப்பெட் டியின் எல்லைப் புறங்கள் அமைந்த கேஸிங் என்றும் நிலைத்திருப்பதுமான முத்துப்போன்ற ஸ்டோவ் எனுமல் பினிஷ் இவைகள் ஒவ்வொரு வீட்டிலும் அழகான சிறபச் சித்திரமாக அமைந்திருக்கிறது. மகிழ்ச்சியைத் தரும் வஸ்து. வேலைத் திறனில் உத்தமமானது.

Orient FANS

ஓரியண்ட் விசிறி-தோற்றத் திலும் சேவையிலும் பல வருடங்கள் முன்னதாக நிற்கிறது.

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்,
6 கோர் பீபி லேன், கல்கத்தா-11

OG-2/58

நாக : நரசிம்மா! இவனை இழுத்துச் சென்று பொதிகை மலைச் சுரங்கத்திலே தள்ளு! அங்கே இவன் ஆயுட்கைதியாகக் காலங் கழிக்கட்டும்: இங்கே நான் நிரந்தரமாக மகாராஜாவாக அரசாளுகிறேன். உம்...கொண்டு செல்லுங்கள்!

இன் : நாகநாதா! இது அநியாயம்...அநியாயம்...அநியாயம்!

நாக : அஹ்ஹஹ்ஹா! நரிக்கண்ணு! அந்தப் பயல் இந்திரஜித்தையும இங்கே விட்டு வைக்காதீர்கள்! அவனையும் பொதிகை மலைச் சுரங்கத்திற்கே அழைத்துச் சென்று நன்றாக வேலை வாங்குங்கள். அதோடு அங்குள்ள அதிகாரி முதல் சாதாரண சிப்பாய்வரை எல்லா சிப்பந்திகளையும் உடனடியாக மாற்றுங்கள்! ஹும், போங்கள்!

நரி : சரி பிரபோ!

காட்சி 7

அண்ணனும் தம்பியும்

ஆள் அடையாளம் தெரியாமல் இன்பசாகரனும் இந்திரஜித்தும் பொதிகை மலைச்சுரங்கத்திலே கடுமையான வேலைகளைச் செய்து வருகிறார்கள். ஒருநாள் அயர்ந்து கிடக்கும் இன்பசாகரனை சிப்பாய் அடிக்கவர அவனைத் துரத்தி விடுகிறான் இந்திரஜித். இருவருமாக ஒரு பார வண்டியை இழுத்து வருகிறார்கள். தனக்குதவிய இளைஞனுக்கு நன்றி தெரிவிக்கிறான் இன்பசாகரன்.

இன் : நல்ல நேரத்திலே உதவி செய்தாய். மிகவும் நன்றி! நீயார்? உன் பெயரென்ன?

இந் : பெயரில் என்ன இருக்கிறது?

இன் : தாய் தந்தையர்கள்?

இந் : இல்லை.

இன் : சகோதரர்கள் யாராவது?

இந் : ம்...இல்லை. இந்த உலகமென்னும் ஒய்யாரத் தோப்பிலே நானோர் தனி மரம். அதுவும் இடி விழுந்து கருகிப்போன மரம்!

இன் : சஞ்சலப்படாதே! என்று நீ எனக்காகப் பரிதாபப்பட்டு எனக்கு உதவி செய்தாயோ அந்த வினாடி முதல் நீ என் தம்பியாகி விட்டாய்.

இந் : ஏதோ ஒரு உணர்ச்சி உன்னை அண்ணா என்று அழைக்கச் சொல்கிறது.

இன் : எனக்கும் அதே உணர்ச்சிதான் உன்னைத் தம்பி என்று அழைக்கத் தூண்டுகிறது.

இந் : அண்ணா...!

இன் : தம்பீ...!

ஒருவரையொருவர் தழுவிக் கொள்கின்றனர்.

காட்சி 8

தம்பீ...அண்ணா!

இன்பசாகரனுக்கு உதவிய இந்திரஜித்திற்கு கசையடி கொடுக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறான் அதிகாரி. மறுக்கும் இந்திரஜித்துக்குக் கசையடி கிடைக்கிறது. இருவரையும் சேர்த்து சங்கிலியால் பிணைத்துத் துன்புறுத்துகின்றனர் சிப்பாய்கள். கழுத்துச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுத் தவிக்கும் இருவரும் களைப்புடன் உட்கார்ந்திருக்கிறார்கள்.

இன் : தம்பி...நான் எவ்வளவு கேட்டும் நீ இங்குவந்த காரணத்தைச்சொல்ல மறுக்கிறாயே. நீ யாரையாவது கொன்றுவிட்டு....

இந் : இல்லை இல்லை! இன்னும் கொலை செய்யவில்லை. அவனை மட்டும் கொலை செய்திருந்தால் இந்நேரம் நான் இப்படியா இருப்பேன்? இன்பத்தின் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து கொண்டல்லவா கொட்டமடிப்பேன்?

இன் : அப்படி என்ன தம்பீ அவன் உனக்குத்தீங்கு செய்தான்?

இந் : ஒன்றா, இரண்டா? முதலில் என் சொத்துக்கள் முழுவதையும் சூறையாடினான்; பிறகு

என் பிரியத்திற்குரியவளையும் அபகரித்துக்கொண்டான்!

இன் : அப்படியா! இப்போது அவன் எங்கிருக்கிறான்?

இங் : அந்த அம்புவிழி ஆரணங்கின் மடியிலே, அலைஅலையாய்த் தொடர்ந்துவரும் இன்பத்தின் இடையிலே, சுகமென்னும் இமயத்தின் உச்சியிலே சோபிதமாக இருக்கிறான் அவன்!...அவன் மட்டும் என் கையிலே சிக்கினால், இமைக்கு முன்னர் அவன் குரல் வளையை நெறிப்பேன்; கருவிழிகளைத்திருகி எடுப்பேன்; துண்டம் துண்டமாக அவன் சதையை வெட்டியெடுத்துக் காக்கைக்கும் கழுகுக்கும் இரையாக்குவேன்...

இன்பசாகரனை உண்மையிலேயேதான் எதிர்பார்த்த சகோதரனைக் கருதி அவன் கழுத்தை நெறிக்கிறான்.

இன் : போதும்! போதும்! தம்பி!

இங் : என்னை மன்னித்துவிடு அண்ணா! ஏதோ உணர்ச்சி வசப்பட்டு செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு.

இன் : **(கழுத்தை அமுக்கிக் கொண்டு)** பரவாயில்லை தம்பி, பரவாயில்லை. தம்பி! துன்பம் உன் வாழ்க்கையில் மட்டும்தான் என்று நினைக்காதே. என் வாழ்க்கையிலும் உண்டு.

இங் : என்ன துன்பமண்ணா அது?

இன் : சொல்கிறேன். என் மனைவி எனக்குத் துரோகம் செய்து விட்டாள் தம்பி, துரோகம் செய்து விட்டாள்!

இங் : வேறு யாராவது?...

இன் : ஆமாம்... அப்படித்தான். என் மனைவி ஏற்கனவே வேறொருவனிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தவள் தம்பி, பறிகொடுத்தவள்!

இங் : ஆகா, என்ன விந்தை! எப்படி உன் காதல் வாழ்வில் ஒருவன் குறுக்கிட்டானோ, அதைப் போலவே என் வாழ்க்கையிலும்

சோல் ஏஜெண்டுகள் :

தாதா & கோ.,

86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

ஒருவன் புகுந்து என் அன்புக் குரியவளைப் பிடுங்கிக் கொண்டான்...ஆகா...நம்மிருவருக்கும் ஒரே மாதிரியான துன்பங்கள் அண்ணா. இனிமேல் நம்மை யாராலும் பிரிக்க முடியாது அண்ணா; யாராலும் பிரிக்க முடியாது.

இன் : தம்பி!

இந் : அண்ணா!

ஒருவரையொருவர் கட்டித் தழுவுகின்றனர். அப்போது கந்தகச் சுரங்கத்தின் வழி மூடிக்கொண்டதால் திறப்பதற்கு அவ்விருவரையும் அனுப்ப உத்தரவிடுகிறான் சிறை அதிகாரி.

காட்சி 9

அண்ணா...அண்ணா!

கந்தகச் சுரங்கத்தினுள் இன்பசாகரனும் இந்திரஜித்தும் செல்கின்றனர். சுரங்கம் வெடிக்கிறது. அந்த விபத்தில், பார்வையிழந்து விடுகிறான் இன்பசாகரன். இந்தக் கலாட்டாவில், இன்பசாகரனைத் தூக்கிக் கொண்டு ஓடிவிடுகிறான் இந்திரஜித். பூங்கொடி விவரமறிந்து தன் மகனுடன் தவித்துப் போகிறாள். மகன் வேறு, 'அப்பா எங்கே?' என்று நச்சரிக்கிறான். இந்திரஜித் இன்னல்களைக் கடந்து செல்லும்போது, 'மன்னர் வேட்டையாட வந்திருக்கிறார்' என்ற குரல் கேட்டு, மன்னன்தான் தன் அண்ணன்; அவனைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு போகிறான். ஆனால் அங்கிருப்பது நாகநாதன்!

இந் : ஏன் அப்படியே நிற்கிறாய் வெளியே வா! வா வெளியே! கொடியவனுக்கு மகனாகப் பிறந்து கொடுமையின் அவதாரமாகத் தண்டவமாடும் ஏ கொடுங்கோலனே! உன்னால் பாதிக்கப்பட்டவன் பழி வாங்க வந்திருக்கிறான்! ஆலவட்டம் சுழல அரசு கட்டில் ஏறிய அக்கிரமத்தின் கடைசிச் சந்ததியே! உன் உயிர் குடிக்க நல்ல நரசிம்மாவதாரம் வந்திருக்கிறது வெளியே வா! வா வெளியே!

நாகநாதன் வெளியே வருகிறான்.

நாக : ஹ ஹ் ஹ ... வீரனே! நானல்ல நீ தேடி வந்திருக்கும் இந்தத் தேசத்து ராஜன்!

இந் : பிறகு அவன் எங்கே? எங்கே அந்த இன்பசாகரன்?

நாக : இன்னுமா தெரியவில்லை? கையிலே வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலையும் விவஸ்தை கெட்டவனே! அதோ பார்! அதோ நீ தூக்கிக் கொண்டு வந்திருக்கிறாயே; அவன் தான் அரசன். அவன்தான் இன்பசாகரன்!

இந் : ஆ! இவனா? இல்லை; இருக்கமுடியாது!

நாக : பைத்தியக்காரா! மாஜியாகி விட்டான் மன்னனாக இருந்த இன்பசாகரன்! கைதியாகி விட்டான் இந்த நாட்டுக் காவலன். இதற்கெல்லாம் காரணம் நான்தான். நாடு போற்றும் நாகநாதன்.

இந் : ஆ...? ஏ கவின் மிகு கட்டாரியே! இதோ என் எதிரியைக் கொன்று, இப்போதே உனக்கு விருந்து வைக்கிறேன்.

அவன் முன் வெள்ளை உருவமொன்று தோன்றுகிறது.

வெள். உரு. : இந்திரஜித்! இருதயத்தை அதற்குள்ளாகவா இழந்துவிட்டாய்? அன்று நீ பொதிகைமலை சுரங்கத்தில் இன்பசாகரனை, ''அண்ணா அண்ணா!'' என்று உச்சிமோந்து கட்டித் தழுவி கண்ணீர்விட்டதை நினைத்துப்பார்.

அந்த உருவம் சுற்றுகிறது. கறுப்பு உருவம் தெரிகிறது.

க. உ : ஏன் திகைக்கிறாய்? தாழ்த்திய கரத்தினை மேலே தூக்கு. மழுங்கிய கட்டாரியை மீண்டும் தீட்டு. ஹூம், அதைப் பாய்ச்சு உன் எதிரியின் நெஞ்சில். ஹூம் தயங்காதே!

கத்தியை மேலே தூக்குகிறான் இந்திரஜித்.

வெ. உ : இருதயமற்றவனே! இருதயமுள்ள இந்திரஜித் நேற்று

இருந்தானே, இன்று அவன் எங்கு போனான்?

க. உ.: இதோ இங்குதான் இருக்கிறான் இருதயமுள்ள இந்திரஜித்! ஆனால் நேற்று அவன் அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடந்த அரும்பு. இன்று அவன் உண்மை ஒளி தெரிந்துகொண்ட மலர். நேற்று அவன் முட்டாள் இன்று அவன் புத்திசாலி.

இந்: ஆமாம் ஆமாம், நீ சொல்வது உண்மை.

வெ. உ: இந்திரஜித்! உன்னை மன்றாடிக்கேட்டுக் கொள்கிறேன். இன்பசாகரனை விட்டுவிடு. உன் அண்ணன் என்பதற்காக அல்ல; அவன் பலஹீனன் என்பதற்காக. பார்வை தெரியாத குருடன் என்பதற்காக. இந்திரஜித்! இரக்கம் காட்டு, இரக்கம் காட்டு!

இந்: என்ன, நானா? இரக்கம் காட்டுவதா?

வெ. உ: ஆமாம் ஆமாம்! இந்த ஒருமுறை மட்டும் எப்படியாவது இரக்கம் காட்டு. உன் காலில் விழுந்து வேண்டுமானாலும் கேட்டுக் கொள்கிறேன்.

க. உ: கூடாது கூடாது. இந்திரா! இன்று உன் தாயை தவிக்க விட்டு ஓடிப்போனானே இவன் அப்பன்; அப்போது அவன் காட்டினானா இரக்கம்? அன்று உனக்காக வர இருந்த மணப்பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடினானே இந்த இழிநகை மைந்தன்; அப்போது இவன் காட்டினானா இரக்கம்?

இந்: இல்லை இல்லை. எங்கள் குடும்பத்திடம் இவர்கள் யாருமே இரக்கம் காட்டவில்லை.

க. உ: பிறகு ஏன் நீ மட்டும் திடீரென்று சாந்த சொரூபியாக மாறவேண்டும்? அன்று உன் அன்னையின் பிரேதத்திற்கு எதிரில், அவள் நெற்றியின் இரத்தத்தால் திலகமிட்டு நீ எடுத்துக் கொண்ட வீர சபதத்தை மறந்து கேவலம் ஒரு கோழையாக மாறி விட்டாயே... தூ!

காறி துப்புகிறது.

இந்: இல்லை இல்லை. நான் எதையும் மறக்கவில்லை.

வெ. உ: இந்திரா! என் பேச்சை மீறாதே. நான் சொல்வதைக் கேள்!

இந்: சீ! என்னைக் கோழையாக்கப் பார்க்கும் கோமாளியே, விலகி நில்!

பிடித்துத் தள்ளுகிறான்.

க. உ: சபாஷ்!

மறைகிறது.

சாந்தவல்லியின் குரல் கேட்கிறது.

சாந். குர.: நில் இந்திரா நில், இந்திரா!

கஸ்தூரி பத்தி, சந்தன முகப் பவுடர், அரகஜா, கதம்ப அத்தர், சுவாக் அத்தர், ஜவ்வாது, ப்ளவர் டஸ்டு இவை நறுமணம் ஏற்றி ஆடைகளைக் காக்க உதவுபவை.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை-1.

இந்திரஜித் சுற்றுமுற்றும் பார்க்கிறான். சாந்தவல்லியின் உருவம் தோன்றுகிறது.

சாந் : இந்திரா! என்ன இதெல்லாம்? இவனைக்கொன்று விட்டால் உன் தாய் அனுபவித்த கொடுமைகள் அனைத்தும் மறைந்துவிடுமா? அல்லது மண்ணோடு மண்ணாகிவிட்ட உன் மாதாவின் பிரேதத்தில் புன்னகை பூத்து குலுங்கிவிடுமா? செல்வபுரி சாம்ராஜ்யத்துக்கு இளவரசியின் மகன் கேவலம் ஒரு கசாப்பு கடைக்காரன் நிலைக்கு எப்போது தாழ்ந்து போனான்? மனிதப் பண்புகள் அனைத்தையும்உதிர்த்து விட்ட மரக்கட்டையாக எப்போது மாறினான்? ஐயோ! என் மார்பிலே பாலூட்டி வளர்த்த நீயா இப்படி மிருகமாக மாறியிருக்கிறாய்? மகனே, நான் சொல்வதைக்கேள்! பழிக்குப்பழி, ரத்தத்துக்கு ரத்தம், அது மிருகமனப்பான்மை. பழி செய்தோருக்கு பாசம் காட்டுவது, ரத்தம் வாங்கியோருக்கு முத்தம் கொடுப்பது, இதுதான் மனித மனப்பான்மை. மகனே மனிதனாகு மனிதனாகு! இல்லாவிட்டால் நீ என் மகனல்ல! மகனே அல்ல!

இந் : அண்ணா! அண்ணா! என்னை மன்னித்துவிடு! இப்போதுதான் நான் அறிவு பெற்றேன். அண்ணா இப்போதுதான் நான் அறிவு பெற்றேன். ஆயிரம் இரத்தத்துளிகளால் சாதிக்க முடியாத காரியத்தை அன்பு இருதயம் சிந்தும் ஒரு சிறு கண்ணீர்த்துளி சாதித்துவிடும் அண்ணா! அதை இப்போதுதான் உணர்ந்து கொண்டேன் அண்ணா! அன்பு! அதன் வழி ஊறிய பாசம்! இரண்டிலும் விளைந்த நேசம்! இவையெல்லாம் இணைந்தால் இந்த லோகத்தில் மோசமில்லை! வீண் நாசமில்லை. இந்தத் தத்துவத்தை இப்போதுதான் புரிந்து கொண்டேன் அண்ணா! என்னை மன்னித்துவிடு! என்னை மன்னித்துவிடு!

நாக : கையாலாகாத கோழைப் பயல். இவர்கள் இருவரையும் நமது ரகசியக்கைதிகளை வைக்கும் வேங்கைமலைக் கோட்டைக்குக் கொண்டு சென்று அங்கே அதிகாரியிடம் ஒப்படையுங்கள். மறுபடியும் அவனுக்கு கண் பார்வை வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளட்டும்!

இருவரும் இழுத்துச் செல்லப்படுகிறார்கள்.

காட்சி 10

சிறைக்குப் போகும்போது ஆற்றில் குதித்துத் தப்பி விடுகிறான் இந்திரஜித். அவன் தவறிவிழுந்து இறந்ததாகத் தீர்மானித்து இன்பசாகரனைக் கொண்டு போகிறார்கள். அங்கே ஒரு வைத்தியரிடம் அழைத்துப்போய், கண்பார்வை மீளாதபடி வைத்தியம் செய்யச் சொல்லுகிறார்கள். அந்த வீட்டில் தான் பூங்கொடியு மிருக்கிறாள். அவள் காலடியோசை கேட்ட இன்பசாகரன் மனைவியைத் திட்டுகிறான். அவள் வைத்தியரிடம் கதறுகிறாள்.

வைத் : அழாதேம்மா! நான் எல்லாவற்றையும் புரிந்து கொண்டேன்.

பூங் : ஐயா... இதுவரை எனக்கு என்னென்னமோ செய்திருக்கிறீர்கள். அபலையாய், அனாதையாய், ஆதரவற்றவளாய் வந்த என்னை வைத்துக் காப்பாற்றியிருக்கிறீர்கள். அதுவெல்லாம் எனக்குப் பெரிய உதவியல்ல. கண்ணிழந்து கஷ்டப்படுகிறார் என் கண்ணாளர். அவருக்குக் கண் பார்வை திரும்பவேண்டும். அது தான் நீங்கள் செய்யவேண்டிய உதவி. உங்களைத்தவிர வேறு யாராலும் செய்யமுடியாத உதவி! செய்வீர்களா, செய்வீர்களா?

வைத்தியர் யோசனையுடன் சிறிது தூரம் போகிறார்.

வைத் : செய்யலாம். ஆனால் மேலிடத்து உத்தரவு என்ன தெரியுமா? அவர் கண்கள் குணமாவதைத் தடுக்கவேண்டுமாம்!

பூங் : ஆ! ஆ! வைத்தியரே! என் கண்ணிரண்டையும் வேண்டு

நாளொரு மேனியாய், பொழுதொரு வண்ணமாய்...
ரெக்ஸோனா
சோப்
உங்கள் சருமத்தை
எழிலோங்கச்
செய்கிறது
ரெக்ஸோனா சோப்பினால் நீங்கள் முகங் கழுவும் ஒவ்வொரு முறையும் ... உங்கள் சருமம் அதிக மென்மையுடனும், மழமழப்புடனும் மிளிரும்; காரணம் ரெக்ஸோனாவில் அடங்கியுள்ள 'கேடில்'. எழிலூட்டும் பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய 'கேடில்' உங்கள் சருமத்திற்கு ஊட்டமளிக்கிறது.
உங்கள் எழிலுக்கு...
ரெக்ஸோனா
Rexona
BLENDED WITH CADYL
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனா ப்ரொ. லிமிடெட் சார்பாக,
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

மாஞலும் பிடுங்கித் தருகிறேன். அவர் கண்களை காப்பாற்றுங்கள். இல்லையேல் உங்கள் காலடியிலேயே செத்துவிடுவாள் இந்தப் பூங்கொடி, செத்துவிடுவாள். வைத்தியரே! உதவி செய்யுங்கள். உதவி செய்யுங்கள்!

அவர் கால்களில் விழுகிருள்.

வைத்: எழுந்திரு, அம்மா... என் மனமும் கல்லல்ல. வஞ்சகத்தை வஞ்சகத்தால் தான் வெல்லவேண்டும்; நாளைமுதல் இன்பசாகரனின் பார்வையைக் 'கெடு'ப்பதாக கூறிக்கொண்டே! பார்வையைக் 'கொடு'ப்பதற்கு சிகிச்சை செய்கிறேன், போதுமா?

மெய்மறந்து அவர் கைகளைத் தன் கண்களில் ஒத்திக் கொள்கிருள்.

பூங்: வைத்தியரே!

''அம்மா'' என்று குழந்தை கூப்பிடும் குரல்கேட்டுத் திரும்புகிருள்.

குழ: அம்மா! அம்மா! ஏனம்மா அழுகிறீர்கள்?

பூங்: வாம்மா சொல்லுகிறேன்.

அங்கிருந்து அழைத்துச் சென்றுவிடுகிருள்.

காட்சி 11

ஓலை கிளம்புகிறது

இந்திரஜித், மன்னர் மருதவாணரைச் சந்தித்து விவரம் கூறுகிருன்.

மரு: என்ன! நீ என் மறைந்துபோன மாணிக்கம் சாந்தவல்லியின் மகன் இந்திஜித்தா?...குழந்தாய். நீ இறந்துவிட்டதாக நினைத்து மதியிழந்தேன்! என்னை மன்னித்துவிடு! இனிமேல் நீதான் என் உண்மையான வாரிசு!

இந்: மகாராஜா! நான் வாரிசுரிமையைக் கேட்டுப் பெறுவதற்காக இங்கே வரவில்லை. அரசாங்கம் நாகநாதன் கையில். அண்ணன் இன்பசாகரன் வேங்கைமலைக்கோட்டை சிறைச்சாலையில்! இந்தக் கொடுமையைக் குழிதோண்டிப் புதைக்க நீங்கள் உடனே நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

மரு: இனிமேலும் சும்மா இருக்கவா? இந்திரஜித்! முதலில் சமாதானம் - அது முடியாவிட்டால் போர். அதனுல் இன்றே அவனுக்கு என் ராஜ்யத்தை அமைதியான முறையில் காலி செய்யும்படி ஓலை அனுப்புகிறேன்,

இந்: அப்படியானுல் நான் முன்னே செல்வபுரி செல்கிறேன்.

மரு: இந்திரஜித்! முதலில் உணவு அருந்துவோம் வா.

போகிருன்.

காட்சி 12

கண் திறக்கவில்லை - மனக் கதவு திறந்தது!

இன்பசாகரனின் குழந்தை அவனிடம் வருகிறது. அன்போடு கூப்பிடுகிருன்.

குழந்: மாமா மாமா!

இன்: வைத்தியர் பேத்தி மகளா?

குழந்: இதோ பாத்திங்களா? நான் புத்தாடை உடுத்தியிருக்கேன்!

இன்: ஐயோ! நான் பார்க்க முடியாதே குழந்தை. உனக்குத் தெரியராப் போல என் கண்ணுக்கு எதுவுமே தெரியாதும்மா!

குழந்: அப்ப நீங்க குருடா இருக்க வேண்டாம் மாமா, நானே உங்களுக்குக் கண்ணுயிருக்கேன்.

அவள் கழுத்தைக் கட்டிக் கொள்கிருள்.

இன்: ஹூம்...என் மனைவிக்குக் குழந்தை பிறந்திருந்தால் இந்நேரம் அது உன் உயரம் தான் இருக்கும்!

குழ: என்ன மாமா, இப்படி இழுத்தார்ப்போல சொல்றீங்க? உங்களுக்கு பெண்ஜாதி இல்லியா? இல்லாட்டா அவுங்களுக்குக் குழந்தை இல்லியா?

இன் : இரண்டும்தான் குழந்தாய்! எனக்கு மனைவி இருந்தாள், மனைவி. அவள் என்னை ஏமாற்றி விட்டாள்!

குழ : போங்க மாமா! பொம்பளைங்க என்னை ஏமாத்தவே மாட்டாங்க! உங்களைப்போல ஆம்பளைங்கதான் ஏமாத்துவாங்க!

இன் : இல்லை; உனக்குத் தெரியாது. அந்தப் பயல் இந்த விஷயங்களை எல்லாம் கூறும்போது நீ பக்கத்திலே இருந்திருந்தால்......

குழ : ஓகோ! யாரோ என்னமோ சொல்லி, பெண்டாட்டி மேல் கோவமாயிருக்கிங்களா?

இன் : ஆமாம்! ஆனால் நான் கேள்விப்பட்டது அத்தனையும் உண்மை!

குழ : மாமா! கோவிச்சுக்காதீங்க! இப்படி உக்காருங்க! ஒரு சந்தேகம்! நீங்க என்னைக்காச்சும் பள்ளிக்கூடத்துல படிச்சிருக்கிங்களா?

இன் : ஓ...படிச்சிருக்கேன்!

குழ : அப்ப, 'கண்ணால் காண்பதும் பொய்; காதால்கேட்பதும் பொய்; தீரவிசாரிப்பதே மெய்' அப்படீன்னு பழமொழி கேட்டதில்லே?

இன் : ஆ!...போதும் மகளே! வேற ஏதாவது பேசு!

குழ : மாமா! என் கையிலே ஒரு பொருள் வச்சிருக்கேன், அது மாம்பழமுன்னு நான் சொல்றேன். நீங்க என்னுன்னு சொல்றீங்க?

இன் : இங்க கொடு ... நான் அதைத் தொட்டுப் பார்த்துத் தானே சொல்ல முடியும்?

குழ : ஹூம்...மாட்டிக்கிட்டிங்களா? மாட்டிக்கிட்டீங்களா? மாமா ... .மாம்பழத்தையே பார்த்து, சோதிச்சு சொல்லணும்னு சொல்றீங்களே, அப்படிப் பட்ட நீங்க, உங்க பெண்டாட்டி மேல எப்படிக் கோபமா இருக்கிங்க?

இன் : ஆ...!...?

குழ : இப்படி உங்களைப் போலத்தான் மாமா, எங்க அப்பாவும், ஒரு மூளையில்லாதவரு... அனாவசியமா அம்மா மேலே கோவமா யிருக்காரு! நான் வர்ரேன் மாமா!

இன் : குழந்தே ... குழந்தே ... இங்க வா...இங்க வா!

குழ : ஹூம்...நான் வரமாட்டேன. நடந்ததை எல்லாம் தீர விசாரிச்சு, உங்க பெண்டாட்டியோட ராசியா இருப்பேன்னு நீங்க சொல்ற வரைக்கும் நான் வரமாட்டேன்.

இன் : குழந்தே...குழந்தே! ஆம்! நீ சொன்னது அத்தனையும் உண்மைதான். தீர விசாரிக்காமல், யாரோ வழிப்போக்கன் பேச்சுக்கு செவி சாய்த்து வாழ்க்கைத் துணைவியை விரட்டி அடித்தது என் தவறுதான். அய்யோ, என் தவறுதான்! பூங்கொடி! பூங்கொடி! நீ எங்கிருக்கிறாய்?...இந்தக் குழந்தையின் தாயார் நீதானா? உன்னை வேண்டாமென்று விசாரப் படுகுழியிலே வீசியெறிந்த வீணன் நான்தானா? பூங்கொடி! பூங்கொடி!

அப்போது சிப்பாய்கள் வருகிறார்கள்.

சிப் : ஏய், குருடு! எங்க போறே?

இன் : என்னைத் தடுக்காதீர்கள்? நான் என் பூங்கொடியிடம் போகிறேன். பூங்கொடி! பூங்கொடி!

பூங்கொடி கதவைத் திறந்து கொண்டு வருகிறாள்.

பூங் : அத்தான்! அத்தான்!

ஓடி வருபவளை வைத்தியர் தடுத்து நிறுத்துகிறார்.

இன் : பூங்கொடி! என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லமாட்டாயா? பூங்கொடி! பூங்கொடி...

பூங் : அத்தான்! அத்தான்!

வைத்தியர் அவள் வாயை மூடிக் கொண்டு விடுகிறார்.

வைத் : பூங்கொடி! அவசரப் பட்டு காரியத்தைக் கெடுத்து விடாதே!

இன் : பூங்கொடி! பூங்கொடி!

வைத்தியர் பூங்கொடியை கட்டிக்கொண்டு உள்ளே போகிறார். சிப்பாய்கள் இன்பசாகரனை பிடித்துப் போகிறார்கள்.

சிப் : ஏய், உனக்கு தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா இங்கே!

இன் : அய்யா! என்னை விடுங்களேயா! நான் என் பூங்கொடியிடம் போகவேண்டும்!

சிப்பாய்கள் அவனை இழுத்துப் போகிறார்கள்.

காட்சி 13

இந்திரஜித்தின் தீர்மானம்

மன்னர் மருதவாணரின் ஓலை கண்டு நாகநாதன், இன்பசாகரனைச் சுட்டுக் கொல்ல, நரிக் கண்ணனை அனுப்புகிறான். அவன் போகும்போது, பீமன் உணவு விடுதி நடத்தும் ரதி, மன்மதன் இவர்களைச் சந்திக்கிறான். ரதியிடம் உண்மையை உளறி விடுகிறான். பிறகு அங்கு வரும் இந்திரஜித்திடம் விஷயத்தைக் கூறுகிறார்கள் இருவரும்.

இங் : யாரப்பா உணவு விடுதி நடத்தறது? மன்மதனா?

மன் : ஆ...இந்திரஜித் அண்ணே! அண்ணே! வந்துட்டியா சௌக்கியமாண்ணே?

ரதி : வந்து வேங்கைமலையிலே இருக்கிற இன்பசாகரனைச் சுட்டு கொல்றதுக்கு நரிக்கண்ணன் போறான்.

இங் : என்னது? அண்ணன் இன்பசாகரனை காப்பாத்தறதுக்காக இப்பத்தான் தாத்தாவோடு ஆலோசனை முடித்து வந்தேன். அதற்குள் இந்த விபரீதமா?

ரதி : நீங்க உடனே போயி காப்பாத்துங்க.

இங் : இதோ புறப்படுகிறேன். என் அண்ணனை எப்படியும் காப்பாற்றுகிறேன்!

மன் : நானும் வர்ரேன்! பூங்கொடிக்கு செய்த தீங்குக்கு பரிகாரமா நான் ஏதாவது உதவி...

இங் : சரி புறப்படு. அந்த நரிப் பயலுக்கு முன்பாக வேங்கை மலைக்கோட்டைக்கு நாம் குறுக்கு வழியில் போகவேண்டும்...வா!

இந்திரஜித்தும் மன்மதனும் குதிரையில் போகிறார்கள்.

மன் : அண்ணேன்! இந்நேரம் அந்தப் பய பாதி தூரம் தான் வந்துக்கிட்டு இருப்பான். அதுக்குள்ளே நாம்ப காரியத்தை சாதிச்சுக்கணும். இப்ப நீ என்ன செய்யலாமுன்னு நினைக்கிறே?

இங் : அதையெல்லாம் வரும் போதே யோசனை செய்துதான் வந்திருக்கேன்...

மன் : என்னண்ணேன் அது?

இங் : நான் உயிரோடு இருந்தால் தாத்தா மருதவாணர் எப்படியும் என்னைத்தான் மன்னனாக்குவார்.

மன் : ஆக்கட்டுமே!

இங் : சீ, முட்டாள்! அண்ணனுக்காக காத்துக்கொண்டு ஒரு குழந்தையோடு அண்ணியார் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பார்கள்! நானோ ஒண்டிக்கட்டை! அவர்கள் சுகமாக இருக்கவேண்டுமானால் நான் சாகவேண்டுமடா, சாகவேண்டும்!

மன் : அண்ணே! கொஞ்சம் இந்த மரமண்டைக்குப் புரியறாப் போலத்தான் சொல்லிக்கிட்டுப் போயேன்!

இங் : பேசிக்கொண்டிருப்பதற்கு நேரமில்லை. அண்ணன் இன்பசாகரனை சிப்பாய் ஒருவன் அழைத்துவருவான், என் உடைகளோடு! அவரை பத்திரமாக செல்வபுரி கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும். என்ன தெரிகிறதா?

மன்: அப்படியே!

இந் : (திரும்பி) நானு (சிரித்து) எனக்கு வேலே இருக்கிறதப்பா, தலே போகிறவேலே!

மன்மதன் விழிக்கிருன்.

மன் : எனக்குத் தெரியாம அப்படியென்ன தலே போகிற வேலே? ஆ...?

இந்திரஜித் விர்ரென்று வேகமாக கோட்டைக்குள் நுழைகிருன்.

சிய் : டேய்...டேய்... நில்லு... மனுஷன் நிக்கிறது கண்ணு தெரியலே? யார் நீ? எங்க போறே?

இந் : ஹ்ும்! நம்ப அதிகாரி இல்லே அதிகாரி...

சிப் : ஆமா. அம்பலவாணரு!

இந் : ஆமா. அம்பலவாணரு அம்பலவாணரு! நான் அவரோட மச்சான்யா, அவரை உடனே பார்த்தாகணும்.

சிப் : (சலாம் செய்கிருன்) அடடே...இதை நீங்க முந்தியே சொல்லியிருக்க கூடாது? போயிட்டு வாங்க...போங்க.

அதிகாரி உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருக்கிருன். இந்திரஜித் நுழைகிருன்.

அதி : யார் நீ?

இந்திரஜித் தன் பணப்பையை அவன் முன் காட்டுகிருன்.

இந் : அத்தனையும் பவுன்! மொத்தம் ஆயிரம் இருக்கிறது!

அதி : ஆ...ஆயிரம் பொன்களா?

இந் : ஆமாம்; நான் சொல்ற மாதிரி நீ செய்து முடித்தால் இது அத்தனையும் உனக்குச் சொந்தமாயிடும்.

அதி : அப்படியா? என்ன செய்யணும்? என்னசெய்யணும்? சொல்லுங்க. சொல்லுங்க சீக்கிரம்.

இந் : சமீபத்தில் இங்கே ஒரு குருட்டுக் கைதி வந்தாரல்லவா?

அதி : ஆமாம்.

இந் : பாவம், அவர் தகப்பன் சாகக் கிடக்கிருர். இறுதிக் காலத்தில் கடைசி தடவையா பையனே ஒரு தடவை பார்க்க விரும்புகிருர். ஒரு நாளைக்கு அவனை அங்கே போய்வர அனுமதிக்க வேண்டும்.

அதி : அய்யய்யோ! நான் மாட்டேன். அவனைச் சுட்டுக் கொல்வதற்கு எந்த விநாடியும் உத்தரவு வரலாம், ஊஹ்ும்.

இந் : ஐயோ! பாவம்...ஒரே ஒருநாள் தானய்யா! அதற்குள் ஒண்ணும் நடந்திடாது. என்ன சொல்கிருய்?

அதி : ஊஹ்ும்......முடியாதய்யா, முடியாது. உன் பேச்சைக் கேட்டா என் தலே என் உடம்பில் தங்காதய்யா! தாங்காதய்யா!

அதிகாரி எழுந்து போகிருன். இந்திரஜித் அவனைத் தொடர்ந்து போகிருன்.

இந் : அப்படியானல் இந்த ஆயிரம் பொன் உனக்கு வேண்டாமா? நீ எந்தக் காலத்திலே இத்தனை பொன்னும் ஒண்ணு சேத்து பாக்கப்போறே? நல்லா யோசித்துப் பாரு. அவன் ஒரே ஒரு நாளில் திரும்பி வந்து விடுவான்...

அதி : அப்படி அவன் திரும்ப வராமே போனல்...?

இந் : அவன் திரும்பி வருகிற வரைக்கும் அவனுக்குப் பதிலாக நான் இருக்கிறேன் சிறைச்சாலேயில்.

அதி : என்ன, நீ இருக்கிருயா? அதுக்குள்ளே சுட்டுக் கொல்றதுக்கு உத்தரவு வந்துட்டா? உன் பாடு?

இந் : அதைப் பார்த்தால் முடியுமா? அந்தப் பெரியவர் இப்பவோ பிறகோன்னு இருக்கு. கடைசி நேரத்திலேயாவது அவர் மனசைச் சாந்திப்படுத்த வேண்டாமா?

அதி : சரி, அப்ப நீ போயிட்டு அந்தி சாஞ்சதும் வந்துடு!... ஹ்ும்? அதுக்குள்ளே என் ஆட்களையும் சரிப்படுத்தி வைக்கிறேன். உம்...போ...போ.

பணப்பையை அதிகாரியிடம் கொடுக்கிருன் இந்திரஜித்.

காட்சி 14

உன் வாழ்வில் உதயசூரியன்

பூங்கொடி குடிசையின் முன்னால் சேலையை உலர்த்திக்கொண்டிருக்க இந்திரஜித் அங்கு வருகிறான்.

இந் : அம்மா! குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கிறீர்களா?

பூங்கொடி திரும்புகிறாள்.

இந் : பூங்கொடி....நீயா!

பூங் : இந்திரஜித்! இன்னமும் நீங்கள் பழி வாங்கும் நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள்.

இந் : தவறு பூங்கொடி! தவறு! ஒரு சமயத்தில் நான் தணல்போல இருந்தது உண்மைதான்; ஆனால் இன்று தண்ணீராக மாறிவிட்டேன். வெறிபிடித்த வேங்கையாக வாழ்ந்தது உண்மைதான். ஆனால் இன்று வெள்ளாடுபோல் சாந்த சொரூபியாக மாறிவிட்டேன். பூங்கொடி, என்னை நம்பு.

பூங் : உண்மையாகவா இந்திரஜித்?

இந் : அய்யோ! இன்னுமா உனக்கு சந்தேகம்? பூங்கொடி! இந்த இந்திரஜித்தின் பொன்மயமான இலங்காபுரியிலே பொருமைத் தீ அல்ல — காலமெனும் குரங்குமூட்டிய சந்தர்ப்பம் என்னும் காட்டுத்தீ பிடித்துக்கொண்டது உண்மைதான். அந்தத் தீயிலே காதல் எனும் காயா மலர் கருகிச் சாம்பலாயிற்று. அரசப் பதவி எனும் அல்லி மலர் பற்றி எரிந்து பஸ்மமாயிற்று ஆனால், இன்னும் அசோகவனம் மட்டும் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கிறது. அந்த அன்பு வனத்தில் இருந்து கொண்டுதான் பேசுகிறேன். நான் திருந்தி விட்டேன். நான் திருந்தி விட்டேன். என்னை மன்னித்துவிடு. ஏன் அழுகிறாய்? எதை நினைத்து அழுகிறாய்? உனக்குத் தெரியாமலே என் இதயத்தைச் செதில் செதிலாகப் பிளந்தெறிந்த உன் பேரழகை நினைந்தா? அல்லது, எனக்குக் கொடுப்பதற்கு இல்லாமல் உன்னிடம் ஒரே ஒரு இதயம்தானே இருக்கிறது என்ற இயற்கையின் படைப்பை நினைத்தா? அழாதே! பூங்கொடி! அழாதே! நான் அதை எல்லாம் மறந்துவிட்டேன். உனக்காகவும் உன் கணவருக்காகவும் தருவதற்கு அந்தப் பாழாய்ப் போன ஆண்டவன் எனக்கு ஒரே ஒரு உயிரைத்தானே தந்திருக்கிறான் என்றுதான் கவலைப்படுகிறேன் பூங்கொடி!

பூங் : நீங்கள் எதையோ மறைத்துப் பேசுகிறீர்கள்!

இந் : எதையும் மறைத்துப் பேசவில்லை. அடுத்த ஜன்மத்திலாவது உன்னை அடையலாம் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை. ஆனால் உன்னை அண்ணியாகப் பெற்றேனே என்ற ஆனந்தத்தால் பேசுகிறேன். நீ வாழ்க! அண்ணன் வாழ்க!

பூங் : இந்திரஜித்!...

இந் : அவசரப்படாதே! நாளை சூரியோதயம் உங்கள் புனர்வாழ்வின் மறுஉதயம்! திகைக்காதே! நாளைக்குக் காலையில் கீழ்வானத்தைப் பார். பிறகு உன் பக்கத்திலே பார். உன் வாழ்வில் உதய சூரியன் உதித்திடுவான். பூங்கொடி, நான் வருகிறேன்.

பூங் : நில்லுங்கள்! எங்கே போகிறீர்கள்?

இந் : யாருமே திரும்பி வரமுடியாத இடத்துக்குப் போகிறேன். எல்லோரையும் போலவேதான் இந்திரஜித் அழுது கொண்டே பிறந்தான்; அழுது கொண்டே வாழ்ந்தான். ஆனால் உலகத்திற்கே புதுமையான அவன் சிரித்துக் கொண்டே சாகப் போகிறான் பூங்கொடி, சிரித்துக் கொண்டே சாகப் போகிறான்.

இந்திரஜித் போகிறான். பூங்கொடி புரியாமல் நிற்கிறாள்.

காட்சி 15

என்னை மன்னித்துவிடு அண்ணா!

இன்பசாகரன் சிறைச்சாலையின் ஒரு மூலையில் சாய்ந்து கொண்டிருக்கிறான். இந்திரஜித்தும் ஒரு காவலாளியும் வருகிறார்கள். "பிறகு வா" என்று இந்திரஜித் ஜாடை காட்ட அவன் கதவை சாத்திவிட்டு போகிறான். அந்தச் சப்தம் கேட்டு இன்பசாகரன் எழுந்திருக்கிறான்.

இன் : யாரது?

இந் : **(குரலை மாற்றிக்கொண்டு)** உஸ் சப்தம் போடாதே. நான் உனது நண்பன்.

இன் : பெயர்?

இந் : பரோபகாரிகள் மறந்தும் தங்கள் பெயரைச் சொல்லமாட்டார்கள்?

இன் : அப்படி என்ன உபகாரம் செய்யப் போகிறாய் நீ?

இந் : உன்னை தப்புவிக்கப் போகிறேன். என் உடைகளை அணிந்து கொண்டால் இந்தக் கோட்டைக்கு வெளியே செல்லலாம்! அங்கே உன்னை எதிர்ப்பார்த்து அழுது அழுது, விழிகளை வீங்கவைத்துக் கொண்டிருக்கும் உன் மனைவியைச் சந்திக்கலாம்! அதே நேரம் குழல் வெல்லும் உன் குழந்தையின் அழகு மழலையைக் கேட்கலாம். பிறகு இன்பம்! இன்பம்! என்ன சொல்கிறாய்?

இன் : பிறகு உன் கதி?

இந் : என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம். உனக்கு விடுதலை.

இன் : வேண்டாம்... எப்படியோ ஒரு உயிர் போகப் போகிறது. அது உன் உயிராக இருந்தால் என்ன அல்லது என் உயிராக இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதானே! நண்பனே என்னை மன்னித்துவிடு! உன் உதவியை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை.

இன்பசாகரன் வேறு இடத்துக்கு போகிறான்.

இந் : நண்பா! நான் யாரோ என்று எண்ணிக்கொண்டு இப்படிப் பேசுகிறாய்—உனக்கு நேராகக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது உன் அருமைத் தம்பி என்று ஒரு கணம் எண்ணிக் கொள்... அப்போதுகூட அவன் அன்புக் கட்டளைக்குப் பணிய மாட்டாயா?

இன் : ஹூம்... என் தம்பி!... நீ அவனாக இருந்தால் உன்னைச் சாகசொல்லமாட்டேன்! வாழச் சொல்லுவேன்! ஏனென்றால் அவன் ஆளப்பிறந்தவனய்யா, ஆளப்பிறந்தவன்!

இந் : இன்பசாகரா! நேரம் ஓடுகிறது! உன் உடைகளைக் களைந்துவிட்டு என்னுடையவைகளை அணிந்துகொள்... உம்.

இந்திரஜித் அவன் சட்டைகளைக் கழற்றப்போகிறான்.

இன் : தொடாதே, என்னை! நீ யாரென்று கூறாத வரையில் உன் கோரிக்கைக்கு நான் இணங்கவே மாட்டேன்!

இந் : அண்ணா! அண்ணா என்னை மன்னித்துவிடண்ணா!

பக்கத்திலிருக்கும் முக்காலியால் அவன் தலையில் அடிக்கிறான். "அய்யோ" என்று இன்பசாகரன் சாய்கிறான். பிறகு, அவசர அவசரமாக அவன் உடைகளைக் களைகிறான் இந்திரஜித். இப்போது இந்திரஜித் இன்பசாகரன் உடையில் இருக்கிறான். அதிகாரியும் சிப்பாயும் வருகின்றனர்.

அதி : என்னய்யா இது?

இந் : ஒண்ணுமில்லைங்க; திடீர் செய்தி கேட்டு அப்படியே மயக்கம் போட்டு விழுந்திட்டான். இவனைத் தூக்கிட்டு போய் வெளியிலே மன்மதன்னு ஒருத்தன் இருப்பான். அவன் கிட்ட ஒப்படைச்சுடுங்க.

அதி : ஏய் உம்!

சிப்பாய் சிறையுள் சென்று இன்பசாகரனை தூக்கிக் கொண்டு வெளியே வருகிறான், அதிகாரி சிறைக்கதவை மூடுகிறான்.

காட்சி 16

தலைகொடுத்தான் தம்பி!

மன்மதனுடன் இன்பசாகரன் தப்பிச் செல்லும்போது அவன் பார்வை மீண்டு விடுகிறது. எதிரே மன்னர் மருதவாணர் வருகிறார். விவரமறிந்து யாவரும் கோட்டைக்கு விரைகின்றனர். ஆனால் அதற்குள் எல்லாம் முடிந்து விடுகிறது. இந்திரஜித் சுடப்பட்டுக் கீழே உருண்டு விழுகிறான். இன்பசாகரன் ''தம்பீ!'' என்று கதறியபடி அவனிடம் ஓடுகிறான்.

இன்: தம்பி....தம்பி....தம்பி— இவ்வளவு சீக்கிரத்தில் நீ என்னை விட்டுப் போய்விடுவாய் என்று நான் நினைக்கவே யில்லையேடா! தம்பி...தம்பி...அன்று பொதிகை மலைச் சுரங்கத்திலே நீ யாரோ நான் யாரோ என்று இருந்தபோது என் அருகிலேயே இருந்தாயே! இன்று உன்னை தம்பி என்று அடையாளம் தெரிந்து கொண்டபோது ஏனடா என்னை விட்டுஓடிவிட்டாய்?..தம்பி..தம்பி என் செல்வமே! உன்னை சிம்மாசனத்தில் உட்கார வைத்து செல்வபுரி சக்ரவர்த்தியாக நாடெங்கும் ஊர்வலம் நடத்த வேண்டுமென்று அருமையான கனவு கண்டேனே! அய்யோ! தம்பி...தம்பி! இன்று உன் சவத்தை யல்லவா ஊர்வலமாகக் கொண்டு போகும் நிலைமை ஏற்பட்டு விட்டது! அய்யோ தம்பி!

89692

இந்திரஜித்தின் தலையை தன் மார்போடு சேர்த்துக் கதறுகிறான் இன்பசாகரன். மெதுவாக இந்திரஜித்தைக் கீழே படுக்கவைத்து, மெதுவாக எழுந்து நிற்கிறான்.

இன்: ஆம்! ஆம்! எல்லாவற்றிற்கும் நான்தான் காரணம். உனக்குச் சேரவேண்டிய மகுடத்தை அபகரித்துக்கொண்டவன் நான்தான்! நாடாள வேண்டிய உன்னை நாய்போல அலைய விட்டவன் நான்தான். தம்பி! உனக்குத் துரோகம் செய்துவிட்டேன்! துரோகம் செய்துவிட்டேன்!

600 008.

ஆம்! ஆம்! இனிமேல் நான் வா கூடாது. வாழக்கூடாது!

இன்பசாகரன் அருகேயுள்ள சிப்பாயிடம் சென்று அவன் வா உருவி எடுக்கிறான். பூங்கொ வருகிறாள். அவள் இன்பசாகரனி ஓடி அவனைத் தடுக்கிறாள்.

பூங்: அத்தான் அத்தான்!

இன்: பூங்கொடி! என்னை தடுக்காதே!

பூங்: அத்தான்!

இன்: பூங்கொடி என்னை தடுக்காதே!

இந்த விசித்திரமான சூழ்நி யில் நடக்கும் சம்பவங்களை கண்ட மருதவாணர் திகைத்து போய்விடுகிறார். அவர் ஒரு தீ மானத்துக்கு வருகிறார். நேரா இன்பசாகரனிடம் போகிறார்.

மரு: இன்பசாகரா! என்ன இதெல்லாம்? உனக்கென்ன பைத்தியமா?

இன்: மகாராஜா! என்னை என்னச் செய்யச்சொல்கிறீர்கள் என் தம்பிக்காகத்தான் உயி வாழ்ந்தேன். இனி அவனில்லாத உலகில் எனக்கு என்ன வேலையிருக்கிறது?

மரு: இன்பசாகரா! நீ சா வேண்டுமென்பது இந்திரஜி தின் விருப்பமல்ல. நீ பூங்கொடியுடன் இனிது வாழவேண்டுமென்பதற்காகத் தன் தலை கொடுத்தான் தம்பி. இந்தத் தியா சீலனுக்கு தக்க மரியாதை செ வோம் வா.

அண்ணனையும் அப்பனையும் கொல்ல வந்து, அப்பனையும் இழந்து, அன்புச் சகோதரனை சந்தித்து அவனுக்காக உயிர்ந் உத்தமனான இந்திரஜித்தின் சமா முன் யாவரும் வணக்கம் செலுத்தின்றனர்.